www.padippakam.com

ஜூலை 2004

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



## காவிரி: தொடரும் துரோகம்

## இந்துத்துவா – பா.ஜ.க. பாசிசப் பிணைப்பு



படிப்பகம்

www.padippakam.com

# கவுண்டர் சாதிவெறியர்களின் காலாட்படையாக கோவை போலீசு

கடந்த ஜூன் மாதம் புதிய ஜனநாயகம் இதழில் "காளப் பட்டி: தேர்தல் புறக்கணிப்புக்கு சர்வ கட்சி சாதிவெறியர்களின் தாக்குதல்" என்று செய்தி வெளியிட்டிருந்தோம். அதன் தொடர்ச்சியாக கோவை மக்கள் கலை இலக்கியக் கழகம், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆகிய அமைப்புகள் இணைந்து, காளப்பட்டி ஆதிக்கசாதி வெறியாட்டத்தைக் கண் டித்து 31.5.04 அன்று கோவையில், கணபதி 3-ஆம் எண் பேருந்து நிலையத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

இதையொட்டி, அமைப்புகள் வெளியிட்ட விரிவான பிரசு ரத்தில், "காளப்பட்டி சேரி குடிசைகள் எரிகிறது! இந்து ஒற்றுமை நாறுகிறது" என்ற தலைப்பில், "அரியானாவில் செத்த மாட்டை உரித்ததற்காக தாழ்த்தப்பட்ட வர்களை அடித்துக் கொன்ற ஆர்.எஸ்.எஸ். கும்பலே! காளப் பட்டியில் தாழ்த்தப்பட்டவர்க ளின் பசு மாட்டை பெட்ரோல் ஊற்றி எரித்த இந்து கவுண்டர் களை என்ன செய்யப் போகி றாய்? ராமர் கோயிலுக்காக மசூ தியை இடித்த ஆர்.எஸ்.எஸ். கும்பலே, காளப்பட்டியில் பட் டத்தரசியம்மன் கோயிலை இடித்த இந்து கவுண்டர்களை என்ன செய்யப் போகிறாய்?" என்று கேள்வி எழுப்பியது. 31.5.04 அன்று, போலீசு தடையை மீறி நடந்த ஆர்ப்பாட்டத்தில் பெண்கள், குழந்தைகள் உள்பட 64 பேர் கைது செய்யப்பட்டனர்.

ஆர்ப்பாட்டத்திற்கு சுவரொட்டி ஒட்டிய தோழர் குமார் என்ப வரை சரவணம்பட்டி போலீசு கைது செய்தது. போலீசு நிலையத் தில் வைத்து குமாரைச் சரமாரியாகத் தாக்கியது.

ஏற்கெனவே இந்து மதவெறியர்களின் அடியாட்களாக செயல்படும் கோவை நகர போலீசு, இப்போது, கவுண்டர் சாதி வெறியர்களின் காலாட் படையாக இயங்கியது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதரவாகப் போராடும் புரட்சிகர - ஜனநாயக இயக் கங்களின் மீதான "போலீசின் கொட்டடி வெறியாட்டத்தைக் கண்டித்து" புரட்சிகர அமைப்பு கள் மக்கள் மத்தியில் மீண்டும் பிரச்சாரத்தை மேற்கொண் டன.

இதன் தொடர்ச்சியாக கோவை மாவட்ட ம.க.இ.க., பு.ஜ.தொ.மு. மற்றும் பு.மா.இ.மு. அமைப்புகள் இணைந்து 10.6.04 அன்று கோவை செஞ்சிலுவை சங்கக் கட்டிடம் அருகே போலீசு அடக் குமுறையை எதிர்த்து ஆர்ப்பாட் டம் நடத்தின.

தடையை மீறி ஆர்ப்பாட்டம் செய்ததற்காகக் கைது செய்யப்படும் தோழர்கள்.



—ம.க.இ.க., பு.ஜ.தொ.மு., கோவை.

# விதை வியாபாரிகளின் மோசடி விவசாயிகள் பரிதவிப்பு

விழுப்புரம் மாவட்டம், முகையூர் வட்டாரம் முழுவதுமே வானம் பார்த்த பூமி! மக்கள் மானாவாரி விவசாயத்தை மட்டுமே நம்பி காலம் தள்ளுகின்றனர். நடுத்தர விவசாயிகள் கடன்பட்டு கிணறு வெட்டினாலும் நீர் ஊற்று கிடைக்காது.

எனவே, இப்பகுதி விவசாயிகள் மானாவாரி பயிருக்கு ஏற்ற வாறு சூரியகாந்தி பயிர் செய்தனர். ஏக்கருக்கு ரூபாய் 4,000 செலவு செய்து 475 ஏக்கருக்கு மேல் 10-க்கும் மேற்பட்ட கிராமங் களில் சூரியகாந்தியைப் பயிரிட்டுவிட்டு அறுவடையை எதிர் நோக்கிக் காத்திருந்தனர்.

விவசாயிகளின் தலையில் இடிவிழுந்த மாதிரி, சூரியகாந்தி கடைசிவரை சூல் கொள்ளாமல், விதையே இல்லாமல் வெறும் செடிகளாகப் பயனற்று நின்றது.

தரமான விதை, ஏக்கருக்கு ரூபாய் 20 ஆயிரம் இலாபம் - என்று விவசாயிகளை ஏமாற்றிய பெங்களூரைச் சேர்ந்த "தான்யா" என்ற வீரிய விதை நிறுவனம் இப்போது மௌனம் சாதிக்கின்றது.

பாதிக்கப்பட்ட விவசாயி கள், மாவட்ட ஆட்சியர், காவல் துறை, வேளாண் துறை மற்றும் நுகர்வோர் நீதிமன்றம் என்று பந் தாடப்பட்டனர்.

ஏற்கெனவே போலி விதை, பயனற்ற விவசாயம் என்று பணத்தை இழந்த விவசா யிகள் மோசடி விதைப் பண் ணைகளுக்கு எதிராக வழக்குத் தொடரவும் வழியின்றி வாடுகின்றனர்.

இந்நிலையில் விழுப்புரம் மாவட்டம் கானை வட்ட விவசா யிகள் விடுதலை முன்னணி, விவசாயிகளுக்கு ஆதரவாக போராட்டத்தில் இறங்கியது. விவசாயிகளைப் பகடைக் காய் களாக்கிக் கொட்டமடிக்கும் கும்பல்களை எச்சரிக்கை செய்தது. "தமிழக அரசே! முகையூர் வட்டத்தில் போலி விதைகளைப் பயி ரிட்டு கோடிக்கணக்கில் நட்டமடைந்த விவசாயிகளுக்கு உடனே நட்டஈடு வழங்கு!

"போலி விதைகளை விற்றுக் கொள்ளையடித்த விழுப்புரம் சரவணா, பாக்கியலட்சுமி பண்ணைகளை இழுத்து மூடு - குண் டர்சட்டத்தில் சிறையிலடை!

"விவசாயிகளுக்கு பொறுப்பான பதில் கூறாமல் இழுத்தடிக் கும் அதிகாரிகளைப் பதவிநீக்கம் செய்!" - என்று அப்பகுதி முழுக்க சுவரொட்டி பிரச்சாரத்தை மேற்கொண்டது.

பாதிக்கப்பட்ட விவசாயிகள், "இம்மாதிரியான ஆக்கப்பூர்வ மான ஆதரவையும் வழிகாட்டு தலையும் எந்த ஓட்டுக்கட்சிக ளும் எங்களுக்கு வழங்க வில்லை" என்று உத்வேகம டைந்தனர். இதைக் கண்டு பீதி யடைந்த போலி விதைகளை விற்ற சரவணா பண்ணை, "பேசித் தீர்த்துக் கொள்வோம்" என்று விவசாயிகளைப் பிரிக்க எத்தணித்து மூக்கறுபட்டது.

சூல் கொள்ளாமல் சாவியாகிப் போன சூரியகாந்தி பயிர்.



-வி.வி.மு, கானை வட்டம்.



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 19

## இதழ் 9

ஜூலை 2004

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

**அட்டை ஓவியம்:**
**முகிலன்**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை-600 024.


# *காவிரி:* தொடரும் துரோகமும் வஞ்சகமும்

**கா**விரிப் பிரச்சினையில் என்னதான் நடக்கிறது என்பது குறித்து, தமிழகத்தின் ''வில்லன்'' பொறுப்பேற்றிருக்கும் கர்நாடக முதலமைச்சர் தரம்சிங் உண்மை பேசுகிறார். தமிழக மக்களின் ''கதாநாயகன்'' வேடம் போட்டிருக்கும் கருணாநிதியும் துணை நடிகர் ராமதாசும் பொய் பேசுகின்றனர். இந்த மாதம் தண்ணீர் கர்நாடகத்தில் இருந்து மேட்டூர் அணைக்கு ஒரு 10 டி.எம்.சி. காவிரியில் வந்திருக்கிறது. இது ''பிரதமரின் பரிந்துரையை ஏற்றோ, தமிழகத்தின் மீதான நல்லெண்ண நடவடிக்கையாகவோ கர்நாடக அரசு தண்ணீரைத் திறந்து விட்டதால் வந்தது அல்ல; கபினி ஆற்றில் பெருக்கெடுத்த வெள்ளத்தில் இருந்து, கபினி அணையைப் பாதுகாப்பதற்காகத் திறந்துவிடப்பட்டதுதான்'' என்று கர்நாடக முதல் மந்திரி கூறியிருக்கிறார். கருணாநிதிக்கு இந்த உண்மை தெரியும். தெரிந்தும் தானும் தனது கூட்டாளிகளும் கேட்டுக் கொண்டதற்கு இணங்கி காவிரியில் தண்ணீரைத் திறந்து விடும்படி கர்நாடக அரசைப் பணித்ததற்காக பிரதமர் மன்மோகன் சிங்குக்கும், காங்கிரசுத் தலைவர் சோனியா காந்திக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கிறார், கருணாநிதி. இதற்கு பா.ம.க. தலைவர் இராமதாசு ஒத்தூதவும் செய்கிறார். இதைத் தான் மட்டும் சாதித்துவிடவில்லை என்று தன்னடக்கம் வேறு காட்டுகிறார் கருணாநிதி.

கர்நாடகாவில் பெய்த திடீர் மழையால் திறந்து விடப்பட்ட தண்ணீர் மேட்டூர் வந்து, நீர்மட்டம் கொஞ்சம் உயர்ந்ததும் காவிரி பாசனப் பகுதி விவசாயிகளிடையே நம்பிக்கை துளிர்விட்டது. இப்போது நீர்வரத்தும் தடுக்கப்பட்டு, துளிர்விட்ட நம்பிக்கையும் பட்டுப் போய் விட்டது. இனி, இயற்கைத் தாயின் தயவினால் கர்நாடக அணைகள் நிரம்பினால்தான் விடிவு என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டனர். காவிரிப் பிரச்சினையில் இன்றைய இந்தத் துயர நிலைக்கு காவிரி நடுவர் மன்றத்தின் பரிந்துரைகளையோ, காவிரி நதிநீர் கட்டுப்பாட்டு ஆணையத்தின் பரிந்துரைகளையோ, பிரதமரின் தலைமையிலான காவிரி நதி நீர் அதிகார அமைப்பின் முடிவுகளையோ, உச்சநீதி மன்றத்தின் தீர்ப்புகளையோ, எதையுமே கொஞ்சமும் மதிக்க முடியாது என்ற கர்நாடகத்தின் அடாவடித்தனம் மட்டுமே காரணமில்லை.

இவற்றை அமலாக்கும்படி கர்நாடக அரசை நிர்ப்பந்திக்கவும், மீறினால் தண்டிக்கவும் அதிகாரம் கொண்ட மத்திய அரசின் ஒருதலைப்பட்சமான வஞ்சகம் இன்னொரு காரணமாக உள்ளது. தனது உத்திரவுப்படி பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்த மறுக்கும் மாநிலங்களுக்கு நிதியளிக்க முடியாது என்று மத்திய அரசு மிரட்டவில்லையா? தனது பரிந்துரையின்படி, கல்வி பாடத்திட்டங்களில் சுற்றுச் சூழல் படிப்பைப் புகுத்தவில்லை என்பதற்காக, மாநிலங்களின் தலைமைச் செயலர்களை வரவைத்து மன்னிப்பு கோரும்படி உச்சநீதி மன்றம் நிர்ப்பந்திக்கவில்லையா? தமிழகத்தை, குறிப்பாக காவிரி பாசனப்பகுதி விவசாயிகளைப் பொருத்தவரை வாழ்வா, சாவா என்ற காவிரிப் பிரச்சினையில் இத்தகைய உறுதியை மத்திய அரசோ, உச்சநீதி மன்றமோ காட்டாதது ஏன்? நயவஞ்சகம் தவிர வேறென்ன? தமிழகத்திலுள்ள குறிப்பிடத் தகுந்த ஓட்டுக் கட்சிகள் எல்லாம் கருணாநிதியின் தி.மு.க. தலைமயில் ஒரு அணியாகவும், ஜெயலலிதா தலைமையில் மற்றொரு அணியாகவும் நிற்கின்றன. இந்தக் கட்சிகள் எல்லாமுமே மத்தியிலோ, மாநிலத்திலோ ஆட்சிப் பொறுப்பில் பங்கேற்றுள்ளன; அல்லது ஆட்சியாளர்களை ஆதரிக்கின்றன. இந்த அடிப்படையில் காவிரியில் தமிழகத்தின் உரிமையை இவை நிலைநாட்டத் தவறி துரோகமிழைத்துள்ளன: பொறுப்பைக் கைவிட்டு ஒருவர் மீது ஒருவர் பழிபோட்டுத் தட்டிக் கழிக்கின்றன.

தொடர்ந்து மூன்றாண்டுகளாக காவிரி வறண்டு கிடக்கிறது. பஞ்சம் - பட்டினியால் விவசாயிகள் எலிக்கறி தின்று பிழைக்கிறார்கள், அதற்கும் வழியின்றி தற்கொலை செய்து கொண்டு சாகிறார்கள். காவிரியில் ஆண்டுக்கு 205 டி.எம்.சி. தண்ணீர் விட வேண்டுமென்ற நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பும் இருக்கிறது; கர்நாடக அணைகளில் நீரின்றிப் போகவும் இல்லை; ஆனாலும் ஆனாலும் சொட்டுத் தண்ணீர் கூட விடமுடியாது என்று கர்நாடகம் மறுக்கிறது; காவிரியில் தமிழகத்தின் உரிமையைப் பெறுவதற்கு உடனடி வழி என்னவென்று கேட்டால், ''அகில இந்திய நதிகளை இணைப்போம்'' என்று கூறித் ரஜினி முதல் அப்துல்கலாம் வரையிலான பிழைப்புவாதிகள் திசைதிருப்பும் இன்னொரு நயவஞ்சக நாடகம் நடத்துகிறார்கள். அமலாக்கும் அதிகாரம் கொண்ட மத்திய அரசும், உச்சநீதி மன்றமுமே வெறும் பார்வையாளர்களாக ஒதுங்கிக் கொள்ளும் போது, எந்த அதிகாரமும் இல்லாத ''தமிழக - கர்நாடக விவசாயிகளின் கூட்டமைப்பு'' முயற்சி எடுத்து காவிரிப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடும் என்று நம்பச் சொல்லுகின்றது, அரசியலற்ற படிப்பாளிகளின்

தொடர்ச்சி 17-ஆம் பக்கம்

www.padippakam.com

## பா.ஜ.க. / ஆர்.எஸ்.எஸ். முடிவு:

# "இனி, பகிரங்கமான பாசிசம்தான்!"

நாடாளுமன்றத் தேர்தலுக்குச் சில மாதங்கள் முன்னதாக மத்தியப் பிரதேசம், சட்டீஸ்கர், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் நடந்த சட்டமன்றத் தேர்தலில் காங்கிரசு ஆட்சிகளை வீழ்த்தி பா.ஜ.க. அதிகாரத்துக்கு வந்தது. இதிலிருந்து காங்கிரசு சகாப்தம் முடிந்துவிட்டது. இனி இந்துத்துவா சகாப்தம் தொடங்கப் போகிறது என்று அத்வானி உள்ளிட்டு இந்துவெறி பாசிஸ்டுகள் உற்சாகமடைந்தனர். குஜராத்தில் மிகப் பெரிய இனப்படுகொலை நடந்து உலகமே அதைக் கண்டித்த பின்னரும் அங்கே மோடி தலைமையில் பா.ஜ.க. வெற்றி பெற்றிருப்பதும், அதைத் தொடர்ந்து மூன்று மாநிலங்களில் கிடைத்த வெற்றியும் அவர்களை நம்பிக்கை கொள்ள வைத்தது. வாஜ்பேயி ஆட்சியின் சாதனைகள் பற்றி நடுத்தர வர்க்கமும் மயக்கத்தில் இருப்பதால் சூட்டோடு சூடாக அனைத்து இந்தியாவுக்கும் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தினால் தாமே தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்து விடலாம் என்று கணக்குப் போட்டு காரியத்தில் இறங்கினர். இதுவரை இல்லாத அளவில் முதன்முறையாக இந்துவெறி ஆர்.எஸ்.எஸ். கும்பலும் அதன் அனைத்து பரிவாரங்களும் மும்முரமாக தேர்தல் வேலைகளைச் செய்தன.

ஆனால் அவர்களே எதிர்பார்த்திராத வகையில், நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வும் அதன் கூட்டணிக் கட்சிகளும் படுதோல்வியடைந்தன. தேர்தல் தோல்விக்கு யார் மீது பழிபோடலாம் என்று சங்கப் பரிவாரங்களும் அவற்றிலுள்ள அதிருப்தி குழுக்களும் காரணத்தைத் தேடிக் கொண்டிருந்த நிலையில், தேர்தல் தோல்விக்கு குஜராத் கலவரமும் ஒரு காரணம்; குஜராத் முதல்வர் மோடியைப் பதவியிலிருந்து நீக்க வேண்டும் என்ற குண்டைத் தூக்கிப் போட்டார், வாஜ்பேயி. அது பற்றியெரிந்து வெடிப்பதற்கு முன்னரே, மோடியின் அதிருப்தியாளர்கள் தவிர ஒட்டுமொத்த பா.ஜ.க.வுமே மோடிக்கு ஆதரவாக அணிதிரண்டு வாஜ்பேயியைத் தனிமைப்படுத்தின. போதாக்குறைக்கு ஆர்.எஸ்.எஸ்.-ம், விசுவ இந்து பரிசத்தும் மோடிக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தன. வாஜ்பேயி அரசியல் சந்நியாசம் பெறுவதில் தவறேதுமில்லை என்று வி.இ.ப. தலைவர் கிரிராஜ்கிஷோர் வெளிப்படையாகச் சாடினார். பா.ஜ.க.வின் கூட்டாளியான இந்துவெறி சிவசேனா தலைவர் பால்தாக்கரே கூட, மோடியை ஏன் மாற்ற வேண்டும் என்று உறுமினார்.

இத்தனை எதிர்ப்புகளைக் கண்டு ஆடிப்போன வாஜ்பேயி, ''மோடி விவகாரம் முடிந்துபோன விசயம்'' என்று குட்டிக்கரணம் அடித்தார். மோடியைத் தாக்குவதன் மூலம் தான் ஒரு மிதவாதத் தலைவர் என்ற மாயையை நிலைநாட்டி தனது பெருமையைத் தக்கவைத்துக் கொள்ளலாம் என்று வாஜ்பேயி போட்ட கணக்கு புஸ்வாணமாகிவிட்டது. மிதவாத முகமூடியெல்லாம் இனி மேல் எடுபடாது; இந்துவெறி பாசிசப் பரிவாரங்கள் இல்லாமல் தேர்தல் வெற்றியைச் சாதிக்கவும் முடியாது என்று அவர் எச்சரிக்கப்பட்டுள்ளார்.

மும்பையில் நடந்த பா.ஜ.க.- வின் தேசிய செயற்குழு கூட்டம், வாஜ்பேயியின் தனிப்பட்ட கருத்துக்களை நிராகரித்து முடக்கியதோடு, வெளிப்படையாகவே தனது இந்துத்துவ பாசிசப் பிணைப்பை அறிவித்துள்ளது. மோடியின் இந்துவெறி பாசிச பயங்கரவாத வெறியாட்டத்துக்கு ஆதரவும் அங்கீகாரமும் அளித்துள்ளது. இக்கூட்டத்தில், இந்துத்துவப் பாதையிலிருந்து விலகியதால்தான் தேர்தலில் தோல்வியைத் தழுவினோம் என்று வெங்கைய நாயுடு முதல் அத்வானி வரை அனைவரும் மனம் வருந்தி 'சுயபரிசீலனை' செய்து கொண்டார்கள். சங்கப் பரிவாரங்களை அரவணைத்துச் செல்லாமல் தனித்து செயல்பட முயன்றதால்தான் இந்த நிலை ஏற்பட்டது என்று அத்வானி வேதனைப் பட்டுள்ளார்.

''பா.ஜ.க.வின் பிறப்பிடம் ஆர்.எஸ்.எஸ்; இந்துத்துவ கொள்கையே பா.ஜ.க.வின் அடையாளம். இந்துத்துவம்தான் நாட்டின் அடிப்படைக் கொள்கை; இந்துத்துவ கொள்கையும் இந்தியத் தன்மையும் வேறு வேறானதல்ல. மீண்டும் நாம் இந்துத்துவ கொள்கைக்குத் திரும்புவோம். அதில் உறுதியாக நிற்போம்'' என்று தேர்தல் தோல்வியைப் பற்றி ஆராய்ந்த பா.ஜ.க.வின் தேசிய செயற்குழு முடிவு செய்துள்ளது. பாரதீய ஜனதாவின் இளந்தலைவர்களை உருவாக்குவதற்கான பயிற்சி முகாம் குறித்த திட்டத்தை உருவாக்கும் பொறுப்பை முக்கிய ஆர்.எஸ்.எஸ். தலைவர்களில் ஒருவரான பால் ஆப்தேவிடம் தாய்ப் பாசத்தோடு ஒப்படைத்திருக்கிறார், பா.ஜ.க. தலைவர் வெங்கைய நாயுடு. கடந்த ஆறாண்டுகளாக வாஜ்பேயியின் புகைப்படத்துடன் கட்சிக் கூட்டங்களை நடத்திவந்த பா.ஜ.க. முதன்முறையாக மும்பையில் நடந்த தேசிய செயற்குழு கூட்டத்தில், இந்துவெறி பாசிச மூலவர்களான ஷியாமா பிரசாத் முகர்ஜி, தீனதயாள் உபாத்யாயா ஆகியோ



www.padippakam.com

ரின் படங்களை வைத்தது.

கடந்த தேர்தல் வாஜ்பேயி என்ற தனிநபரை முன்னிறுத்தி அவர் அரிய சாதனைகளைச் செய்து விட்டதாக பிரச்சாரம் செய்து பா.ஜ.க. மக்களைச் சந்தித்தது. கூட்டணிக் கட்சிகளும் அதையேதான் செய்தன. ஆனால் இப்போது, வாஜ்பேயி என்ற மிதவாத முகமூடி மக்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்று பா.ஜ.க. தலைமை கருதுகிறது. வாஜ்பேயி - மோடி லடாயை சமரசம் செய்யும் சாக்கில், ''தனிநபர் இமேஜ் என்ற வைரஸ் உடனடியாக நீக்கப்பட வேண்டும்; கட்சி என்ற முத்திரை மூலம் தான் நாம் அடையாளம் காணப்பட்டிருக்கிறோம்'' என்று வாஜ்பேயியை மறைமுகமாகத் தாக்கியுள்ளார் வெங்கைய நாயுடு. ''தேர்தல் தோல்விக்கு தனிநபர் யாரும் காரணமல்ல; உயர்நிலைத் தலைவர்கள் சுய கட்டுப்பாட்டுடன் செயல்பட வேண்டும்'' என்று முகமூடி வாஜ்பேயிக்கு மென்மையாகக் கண்டனம் தெரிவித்துள்ளார் அத்வானி. ஆர்.எஸ்.எஸ். தான் நமது அஸ்திவாரம் என்பதை எந்த நிலையிலும் மறக்கக் கூடாது என்று நினைவுபடுத்திய அத்வானி, சங்கப் பரிவாரங்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்றிருக்கிறார்.

இவையனைத்தும், பா.ஜ.க.வானது சங்கப் பரிவாரங்களிடம் சரணாகதி அடைந்து விட்டதையும், கட்சியில் ஆர்.எஸ்.எஸ்.-இன் ஆதிக்கம் தீவிரமாகியுள்ளதையும், பா.ஜ.க.- வுக்கும் இந்துத்துவாவுக்கும் உள்ள பாசிசப் பிணைப்பையும் வெளிப்படையாகவே காட்டிவிட்டன. ஆட்சியதிகாரத்தை மீண்டும் கைப்பற்ற இனி வருங்காலங்களில் இந்துவெறி பாசிசப் பயங்கரங்களைக் கட்டவிழ்த்து விட்டு மனித இரத்தம் குடிக்க அது தயங்காது; மீண்டும் மூர்க்கமாகவே செயல்படும் என்பதையே இவை உணர்த்துகின்றன.

ஏனெனில், இவ்வாண்டு இறுதியில் மகாராஷ்டிர மாநில சட்டமன்றத் தேர்தலும் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் பீகார், ஜார்கண்ட், அரியானா, அருணாச்சல பிரதேசம் ஆகிய மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தல்களும் நடைபெற உள்ளன. மகாராஷ்டிராவில் பா.ஜ.க.வின் கூட்டணிக் கட்சியான சிவசேனா, இந்துத்துவ கோட்பாட்டின் அடிப்படையில் தேர்தலில் போட்டியிடப் போவதாக ஏற்கெனவே அறிவித்துள்ளது. எனவே, அத்தேர்தல் பிரச்சாரத்தில் மோடியின் பாசிச பயங்கரவாத வெறியாட்டம் பிரதான பங்கு வகிக்கும். இந்நிலையில், பா.ஜ.க. தனது இந்துத்துவ பாசிசக் கொள்கைகளை அடக்கி வாசித்தால், கூட்டணி பல

> ***இந்துத்துவ பாசிச சங்கப் பரிவாரத்தின் அங்கங்களில் ஒன்றுதான் பா.ஜ.க. அது இந்துத்துவ பாசிச லட்சியத்தை நிறைவேற்றுவதற்கான சங்கப் பரிவாரத்தின் இன்னுமொரு கருவி. இந்நிலையில், பா.ஜ.க. மட்டும் விதிவிலக்காக, அதற்கு அப்பாற்பட்ட ஓர் அரசியல் கட்சியாக இருக்க முடியுமா?***

வீனப்பட்டு தோல்வியடைந்து விடுவோமோ என்று அது அஞ்சுகிறது. எனவேதான் மீண்டும் இந்துத்துவ அடிப்படைக் கொள்கையை அது வெளிப்படையாக உயர்த்திப் பிடிக்கிறது.

பா.ஜ.க.வும் இந்துத்துவாவும் வேறு வேறானது போலவும், சங்கப் பரிவாரங்கள்தான் இந்துவெறித்தன்மை கொண்டவை; பா.ஜ.க. அதற்கு அப்பாற்பட்ட ஓர் அரசியல் கட்சி போலவும் பார்ப்பன பத்திரிகைகள் சித்தரித்து வந்தன. பா.ஜ.க.வுடன் கூட்டணிக் கட்டிக் கொண்ட கைக்கூலிகளும், பிழைப்புவாதிகளும் இதே பாணியில்தான் பசப்பி வந்தனர். 'வாஜ்பேயி ஓர் அற்புதமான மனிதர்; அவர் ஒரு மிதவாதி. அவர் தலைமையில்தான் கூட்டணி சேர்ந்தோம். தேசிய ஜனநாயக முன்னணியின் திட்டத்தைத்தான் கூட்டணி அரசு செயல்படுத்துகிறது; மறைமுக இந்துத்துவ திட்டம் ஏதுமில்லை' என்று திராவிட பிழைப்புவாத கட்சிகள் மோசடி செய்து வந்தன.

ஆனால், இந்துத்துவ பாசிச சங்கப் பரிவாரத்தின் அங்கங்களில் ஒன்றுதான் பா.ஜ.க. அது இந்துத்துவ பாசிச லட்சியத்தை நிறைவேற்றுவதற்கான சங்கப் பரிவாரத்தின் இன்னுமொரு கருவி. பா.ஜ.க.வின் உண்மையான தலைமையாக இருப்பது இந்துவெறி ஆர்.எஸ்.எஸ். அதன் லட்சியமோ இந்துவெறி பாசிசம். இந்நிலையில், பா.ஜ.க. மட்டும் விதிவிலக்காக, அதற்கு அப்பாற்பட்ட ஓர் அரசியல் கட்சியாக இருக்க முடியுமா? இப்போது பா.ஜ.க.வுடன் கூட்டணியை முறித்துக் கொண்டு காங்கிரசுடன் கூட்டுச் சேர்ந்து தேர்தலில் வெற்றி பெற்றதும், பா.ஜ.க. எனும் ஒட்டகத்தின் கூன் முதுகை நிமிர்த்த முயற்சி செய்து தோல்வி கண்டதாக கதையளக்கிறார் கருணாநிதி. அவர் பாணியிலேயே பார்ப்பன பத்திரிகைகளும், ஏதோ இது வரை பா.ஜ.க. மிதவாத இந்துத்துவ கொள்கையைப் பின்பற்றியது போலவும், இப்போது தேர்தல் தோல்விக்குப் பிறகு தீவிர இந்துத்துவ பாதைக்குத் திரும்பியுள்ளதாகவும் கயிறு திரிக்கின்றன.

ஆனால், ஏற்கெனவே ஆட்சியிலிருந்தபோது இந்துவெறி பாசிச பயங்கரவாதி அத்வானிக்கு துணைப் பிரதமர் பதவி, குஜராத்தில் பாசிச பயங்கரவாத வெறியாட்டம், அயோத்தியில் கல்தூண் பூசை, ஸ்டேன்ஸ் பாதிரியார் உயிருடன் எரிப்பு, கிறித்துவ பெண் துறவிகள் மீது பாலியல் வன்முறை, ஆர்.எஸ்.எஸ்-இன் பாடதிட்டப்படி பள்ளி - கல்லூரி பாடநூல்களில் திருத்தம், பல்கலைக்கழகங்களில் வேத பாடத்திட்டம், மும்பை இந்துவெறி கலவர நாயகன் முரளி மனோகர் ஜோஷிக்கு நாடாளுமன்ற அவைத் தலைவர் பதவி, ஆர்.எஸ்.எஸ். விசுவாசிக்கு அரசு துணைத் தலைவர் பதவி - என்று இந்துத்துவ திட்டத்தைத்தான் பா.ஜ.க. செயல்படுத்தி வந்தது.

தேர்தல் தோல்வியால் தமது ஆரிய - பார்ப்பன சாம்ராஜ்யக் கனவு தற்காலிகமாகப் பின்னடைவுக்குள்ளானதால், இப்போது சங்கப் பரிவாரங்களும் அதன் அங்கமான பா.ஜ.க.வும் மீண்டும் மூர்க்கமாகக் கிளம்பிவிட்டன. தேர்தல் தோல்வியால் ஏற்பட்ட ஆத்திரத்தில், வெளிநாட்டவரான சோனியா பிரதமரானால் மொட்டையடித்துக் கொண்டு வெள்ளுடை தரித்து கைம்பெண் வேடமிட்டுக் கொள்ளப் போவதாக சூளுரைத்தார் சுஷ்மா சுவராஜ். தோல்வியைத் தாங்க முடியாமல் எதையும் செய்யத் துணியும் அளவுக்கு வெறிப்பிடித்தலையும் நிலையில் சங்கப் பரிவாரங்கள் உள்ளதையே சுஷ்மா விவகாரம் நிரூபித்துக் காட்டியது.

தேர்தலில் பா.ஜ.க. என்ற கட்சிதான் தோல்வியடைந்துள்ளதே தவிர, நாடாளுமன்ற அரசியலுக்கு வெளியே உள்ள இந்துத்துவ பாசிச பரிவாரங்கள் வீழ்த்தப்படவில்லை. அவை வெறியோடு, தடையின்றிச் செயல்பட்டு வருகின்றன. இந்துத்துவ பாசிசத்தின் ஒரு கிளையான பா.ஜ.க.வின் தற்காலிகத் தோல்வியைக் காட்டி, இந்துத்துவ நச்சு மரமே வெட்டி வீழ்த்தப்பட்டதாக நம்பி ஏமாற முடியாது. நாடாளுமன்ற தேர்தல் அரசியலுக்கு வெளியே இந்துவெறி பாசிசத்துக்கு எதிரான போராட்டங்களைக் கட்டியமைக்காமல் அதை தகர்த்தெறியவும் முடியாது.

● **சந்திரன்**

www.padippakam.com

# விவசாயிகள் தற்கொலை: தாராளமயத்தின் கோரத் தாண்டவம்

**ஒருவரைத் தற்கொலை செய்து கொள்ளுமாறு தூண்டுவது அல்லது தற்கொலைக்குத் தள்ளிவிடுவது இந்தியக் குற்றவியல் சட்டப்படி தண்டனைக்குரிய கிரிமினல் குற்றம். ஆனால், ஆந்திராவில் ஏறத்தாழ 3,000 விவசாயிகளின் தற்கொலைக்குக் காரணமான சந்திரபாபு நாயுடுவின் அரசாங்கம் இந்தியாவின் நெ.1 அரசாங்கமாக மதிப்பிடப்பட்டது. பெங்களூர் நகரத்தின் "சாப்ட்வேர்" வளர்ச்சியில், 600 கர்நாடக விவசாயிகளின் தற்கொலை பூசி மெழுகப்பட்டது.**

**சுருக்கமாகச் சொன்னால், விவசாயிகளின் அழிவிலேதான் "இந்தியா ஒளிர்ந்தது!" ஆந்திராவில் தெலுங்கு தேசமும், தமிழ்நாட்டில் ஜெயாவும்; கேரளாவிலும், கர்நாடகத்திலும் காங்கிரசும் தோற்றுப்போனதற்கு, அம்மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள், அவர்களின் ஆட்சியின் மீது கொண்டிருந்த கோபமும், வெறுப்பும் முக்கிய காரணமாக அமைந்தது.**

**ஆட்சியாளர்கள் பின்பற்றி வரும் உலகமயக் கொள்கைதான் இந்தியா வெங்கிலும் விவசாயத்தை நாசப்படுத்தியது; விவசாயிகளைக் கடனில் மூழ்கடித்து, ஓட்டாண்டிகளாக்கியது. இதற்கான ஆதாரங்களை இத்தொடர் கட்டுரையில் தொகுத்திருக்கிறோம். இப்படிப்பட்ட விவசாயிகளுக்கு எதிரான, உலகமயம் என்ற மறுகாலனிய பொருளாதாரக் கொள்கையை ஒழித்துக் கட்டாமல், விவசாயத்தை மீட்டு விட முடியாது.**

**தமிழகத்தில் ஜெயாவும், ஆந்திராவில் காங்கிரசு அரசாங்கமும் விவசாயிகளுக்கு மீண்டும் இலவச மின்சாரத்தை வழங்க உத்தரவிட்டுள்ளனர். மன்மோகன் சிங் அரசு, விவசாயத்தில் ஒரு இலட்சம் கோடி ரூபாயை முதலீடு செய்யப் போவதாக அறிவித்திருக்கிறது. அதாவது, உலகமயத்தைக் கைவிடாமல், விவசாயிகளுக்கு வங்கிக் கடன், இலவச மின்சாரம் போன்ற சில்லறை சலுகைகளை வழங்குவதன் மூலம், அவர்களின் கோபத்தைத் தணித்துவிட ஆளுங் கும்பல்கள் முயலுகின்றன. போலி கம்யூனிஸ்டுகள் கூட இந்த சில்லறை சலுகைகளை, புரட்சியைப் போல வரவேற்கிறார்கள். நாம் இதை மோசடி என்கிறோம். ஆளுங் கும்பலின் நயவஞ்சகத்திற்கு விவசாயிகள் மீண்டும் பலியாகிவிடக் கூடாது என எச்சரிக்கிறோம்.**

ஆந்திர மாநிலத்தில், கடந்த மே மாதம் இரண்டாவது வாரம் தொடங்கி ஜூன் மாதம் இரண்டாவது வாரத்திற்குள் 279 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போய் விட்டதாக அம்மாநிலத்தைச் சேர்ந்த விவசாய சங்கங்கள் அதிர்ச்சி தரும் புள்ளி விவரமொன்றை வெளியிட்டுள்ளன. வறட்சியால் பாதிக்கப்பட்ட தெலுங்கானா பகுதியில் மட்டுமின்றி, கிருஷ்ணா, கோதாவரி நதிகள் பாயும் பாசன வசதியுள்ள ஆந்திராவின் கடற்கரையோர மாவட்டங்களிலும், இந்த நான்கு வாரத்திற்குள் 82 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு விட்டனர்.

ஆந்திராவில் புதிதாகப் பதவியேற்றுள்ள காங்கிரசு அரசாங்கம், இத்தற்கொலைச் சாவுகளை மூடி மறைக்கவில்லை என்றாலும், உயிரை மாய்த்துக் கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை 194 தான் என அறிவித்து, நிலைமையின் தீவிரத்தைக் குறைத்துக் காட்ட முயன்று வருகிறது. காங்கிரசு அரசாங்கம் வெளியிட்டுள்ள புள்ளி விவரம் தான் உண்மையானது என எடுத்துக் கொண்டாலும், ஆந்திரா, விவசாயிகளின் மயான பூமியாகிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

கடந்த ஆறேழு ஆண்டுகளில் ஆந்திராவில் மட்டும் ஏறத்தாழ 3,000 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போய்விட்டனர். இவர்களுள் பெரும்பாலோர் 35 வயதில் இருந்து 45 வயதுக்கு உட்பட்டவர்கள். ஆங்கிலேயரின் காலனிய ஆட்சியில்கூட, விவசாயிகள் மத்தியில் இப்படிப்பட்ட தற்கொலை சாவுகள் நடந்ததில்லை என ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் உத்ஸா பட்நாயக் குறிப்பிடுகிறார்.

"ஆந்திராவில் இன்றும் 67 சதவீத மக்கள் விவசாயத்தையும், விவசாயம் தொடர்பான துணைத் தொழில்களையும் நம்பிதான் வாழ்கிறார்கள். இவர்களுள் ஒவ்வொரு சிறு விவசாயியும், நடுத்தர விவசாயியும் தற்கொலைக்குத் தள்ளப்படும் அபாயத்தில் வாழ்வதாக" ஆந்திர மாநிலத்தின் 'மார்க்சிஸ்டு' கட்சி குறிப்பிடுகிறது.

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளையடுத்து பங்குச்சந்தை 'வீழ்ந்த' போது, அதனை ஏதோ 'தேசிய'த் துயரம் போலச் சித்தரித்து, ஒப்பாரி வைத்து, தலைப்புச் செய்தியாக முதல் பக்கத்தில் வெளியிட்ட 'தேசிய'ப் பத்திரிகைகள், ஆந்திர விவசாயிகளின் தற்கொலைச் சாவுகளை, அவர்களின் அவலமான வாழ்க்கையை சாதாரண பெட்டி செய்தியைப் போல ஒதுக்கி விட்டன. அது மட்டுமின்றி, "ஆந்திராவில் புதிதாகப் பதவியேற்றுள்ள காங்கிரசு அரசாங்கம் அறிவித்துள்ள பணச் சலுகைகளைப் பெறுவதற்காகத்தான் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள்; இயற்கையான மரணத்தைக் கூடத் தற்கொலை என விவசாயிகள் திரிக்கிறார்கள்" என்று எழுதி, விவசாயிகளை அவமானப்படுத்துகின்றன.

- சில்பூர் கிராமத்தைச் சேர்ந்த 35 வயதான சுங்க மல்லேசம் என்ற விவசாயி தற்கொலை செய்து கொண்ட பொழுது, அவருக்கு இருந்த கடன் 96,000 ரூபாய்.
- வேல்புரு கிராமத்தைச் சேர்ந்த 45 வயதான ரெட்டி ரெங்கா ராவ், 75,000 ரூபாய் கடனை அடைக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டார்.
- 1.7 இலட்ச ரூபாய் கடனை அடைக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டவர், ரேலங்கி கிராமத்தைச் சேர்ந்த சந்துரு சீனிவாசன்.

ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த சிறு, நடுத்தர விவசாயிகள் விவசாயம் செய்வதற்காகத் தங்களின் தலையில் போட்டுக் கொண்ட கடன் தொகை 10,000



படிப்பகம்

www.padippakam.com

கோடி ரூபாய் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடனில் எத்தனை ஆயிரம் கோடி ரூபாயை, எத்தனை விவசாயிகளுக்கு காங்கிரசு அரசாங்கம் திருப்பித் தரத் திட்டம் போட்டுள்ளது?

இறந்து போன விவசாயிகளின் குடும்பங்களுக்கு, கடனைத் திருப்பி அடைக்க ரூ. 50,000 தரப்படும் என அறிவித்திருக்கிறார், காங்கிரசு முதல்வர் ராஜசேகர ரெட்டி. இந்த 50,000 ரூபாயைப் பெற, இறந்து போன விவசாயி கடனை அடைக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டுதான் மாண்டு போனார் என நிரூபித்தாக வேண்டும். இதனைத் துப்பறிந்து கண்டுபிடிப்பதற்கு, ஒரு அதிகார வர்க்கக் கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது. இந்த 50,000 ரூபாய் கைக்குக் கிடைத்தாலும், மீதி கடன் தொகையை அந்தக் குடும்பம்தான் எப்பாடுபட்டாவது கட்ட வேண்டும்.



75,000 ரூபாய் கடனை அடைக்க முடியாமல் தற்கொலை செய்து கொண்ட ரெட்டி ரங்காராவ் குடும்பம்.

கடனைச் சுமந்து கொண்டு உயிரோடு இருக்கும் விவசாயிகளைப் பொருத்தவரை, ''அவர்கள் மீது கொஞ்சம் கருணை காட்டுங்கள். ஆறுமாதம் பொறுத்துக் கொள்ளுங்கள்'' என்ற வேண்டுகோளை, கந்து வட்டிக்காரர்களின் முன் மாநில அரசு வைத்துள்ளது. ''இன்றைய கருணை, நாளைய வட்டியாகக் குட்டிப் போடும்'' என்றுகூட, கந்து வட்டிக்காரர்களின் இரக்க மணம் கணக்குப் போடலாம்.

தரகு முதலாளிகளைப் போல, வாங்கிய வங்கிக் கடனைக் கட்டாமல், ஏப்பம் விடும் ''திறமை'' விவசாயிகளிடம் கிடையாது. அதனால்தான், மான - அவமானத்திற்குப் பயந்து அவர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்பத்தை, துக்கத்தைவிட, கந்து வட்டிக்காரன் கடனைக் கேட்டு எப்போது வருவான் என்ற பீதிதான் பிடித்தாட்டுகிறது.

பண்ணையார்களிடமும், விதை - பூச்சி மருந்து வியாபாரிகளிடமும், கந்து வட்டி கும்பலிடமும் விவசாயிகள் பட்ட கடன் ரத்து செய்யப்படவில்லை. தற்கொலை செய்து கொண்டுவிட்ட விவசாயிகளின் குடும்பத்திற்குத் தனிப்பட்ட நட்ட ஈடு எதுவும் கிடையாது. இன்னும் சொல்லப் போனால், அரசு கஜானாவில் உள்ள மக்களின் வரிப்பணம், தற்கொலை செய்து கொண்ட விவசாயியின் பெயரால் கந்து வட்டிக் கும்பலிடம் போய்ச் சேரப் போகிறது. பிறகு, இதிலென்ன பத்திரிகைகள் வாயைப் பிளக்கும் அளவிற்கு சலுகை இருக்கிறது?

●●●

1997-98-ஆம் ஆண்டுகளில் ஆந்திராவின் தெலுங்கானா பகுதியைச் சேர்ந்த பருத்தி விவசாயிகள் நூற்றுக்கணக்கில் தற்கொலை செய்து கொண்டனர். இத்தற்கொலைச் சாவுகளைப் பற்றி வெள்ளை அறிக்கை தயாரித்த சந்திரபாபு நாயுடு அரசாங்கம், ''ஆந்திர விவசாயிகள் பழைய பாணியிலேயே விவசாயம் செய்து வருவதுதான் இத்தற்கொலைகளுக்குக் காரணம்'' என குறைபட்டுக் கொண்டது.

கடனை அடைக்க, தனது சீறுநீரகங்களுள் ஒன்றை விற்றுவிட்ட பருத்தி விவசாயி வெங்கட் ரெட்டி.



பழைய பாணி விவசாயத்திற்குப் பதிலாக, ''விவசாயத்தில் உலகமயத்தைப் புகுத்துவது; முதலாளித்துவ நிறுவனங்கள் தனியார் பண்ணைகளை அமைக்க ஊக்குவிப்பது; இத்தனியார் நிறுவனங்களோடு ஆந்திர மாநில விவசாயிகள் ஒப்பந்தம் போட்டுக் கொண்டு விவசாயம் செய்வது'' என்ற புதிய பாணி விவசாயத்தை சந்திரபாபு நாயுடு ஆந்திரா வெங்கும் திணித்தார்.

இப்புதிய பாணி விவசாயம், விவசாயிகளிடம் மிஞ்சியிருந்ததையும் தட்டிப் பறித்ததே தவிர, புதிதாக எதையும் தரவில்லை. இந்த 'உலகமயமாக்கப்பட்ட' விவசாயம், ஒருபுறம் விவசாய உள்ளீடு பொருட்களுக்கான விலையை பல மடங்கு உயர்த்தியது; இன்னொருபுறம், விளைபொருட்களின் விலையை சந்தை தீர்மானிப்பது என்ற பெயரில், விவசாயத்தைச் சூதாட்டமாக்கியது. ஒரு கிடுக்கியைப் போல, விவசாயிகளைத் தப்பிக்க விடாமல் பிடித்து நசுக்கியது.

''விளைச்சல் நன்றாக இருந்தால், நல்ல விலை கிடைக்காது; விளைச்சல் மோசமாக இருந்தால், அது எல்லா வழிகளிலும் கேடுகாலம் தான்'' என்கிறார் தெலுங்கானாவைச் சேர்ந்த ராமநாதன் என்ற பருத்தி விவசாயி. உலக வங்கியின் பொருளாதார அறிஞர்களால் திட்டமிடப்பட்டு, நாயுடுவால் புகுத்தப்பட்ட இந்தப் புதிய பாணி விவசாயத்தின் யோக்கியதையை இதைவிட ரத்தினச் சுருக்கமாக அம்பலப்படுத்தி விட முடியாது.

●●●

''விவசாயத்தில் உலகமயத்தைப் புகுத்துவது'' என்ற சொல் அலங்கா


படிப்பகம்

ரத்தை உரித்துவிட்டுப் பார்த்தால், சந்திரபாபு நாயுடு புகுத்திய புதிய பாணி விவசாயம் என்பது விவசாயத்தை அரசு முற்றிலுமாகக் கைகழுவி விடுவதும்; பண்ணையார்கள், கந்து வட்டிக் காரர்கள், உரம்-பூச்சி மருந்து வியாபாரிகள் என்ற சுரண்டல் கும்பலின் கையில் விவசாயிகளை ஒப்படைப்பது மாகும்.

1997-ஆம் ஆண்டு உலக வங்கியிடமிருந்து பல ஆயிரம் கோடி ரூபாய் கடன் பெறுவதற்காக, அவ்வங்கியின் கட்டளைப்படி சந்திரபாபு நாயுடு அரசாங்கம், விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவந்த இலவச மின்சாரத்தை நிறுத்தியது; விவசாயத்திற்குப் பாசன வசதிகள் செய்து தருவதைக் கைகழுவியது; விதை - உரம் - பூச்சி மருந்துகளுக்கு வழங்கப்பட்டு வந்த மானியங்கள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு, இவற்றின் விற்பனையும், விநியோகமும் முற்றிலுமாகத் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டன. விவசாயிகளுக்கு விற்கப்படும் இடுபொருட்களின் தரத்தை விவசாய அதிகாரிகள் பரிசோதனை செய்வது விலக்கிக் கொள்ளப்பட்டது. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு சங்கங்கள் விவசாயிகளுக்கு வழங்கிவந்த கடன் உதவிகள் அற்பமாகக் குறைக்கப்பட்டதோடு, கடனுக்கான வட்டி அதிகரிக்கப்பட்டது. விளைபொருட்களுக்குக் கொடுக்க வேண்டிய குறைந்தபட்ச ஆதார விலையை அரசு நிர்ணயித்துவந்த நடைமுறை நிறுத்தப்பட்டது. உலகமயம் என்ற பெயரில் புகுத்தப்பட்ட இந்த நடவடிக்கைகள் ஆந்திர விவசாயிகளின் தலையில் பேரிடியாய் இறங்கின.

இந்த 'சீர்திருத்த' நடவடிக்கைகளால், 1997-க்கு முன்பு 138 ரூபாயாக இருந்த யூரியா மூட்டையின் விலை இன்று 251 ரூபாயாக உயர்ந்து விட்டது. 234 ரூபாயாக இருந்த அம்மோனியா உர மூட்டையின் விலை 486 ரூபாயாகவும்; 239 ரூபாயாக இருந்த பாஸ்பேட் உர மூட்டையின் விலை 885 ரூபாயாகவும் உயர்ந்து விட்டன.

உள்நாட்டு நிறுவனங்களின் விதைகள் 200 சதவீதமும், பன்னாட்டு நிறுவனங்களின் விதைகள் 400 சதவீதமும் 1997-க்குப் பின் விலை அதிகரித்துள்ளன.

பாசனக் கட்டணம் 266 சதவீதம் உயர்த்தப்பட்டதால், விவசாயிகளிடமிருந்து 70 கோடி ரூபாய் கூடுதலாக மாநில அரசு பிடுங்கிக் கொண்டது.

உலகமயத்தின் கீழ் ஒரு பன்னாட்டு நிறுவனம் இந்தியாவில் தொழில் தொடங்க முனைகிறது என்றால், அந்நிறுவனத்திற்குக் குறைந்த விலையில் நிலம், தண்ணீர், மின்சாரம், வரிச்சலுகைகள் போன்ற அடிப்படையான வசதிகள் அனைத்தையும் அரசாங்கமே ஏற்படுத்தி தருகிறது. ஆனால், விவசாயத்திலோ இதற்கு நேர்எதிராக நடந்து கொள்கிறது. விவசாயத்திற்கு அடிப்படைத் தேவையான பாசன வசதியை ஏற்படுத்தித் தராமல் ஆந்திர அரசு கைகழுவிவிட்டதால், அந்தப் பாரம் முழுவதையும் விவசாயிகளே சுமக்க வேண்டியதாகிவிட்டது.

ஆந்திர மாநிலத்தில் 1985-ஆம் ஆண்டு வரை 12 இலட்சமாக இருந்த விவசாய பம்பு செட்டுகளின் எண்ணிக்கை, இன்று 22 லட்சத்து 87 ஆயிரமாக உயர்ந்து விட்டது.

கிருஷ்ணா நதி பாயும் நளகொண்டா மாவட்டத்தில் உள்ள முசாம்பள்ளி கிராமத்தில் இருக்கும் சாகுபடிக்கு ஏற்ற நிலத்தின் பரப்பளவு 2,000 ஏக்கர் தான். ஆனால், இந்தக் கிராமத்தில் இருக்கும் பம்பு செட்டுகளின் எணணிக்கை கிட்டதட்ட 6,000.

இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 20 ஏக்கர் நிலத்துக்குச் சொந்தக்காரரான பைராரெட்டி, இதுவரை 55 ஆழ்துளை கிணறுகளை வெட்டியிருக்கிறார். இதில் 49 கிணறுகள் நீரின்றி வறண்டு போய்விட்டன.

49 கிணறுகள் வறண்ட பின்னும் கூடச் சலிக்காமல் 50-ஆவது கிணறைத் தோண்டும் ஜிதேந்திர ரெட்டி, "இந்தப் பயிரில்தான் எங்களின் வாழ்க்கையே இருக்கிறது. நாங்கள் எப்படியாவது தண்ணீரைக் கண்டுபிடித்தாக வேண்டும். கிணற்றைத் தவிர, வேறு மாற்று வழி எங்களுக்கு என்ன இருக்கிறது?" எனக் கேட்கிறார்.

முசாம்பள்ளி கிராமத்தில் உள்ள 6,000 கிணறுகளைத் தோண்டுவதற்கு 6.52 கோடி ரூபாயை விவசாயிகள் செலவழித்துள்ளனர். இந்தப் பணத்தைக் கொண்டு சிறிய அணைக்கட்டே கட்டி முடித்திருக்கலாம்" என்கிறார் அத்தொகுதியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நரசிம்மரெட்டி.

ஒருபுறம் பாசன வசதி செய்து தருவதைக் கைகழுவிய சந்திரபாபு நாயுடு அரசாங்கம், இன்னொருபுறம் விவசாயத்திற்கு வழங்கப்பட்டு வந்த இலவச மின்சாரத்தை ரத்து செய்து, விவசாயிகள் மீது இரட்டைச்சுமையை ஏற்றியது. 2000-இல் நடந்த சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற சந்திரபாபு நாயுடு, பம்பு செட்டுகளுக்கு வழங்கப்பட்டு வந்த மின் கட்டணத்தை ரூ. 50/-லிருந்து ரூ. 625/- ஆக உயர்த்தினார். மின் கட்டணத்தைச் செலுத்தாமல் தடுமாறும் விவசாயிகளிடமிருந்து, மின் கட்டணத்தை மிரட்டி வசூலிக்க தனி போலீசு படையே அமைக்கப்பட்டது. இந்தப் படை, மின் கட்டணத்தை உரிய தேதியில் கட்டத் தவறியதற்காக, விவசாயிகளிடமிருந்து 120 கோடி ரூபாயை அபராதமாக வசூலித்தது.

பாசனத் தண்ணீருக்காக கிணறுக்கு மேல் கிணறைத் தோண்டி கடனில் மூழ்கிக் கொண்டிருந்த விவசாயிகளை, ஆந்திர அரசு உலகச் சந்தையைக் காட்டி, உணவுப் பயிரில் இருந்து பணப் பயிருக்கு மாறி விடுமாறுச்

**தனது 20 ஏக்கர் நிலத்தில் தண்ணீருக்காக இதுவரை 55 கிணறுகளைத் தோண்டியுள்ள முசாம்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த பைரா ரெட்டி.**



www.padippakam.com

சுண்டி இழுத்தது.

குறிப்பாக, பருத்தியே பயிரிட்டிராத தெலுங்கானா விவசாயிகள், 1990-க்குப் பின் பருத்தி விவசாயிகளாக மாற்றப்பட்டனர். 1995-ஆம் ஆண்டு வரை சர்வதேச சந்தையில் உச்சத்தில் இருந்த பருத்தியின் விலை, அதன்பின் அதளபாதாளத்திற்குச் சரிந்து வீழ்ந்தது. 1997-98-ஆம் ஆண்டுகளில் தெலுங்கானா பகுதியில் பருத்தி விவசாயிகள் கொத்து கொத்தாகத் தற்கொலை செய்து கொண்டதற்கு இந்த உலக மயம்தான் காரணமாக அமைந்தது. இந்தச் சமயத்தில் கடனில் மூழ்கிப் போன, பயிர் சாவியாகிப் போன பருத்தி விவசாயிகளுக்கு; அதனால் தற்கொலை செய்து கொண்ட விவசாயக் குடும்பங்களுக்கு குறைந்தபட்ச நட்டஈடு கூட வழங்க சந்திரபாபு நாயுடு மறுத்துவிட்டார். இதற்கு மாறாக, விவசாயத்தில் உலகமயத்தை இன்னும் தீவிரமாக அமல்படுத்த வேண்டும் என வெள்ளை அறிக்கை தயார் செய்தது. சந்திரபாபு நாயுடு அரசாங்கம்.



ஹைதராபாத்தில் உள்ள ''சைபர்கோபுரத்தின்'' முன், கிராமத்தை விட்டு வேலை தேடி வந்துள்ள கூலித் தொழிலாளி: பகட்டும் வறுமையும்.

ஆந்திர கிராமப்புற விவசாயிகளின் தலையில் ஏற்றப்பட்டுள்ள 10,000 கோடி ரூபாய் கடனில், வங்கிகள் கடனாகக் கொடுத்தது. வெறும் 2,000 கோடி ரூபாய் தான். இதனைக் கூட கிராமப்புற பணக்கார விவசாயிகளும் விவசாயத்தில் நுழைந்துள்ள தரகு முதலாளித்துவ நிறுவனங்களும்தான் பெரும்பாலும் பங்கு போட்டுக் கொண்டன. ஏறத்தாழ, 8,000 கோடி ரூபாயை ஏழை மற்றும் நடுத்தர விவசாயிகள் கந்துவட்டிக்குதான் வாங்கியுள்ளனர். இது, கிராமப்புறங்களைச் சேர்ந்த பண்ணையார்களுக்கும், பணக்கார விவசாயிகளுக்கும் விவசாயிகளைப் போண்டியாக்க புதிய வாய்ப்புகளை வாரிக் கொடுத்தது.

அவர்களே குத்தகைக்கு நிலத்தைக் கொடுப்பவர்களாகவும்; லேவாதேவி வட்டிக்காரர்களாகவும்; விதை - உரம் - பூச்சி மருந்து விற்பனையாளர்களாகவும் மாறி, விவசாயிகளைச் சுரண்டிக் கொழுத்தனர். 120 ரூபாய் அதிகபட்ச விலையுள்ள மோனோகுரோட்டாபாஸ் என்ற பூச்சி மருந்து, விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுக்கும் பொழுது முன்னூறு ரூபாய் என விலை வானத்துக்குப் பறந்தது. முதல் தவணை கடன் வாங்கும் பொழுது ஆண்டுக்கு 36 சதவீத வட்டி; அந்தக் கடனை அடைக்க மீண்டும் கடன் வாங்கும் பொழுது ஆண்டுக்கு 60 சதவீத வட்டி; மூன்றாவது கடன் என்றால் 120 சதவீத வட்டி என கந்துவட்டி கிராமப்புறங்களில் பேயாட்டம் போட்டது. ஏர் உழும் மாடுகள், வீடு, நிலம், வீட்டில் இருந்த பண்ட பாத்திரங்களை மட்டுமல்ல, எதிர்கால விளைச்சலைக் கூட அடமானம் வைத்து, கடன் வாங்க வேண்டிய கொடூரமான நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டனர்.

ஏழை, நடுத்தர விவசாயிகளை விட, குத்தகை விவசாயிகளின் நிலை இன்னும் பரிதாபகரமானது. அவர்களிடமிருந்து விளைச்சலில் 60 சதவீதம் குத்தகைப் பணமாகக் கொள்ளையடிக்கப்பட்டது. ஆந்திராவில் ஏறத்தாழ 30 இலட்சம் குத்தகை விவசாயிகள் இருந்தபோதிலும், அவர்கள் வங்கிக் கடன் கூடப் பெற முடியாது. ஏனென்றால், குத்தகை சட்டபூர்வமாக எழுதப்படாமல், ''கௌல்தாரி'' என்ற (பழைய கால) வழக்கப்படி, வாய்மொழியாக மட்டுமே நடைபெறுகிறது. சந்திரபாபு நாயுடு ஆட்சி காலத்தில் குத்தகை பாதுகாப்பு சட்டம் கழிப்பறைக் காகிதத்தைவிட கேவலமாக மதிப்பிழந்து போனது.

அமெரிக்காவில் இருந்த உலக வர்த்தக மையத்தைத் தகர்த்து, ஐயாயிரம் அப்பாவிகளைக் கொன்ற செயல் பயங்கரவாதம் என்றால், ஆந்திராவின் விவசாயத்தையே சீரழித்து, 3,000 விவசாயிகளைத் தற்கொலைக்குத் தள்ளிய உலகமயமும், பயங்கரவாதம்தான். இந்தச் சந்தை பயங்கரவாதியான சந்திரபாபு நாயுடுவின் ஆட்சி, விவசாயிகளின் வாழ்க்கையை மட்டும் சீரழிக்கவில்லை.

நாயுடு ஆட்சியின் கடந்த ஐந்தாண்டுகளில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான சிறு தொழில்கள் மூடப்பட்டன. இதனால் 15 இலட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்கள் வேலையிழந்தனர். அரசுத் துறையைச் சேர்ந்த 55 நிறுவனங்கள் அடிமாட்டு விலைக்குத் தனியாரிடம் விற்கப்பட்டன; நெசவாளர்களுக்குக் கூட்டுறவுக் கடன்கள் மறுக்கப்பட்டன. இதனால் அவர்கள் 36 சதவீத வட்டிக்கு கடன் வாங்க கந்து வட்டிக் கும்பலிடம் தள்ளப்பட்டனர். இலவச மின்சாரத்திற்கு 450 கோடி ரூபாய் மானியம் வழங்குவதை நிறுத்திய சந்திரபாபு நாயுடு, ''எஃப்.1'' என்ற கார் பந்தயத்தை ஹைதராபாத்தில் நடத்துவதற்கு 600 கோடி ரூபாய் வரை மானியம் தரத் தயாராக இருந்தார்.

தெலுங்கு தேசம் கட்சியைச் சேர்ந்த விசுவாசிகள் சுருட்டிக் கொள்வதற்காகவே, ''ஜன்மபூமி திட்டம்'' என்ற பெயரில் 1,200 கோடி ரூபாயை அரசு கஜானாவில் இருந்து வாரிவிட்டார், அவர். 1,000 கோடி ரூபாய் பெறுமான பாசனக் கால்வாய் கட்டும் ஒப்பந்தங்கள் அனைத்தும், ''பாசன நீரைப் பயன்படுத்துவோர் சங்கம்'' என்ற பெயரில் திரண்டிருந்த கிராமப்புற ஆதிக்க சக்திகளிடம் ஒப்படைக்கப்பட்டன. கிராமப்புற ஆதிக்க சக்திகள், நகர்ப்புற ஒப்பந்தக்காரர்கள், தெலுங்கு தேசக் கட்சியின் தலைவர்கள், விசுவாசிகள், அரசு சாரா நிறுவனங்கள் என்ற இந்தக் கும்பல் தான் உலக வங்கியால் தூக்கி பிடிக்கப்பட்ட சந்திரபாபு நாயுடுவின் ஆட்சியால் பலன் அடைந்தவர்கள்.

கேரளாவிலும், கர்நாடகாவிலும் இந்த உலகமயக் கொள்கை ஏற்படுத்திய பாதிப்புகள் ஆந்திராவிற்குச் சற்றும் குறைந்ததல்ல என்பதை வருமிதழில் பார்ப்போம்.

**(தொடரும்)**


படிப்பகம்

www.padippakam.com

# பிழைப்புவாதமே தலித்தியமாக... ஒட்டுண்ணிகளே தலைவர்களாக...

"புதிய ஜனநாயகம்" பத்திரிக்கை தொடங்கப்பட்டு இருபது ஆண்டுகள் நிறைவடையப் போகின்றன. இந்த இருபது ஆண்டுகளில் புதிய ஜனநாயகம் பத்திரிக்கையைப் போலவோ, இந்த அளவுக்கோ, தொடர்ச்சியாக வேறு எந்தப் பத்திரிக்கையும் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான ஒடுக்குமுறைகளுக்கு எதிராக எழுதியதே கிடையாது.

தாழ்த்தப்பட்ட மக்கள் நலனுக்கானது என்று சொல்லிக் கொண்டு தலித் அமைப்புகளோ, தலித் தலைவர்களோ முயற்சி எடுத்து அவ்வப்போது வெளிவந்தும் நின்றும் போகும் பத்திரிக்கைகள் கூட இப்படிச் செய்ததில்லை.

நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான அடக்குமுறை - ஒடுக்குமுறைகள், அநீதிகள் நிகழ்வதைத் தேடிக் கண்டுபிடித்து, கடும் கோபாவேசத்தோடு எழுதியிருக்கிறது, புதிய ஜனநாயகம். இதன் இருபதாண்டு தொகுப்புகளும் இப்போதுமிருக்கின்றன. அவற்றைப் புரட்டினால் தெரியும்; ஒவ்வொரு இதழிலும் இப்படிப்பட்ட எழுத்துக்கள் இருக்கின்றன; விதிவிலக்காகவே சில இதழ்களில் இடம் பெறாமல் இருக்கலாம்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் ஆதிக்க சாதிக்கும் இடையிலான சண்டைகள் நிகழும் போதெல்லாம், அதைப் பொதுவில் சாதிக் கலவரம் என்றும், வர்க்க ஒற்றுமைக்காக சமரசத் தீர்வு காணவேண்டும் என்றோ, தமிழினவாதிகளைப் போல - தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சாதிகளின் ஒற்றுமையின் அவசியம் குறித்து போதிப்பது என்ற தோரணையிலோ புதிய ஜனநாயகம் எழுதியதில்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான ஆதிக்க சாதிவெறியாட்டம், சாதிப் படுகொலை என்று தான் வரையறுத்து பு.ஜ. எழுதியிருக்கிறது.

தென் மாவட்டங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான சாதி வெறியாட்டம் - சாதிப் படுகொலைகள் பற்றி எழுதும்போது ஆதிக்க சாதியினர் குறிப்பாக, முக்குலத்தோர் சாதிவெறிதான் அதற்குக் காரணம் என்று எழுதியதோடு, பொதுவில் சமரசம், அமைதி, நல்லிணக்கத்தைப் போதிக்கவில்லை; தாழ்த்தப்பட்ட மக்கள் அடங்க மறுத்து, திருப்பித் தாக்குவது, பதிலடி கொடுப்பதன் அவசியம், தவிர்க்க முடியாத நிலை ஆகியவற்றை வலியுறுத்திதான் எழுதினோம்.

குறிப்பாக, பிறப்பால் தாழ்த்தப்பட்டவர் அல்லாத எமது தொழிலாளித் தோழர் ஒருவர், ராஜபாளையம் அருகே இரவு வேலைக்குச் சென்றுவிட்டுத் திரும்பியபோது, தாழ்த்தப்பட்ட சாதியினரால் வழிமறித்து, அடித்துக் கொன்று, வைக்கோல் போரில் போட்டுக் கொளுத்தப்பட்டார். அந்த நிலையிலும் நிதானம் தவறாது, கனத்த நெஞ்சத்தோடு கண்ணீர் சிந்தினோமே தவிர "தலித் விரோத" நிலை எடுக்கவில்லை.

புதிய ஜனநாயகம் சார்பு புரட்சிகர அமைப்புகள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் சாதிய, தீண்டாமைக் கொடுமைகளை எதிர்த்து அன்றாடம் பகுதிகளில் போராடி வருகின்றன. இவை பற்றி புதிய ஜனநாயகம் பத்திரிக்கையில் அவ்வப்போது பிரசுரிக்கப்படுபவை தவிர, இடப்பற்றாக் குறையால் ஏராளமான செய்திகள் பிரசுரிக்கப்படாமலேயே போய் விடுகின்றன. ம.க.இ.க. உட்பட புரட்சிகர அமைப்புகள் பார்ப்பன பயங்கரவாதத்துக்கு எதிராக நடத்தும் இயக்கங்கள் (தமிழ் மக்கள் இசைவிழா, கருவறை நுழைவுப் போராட்டம் தொடங்கி மத மாற்றத் தடைச்சட்டம், ஆடு - கோழி பலியிடத் தடை, பசுவதைத் தடை ஆகிய எதிர்ப்பு வரை) எல்லாம் வெறுமனே அருபமான அரசியல் நோக்கத்துகானவை அல்ல. பார்ப்பன சனாதன சாதிய - வருணாசிரமத்துக்கு எதிரானவைதாம்.

சாதியம், தீண்டாமை ஒழிப்பு நடைமுறையில் 'தலித்' அமைப்புகள் உட்பட வேறு எந்த இயக்கத்தையும் விட புதிய ஜனநாயகம் சார்பு புரட்சிகர அமைப்புகளின் பணிகள் எந்த வகையிலும் குறைந்தவை அல்ல. இந்த அமைப்புகள், தம் எல்லா மட்டங்களிலும் சாதியம் - தீண்டாமை பாராட்டாததைக் கறாராகப் பின்பற்றுவதோடு, குறிப்பாக, தலித்துகள் அல்லாத பிற சாதிகளின் உழைக்கும் மக்களிடையே அதற்கான இயக்கங்களை முன்னெடுத்துச் செல்வதில் எப்போதும் முனைப்புக் காட்டி வந்திருக்கின்றன.

1997-இல் மதுரையில் பெரிய அளவில் சாதி - தீண்டாமை ஒழிப்பு மாநாடு - பேரணி நடத்தப்பட்டது; இதற்கு முன்னோடியாக சாத்தியமான பல்வேறு பகுதிகளிலும் சுவரொட்டி - சுவரெழுத்து இயக்கங்களோடு, பொதுக் கூட்டங்கள் நடத்தின; வெறும் பிரச்சாரமாக நிற்காமல், கோவில் - கருவறை நுழைவு, பொது இடங்களில் நீர் எடுப்பது, இரட்டை 'டம்ளர்' முறை ஒழிப்பு எனவும் போராட்டங்கள் நடத்தின.

"தலித்" அமைப்புகள் எல்லாமும் சேர்ந்து இதுவரை விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலான சாதிமறுப்புத் திருமணங்களே நடத்தியிருக்கின்றன; என்றாலும் புரட்சிகர அமைப்புகள் நூற்றுக்கணக்கான சாதி மறுப்புத் திருமணங்கள் நடத்தியிருக்கின்றன; குறிப்பாக, இந்த இயக்கத்தையொட்டி விழுப்புரத்தில் பு.ஜ. ஏட்டின் ஆசிரியர் உட்பட அமைப்புத் தோழர்கள் சாதி மறுப்புத் திருமணங்கள் செய்து கொண்டனர். புரட்சிகர அமைப்புகளுக்குள் நடக்கும் இத்தகைய திருமணங்கள்தாம் சாதி-தீண்டாமை ஒழிப்பை ஊக்குவித்து சமுதாயத்துக்கே முன்னோடியாக விளங்குகின்றன.

விடுதலைச் சிறுத்தைகளில் ஒருவரான அத்தியூர் (விழுப்புரம் வட்டம்) மூர்த்தி "உங்கள் அசுரகானம் ஊர்த் தெருவுக்குள் ஒலிப்பதில்லை - காரணம் அங்கே உருட்டுக் கட்டை அடி கிடைக்கும் என்றா...?" என்று சமீபத்தில் பு.ஜ.வுக்கு ஒரு கடிதத்தில் இப்படி எழுதிக் கேட்டு உறுமுகிறார்.

இவர் குறிப்பிடும் பாடல் ம.க.இ.க.வின் மையக் கலைக்குழு தயாரித்து வெளியிட்டது. இந்தக் கலைக்குழு தெற்கே குமரியிலிருந்து வடக்கே திருத்தணி வரை நூற்றுக்கணக்கான கிராமங்களில் கலை நிகழ்ச்சிகள்


படிப்பகம்

www.padippakam.com

நடத்தி வருகிறது. இந்தக் கலை நிகழ்ச்சிகள் ''ஊர்'' - ''சேரி'' வேறுபாடின்றி எல்லா இடங்களிலும்தான் நடத்தப்படுகின்றன. இவைதவிர ம.க.இ.க. உட்பட புரட்சிகர அமைப்புகள் நடத்தும் எல்லா நிகழ்ச்சிகளிலும் ''ஊர்'' - ''சேரி'' வேறுபாடின்றி ஒலிபரப்பப்படுகிறது.

ம.க.இ.க. மையக் கலைகுழு நிகழ்ச்சிகளில் சாதி - தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் தவறாது இடம் பெறுகின்றது. அதன் தமிழ் மக்கள் இசை விழாவிலும், பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாட்டிலும் நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளிலும் சாதி - தீண்டாமை ஒழிப்பு முக்கியக் கருத்தாக இருந்துள்ளது.

சமீபத்தில் கோவை காளப்பட்டி அருந்ததி மக்கள் மீதான வேளாளக் கவுண்டர்கள் கொலைவெறித் தாக்குதல்கள் நடத்தினர். இதைக் கண்டித்து திருமாவளவன் உட்பட 'தலித்' அமைப்பினர் அருந்ததி மக்கள் மத்தியில் மட்டுமே தோன்றி சவால்விட்டு விட்டுப் போயினர். ஆனால் இந்தப் பிரச்சினையில் ''தாழ்த்தப்பட்டோர் - அல்லாதவர்'' என்று அணிகளைத் திரட்டி, போலீசின் அடக்குமுறை சித்திரவதைகளையும் எதிர்கொண்டு, ஆதிக்கசாதி மக்களிடமே நேரில் போய் பிரச்சார இயக்கம் நடத்தியவை, புதிய ஜனநாயகம் சார்பு புரட்சிகர இயக்கங்கள் மட்டும் தான்.

இதற்கெல்லாம் ''தலித்'' தலைவர்களிடம் இருந்து பாராட்டுக்களை நாம் எதிர்பார்க்கவில்லை. இப்படி எதுவுமே நாம் செய்யாததைப் போல அவதூறு செய்வது சரியா? இவ்வளவு இருந்தும் பு.ஜ. அமைப்பினர் சாதி - தீண்டாமை ஒழிப்புக்காக புடுங்கியது என்ன? கிழித்தது என்ன? என்று கேட்கிறார்கள். சில சம்பவங்களைக் குறிப்பிட்டு அவற்றுக்காக ஒன்றும் செய்வதற்குத் துப்பில்லாதவர்கள் என்று ஏசுகிறார்கள். இவர்கள் செய்வது நேர்மையானதா என்றுதான் கேட்கிறோம்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறையை எதிர்ப்பது - கண்டிப்பதற்கும், சாதி - தீண்டாமை ஒழிப்புக்காக இயக்கம் நடத்துவது ஆகியவற்றுக்கும் சம்பந்தமே இல்லாதது, மாறானது என்பதாகவும் நமது தமிழ் மக்கள் இசை விழாக்களையும், பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாடு - இயக்கங்களையும் ''தலித்'' தலைவர்கள் சித்தரிக்கிறார்கள். இப்படிச் சித்தரிப்பதன் மூலம் இவர்களுக்கு சாதி - தீண்டாமை ஒழிப்பில் உண்மையிலேயே அக்கறை கிடையாதோ,




ம.க.இ.க. - வி.வி.மு. - பு.மா.இ.மு. நடத்திய சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தையொட்டி, மதுரை நகரில், மேல்சாதியினர் நிறைந்திருக்கும் தெருக்களினூடாக, சாதி - தீண்டாமையை எதிர்த்து நடத்தப்பட்ட பேரணி.

இவர்கள் பார்ப்பன பயங்கரவாதிகளின் ஐந்தாம் படையாக செயல்படுகிறார்களோ என்ற சந்தேகந்தான் எழுகிறது.

தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான ஒடுக்குமுறைகளையும், சாதிய - தீண்டாமைக் கொடுமைகளையும் எதிர்த்து இயக்கங்கள் நடத்துவதில் புதிய ஜனநாயகம் மற்றும் இதன் சார்புப் புரட்சிகர அமைப்புகளும் காட்டிய தொடர்ச்சி - உறுதியைக் கண்டு ஒரு வாசகர் பின்வருமாறு கேள்விகள் எழுப்பினார்.

''மார்க்சியத்தை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் உழைக்கும் மக்கள் அனைவருக்காகவும் குரல் கொடுக்க வேண்டும். ஆனால் உங்கள் 'அசுர கானம்' ஒலிப்பேழையைக் (கேசட்) கேட்டால் இது ஏதோ தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இயக்கம் மட்டுமாகத் தெரிகிறது. உழைக்கும் மக்கள் என்றால் பள்ளன், பறையன் என்றழைக்கப்படும் தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமா? உங்களில் மற்ற சாதிகளில் உள்ள உழைக்கும் மக்களின் ஆதரவின்றி புதிய ஜனநாயகப் புரட்சி செய்யப் போகிறீர்களா? இதன் மூலம் நீங்கள் சில பகுதிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லாத மக்களிடமிருந்து தனிமைப்படப் போகிறீர்கள் என்று கருதுகிறேன்!''

இதற்குப் பதிலளித்த புதிய ஜனநாயகம், வாசகர் கருதியதைப் போல, தாழ்த்தப்பட்ட மக்களோடு அடையாளம் காணப்படுவது குறித்து நாம் அஞ்சவும் இல்லை; பின்வாங்கவும் இல்லை. இதனால் தாழ்த்தப்பட்டோர் அல்லாத பிற சாதி உழைக்கும் மக்கள் விலகிப் போய் விடுவார்கள் என்பதைப் பற்றி அக்கறைப்படவும் இல்லை என்றுதான் எழுதினோம். இதுபற்றி பின்வருமாறு பு.ஜ. எழுதியது.

''புதிய ஜனநாயகப் புரட்சிக்கான உந்து சக்திகளில் தலைமை சக்தி பாட்டாளி வர்க்கம்; பிரதான, அடிப்படை சக்தி விவசாயிகள், குறிப்பாக கூலி, ஏழை விவசாயிகள். புதிய ஜனநாயகப் புரட்சியின் சாராம்சம் விவசாயிகளின் விவசாயப் புரட்சியும், தொழிலாளர்கள் - விவசாயிகள் கூட்டை அச்சாக கொண்டதும் ஆகும். மற்ற பிற சாதிகளிலும் உழைக்கும் மக்கள் இருப்பினும், தாழ்த்தப்பட்ட, பழங்குடி மற்றும் சேவை சாதிகளை உள்ளடக்கிய ''சூத்திர'' மக்கள்தாம் மிகப் பெரும்பான்மையினரான உழைக்கும் மக்களைக் கொண்ட பிரிவு. இந்த மக்களைத் தட்டியெழுப்பி அணி திரட்டாத வரை புரட்சி என்பது வெறும் வாய்ச் சவடாலாகவே இருக்கும். பிரதானமாக இந்தப் பிரிவு மக்களை அணி திரட்டுவதால், ஒரு வேளை பிற சாதி, குறிப்பாக மேல் சாதி உழைக்கும் மக்களிடம் இருந்து தனிமைப்பட நேரிடுமானால், அது அவர்கள் கூலிக்காரர்களேயானாலும், தாம் சமூக ரீதியில் உயர்ந்தவர்கள் என்கிற ''அதிகார'' உணர்வின் விளைவாகவே இருக்க முடியும். இத்தகைய ''அதிகார'' உணர்வு இருக்கும் வரை பிற சாதி, குறிப்பாக மேல்சாதி உழைக்கும் மக்கள் விடுதலை பெறவே முடியாது. இவர்கள் நமது இயக்கத்தைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான இயக்கமாகக் கருதி விடுவார்களோ என்கிற அச்சம் தேவையில்லை. அதைவிட முக்கியமாக தாழ்த்தப்பட்ட, பழங்குடி மற்றும்

www.padippakam.com




சாதி - தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தையொட்டி, விழுப்புரத்தில் நடந்த சாதி - தீண்டாமை மறுப்பு புரட்சிகர மணவிழா!

''சூத்திர'' மக்கள் இதைத் தமது இயக்க மாகக்கருதி அணிதிரள வேண்டும் என் பதே அக்கறையாக இருக்க வேண்டும். அதில்தான் புதிய ஜனநாயகப் புரட்சி யின் வெற்றிக்கான உயிர்நாடியே அடங்கியிருக்கிறது.'' (புதிய ஜனநாயகம், 1-15 மே, 1993 இதழ் கேள்வி - பதில் பகுதி)

தமிழகத்தில் புதிய ஜனநாயகம் மற் றும் இதன் ஆதரவு புரட்சிகர இயக்கங் கள் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் உள்ள நக்சல்பாரிப் புரட்சிக் குழுக்கள் எதுவானாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் பக்கம் நின்று போராடுவதில் இவற் றின் தொடக்க காலம் முதற்கொண்டு உறுதியோடிருக்கின்றன.

ஆனால், அம்பேத்கர் காலத்திற்கு முன்பிருந்தே தாழ்த்தப்பட்ட மக்களின் ஒரு சிறு பிரிவினரைத் தம் பக்கம் திரட்டி வைத்துக் கொண்டு, ஒட்டு மொத்தத் தாழ்த்தப்பட்ட மக்களின் பிர திநிதி என்று பலரும் உரிமை பாராட்டி வந்திருக்கிறார்கள். பிறகு அவர்கள் ஆளும் வர்க்கத்தினரிடம் பேரம் பேசி தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களை அடகு வைத்து சொந்த ஆதாயங்களைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். தாழ்த் தப்பட்டோர் கட்சி என்று அம்பேத்கர் காலத்தில் இருந்து கூறிக் கொள்ளும் குடியரசுக் கட்சியின் பல்வேறு பிரிவுக ளும் ''தலித்'' இயக்கத்தைத் தொடங்கி வைத்த மராட்டிய மாநிலக் குழுக்கள் பலவும் இப்படிச் செய்திருக்கின்றன.

செ.கு. தமிழரசன், சுந்தரராசன், சக் திதாசன், பூவை.மூர்த்தியும் அவர் வாரி சும், வை.பா., இளையபெருமாள், ஜான் பாண்டியன், பசுபதி பாண்டியன் என்று தமிழ்நாட்டிலேயே பலரைக் காண்கிறோம். ''பு.ஜ.''வை நாயே, பேயே என்று ஏசி பிரசுரம் வெளியிட்டி ருக்கும் தமிழ்நாடு பறையர் பேரவை கூட அ.தி.மு.க. - பா.ஜ.க.வின் விசுவா சப் பாதந்தாங்கிகள் தாம்.

தாழ்த்தப்பட்டோர் பெயரில் மட்டு மல்ல, இன்னும் பல்வேறு ஆதிக்க சாதி களின் பிரமுகர்கள் பலர் ஒரு கும்ப லைத் திரட்டி வைத்துக் கொண்டு அந் தந்த சாதிகளின் பிரதிநிதிகள் என்று கூறிக் கொண்டு பிழைப்புவாத - ஆதாய அரசியல் நடத்துகிறார்கள். பசு பதி பாண்டியன், ஜான்பாண்டியன், செல்வப் பெருந்தகை, ஏரணாவூர் நாரா யணன், வெங்கடேசப் பண்ணையார், அயோத்தி குப்பம் வீரமணி - இப்படிப் பலர் அந்தந்தச் சாதிகளின் பெயரால் கிரிமினல் குற்ற நடவடிக்கைகளில் ஈடு படுகின்றனர். இவர்களுக்கு எதிராகப் பேசினாலோ, எழுதினாலோ, போலீசு நடவடிக்கை எடுத்தாலோ கூட தம் சாதி களின் பின்னே ஒளிந்து கொண்டு பாது காப்புத் தேடிக் கொள்கிறார்கள்.

மேற்கண்டவாறான பிரமுகர்கள் எல்லாம், தம், தமது கும்பலுக்கு எதி ரான எல்லா நடவடிக்கைகளையும், விமர்சனங்களையும் தமது ஒட்டு மொத்த சமுதாயம் அல்லது சாதிக்கு எதிரானதாக சித்தரிக்கின்றனர். பா.ம.க. ராமதாஸ் கூட தானும் தனது உறவினர்களும் கோடிகோடியாய் சொத்துக் குவிப்பதற்கும், அதிகாரத் தைப் பெறுவதற்கும் அலையாய் அலை கிறார். ஆனால் வன்னிய சாதிக்கும், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்துக்கும், தமிழினத்துக்கும் பிரதிநிதியாக நின்று பாடுபடுவதாகக் கூறிக் கொள்கிறார்.

இந்த நீண்ட வரிசையில் தொல். திருமாவும் கிருஷ்ணசாமியும் சேர்ந்து கொண்டிருக்கின்றனர். இவர்கள் சார்ந் திருக்கும் சாதிகளின் பிரதிநிதிகள் என்று உரிமை பாராட்டிக் கொள்ளும் வேறு குழுக்களும் கூட உள்ளன. தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலே கூட, ஏதாவது ஒரு உட்சாதிப் பிரிவில், ஒரு பகுதி மக்கள் ஆதரவை மட்டுமே திரட்டி வைத்துக் கொண்டிருக்கும் இவர்கள், அந்த உட்சாதிப் பிரிவின் பிரதிநிதிகள் என்று கூட உரிமை பாராட்டிக் கொள்ள முடியாது; அப்படி இருக்கும்போது இவர்கள் ஒவ்வொரு வரும் தம்மை ''தலித்தின''த் தலைவர்க ள் - பிரதிநிதிகள் என்று எந்த அடிப்ப டையில் கூறிக் கொள்ள முடியும்? ஏற் கெனவே நிரூபணமாகிவிட்ட பிழைப் புவாத - சந்தர்ப்பவாத ''தலித்'' அமைப் புகள், தலைவர்களிடமிருந்து வேறு எந் தவகையில் இவர்கள் இருவரும் மாறு பட்டவர்கள்?

சாதி - தீண்டாமை ஒழிப்பு உட்பட உண்மையான 'தலித்' விடுதலைக்கான திட்டமோ, வழிமுறையோ, கோட் பாடோ எதுவும் இவர்களிடம் கிடை யாது. 'தலித்' பிரதிநிதிகள் என்று கூறிக் கொண்டு ஓட்டுக் கட்சி அரசியலில் சில சமயம் பெட்டிகள் - சில சமயம் ஓரிரு பதவிகள் என்று ஆதாயங்கள் பெறுவது தவிர வேறு நடவடிக்கைகளும் கிடை யாது. பல ''தலித்'' குழுக்கள் பெட்டி யோடு அடங்கிப் போய் விடுகின்றன. ஆனால் தொல். திருமாவளவனும், கிருஷ்ணசாமியும் தாம் அந்த வகை யல்ல; தமக்குப் பதவியும் வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள்.

தங்களுக்குப் பதவி கிடைக்கும் வகையில் மதிக்கும் எந்த ஓட்டுக் கட்சி யுடனும் கூட்டுச் சேரவும், அதன் தலை வர்களை (மூப்பனார், கருணாநிதி, சோனியா, ஜெயலலிதா போன்றவர்க ளைத்) தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடவும் செய்கிறார்கள். தாங்கள் பதவி அடைவதற்குண்டான வாய்ப்புத் தர மறுப்பவர்களைத் தரை மட்டத்துக்கு ஏசுகிறார்கள். அதுமட்டு மல்ல; திருமாவளவன், கிருஷ்ணசா மிக்கு பதவி கிடைக்கும் வாய்ப்பை மறுப்பது என்பது ''தலித்'' மக்கள் அனைவரையும் மதிக்கத் தவறுவதா கும் என்பதாகச் சித்தரிக்கிறார்கள்.

ஓட்டுக் கட்சிகளாவது ஒரு சமயத் தில் இல்லையானாலும் மற்றொரு சம யத்தில் திருமாவளவன், கிருஷ்ணசாமி போன்றவர்கள் பதவி பெறுவதற்கான வாய்ப்புகளைத் தருவதற்கு சம்மதிக் கின்றன. ஆனால், புதிய ஜனநாயகம் போன்ற புரட்சிகர அமைப்புகளிடமி

www.padippakam.com




**ஓட்டுக் கட்சிகளில் காணப்படும் தனிநபர் வழிபாட்டைப் பின்பற்றி, திருமாவளவன் பிறந்த நாளையொட்டி அவரைத் துதிபாடி, தாய்மண் (ஆக. 2003) இதழில் வெளிவந்த விளம்பரம்.**

ருந்து இவர்களுக்குச் சொந்த ஆதாயம் கிடைப்பதற்கான வாய்ப்புகளே கிடையாது; அதோடு இவர்களது சந்தர்ப்பவாத அரசியலை அவ்வப்பொழுது அம்பலப்படுத்தி, சமூக ஆதரவிழக்கச் செய்கின்றன. இதனால் இரட்டை ஆத்திரத்துடன் இந்த அமைப்புகள் மீது பாய்கின்றனர்.

புதிய ஜனநாயகம் போன்ற அமைப்புகள் திருமாவளவன், கிருஷ்ணசாமி ஆகியவர்களின் அரசியல் சந்தர்ப்பவாதங்களையும் பித்தலாட்டங்களையும்தான் தொடர்ந்து விமர்சித்து வருகின்றன. ''தலித்'' மக்களுக்கு எதிராக ஒருபோதும் பேசியதோ, எழுதியதோ, செயல்பட்டதோ கிடையாது. இருந்தபோதும், திருமாவளவன், கிருஷ்ணசாமி ஆகிய தலைவர்களையும் அவர்களுக்குப் பின்புலமாக நிற்கும் கும்பல்களையும் அம்பலப்படுத்துவதையே தலித் மக்கள் அனைவருக்கும், அந்த ஒட்டுமொத்த சமுதாயத்துக்கும் எதிரான நடவடிக்கையாக சித்தரிக்கிறார்கள். இதன் மூலம் எந்தவொரு விமர்சனத்துக்கும் தாங்கள் அப்பாற்பட்டவர்களாக நிறுத்திக் கொள்கிறார்கள்.

இந்தத் ''தலித்'' தலைவர்கள் தங்களைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சமமாக - இணையாகக் காட்டிக் கொள்வது மட்டுமல்ல, இந்தச் சமுதாயத்துக்கு மேலாகவே நிறுத்தி தனிநபர் துதிபாடுவதில்தான் கூடுதலான அக்கறை செலுத்துகிறார்கள். புதிய ஜனநாயகத்தையும், ''தாய் மண்''ணையும் ஒப்பிட்டுப் புரட்டிப் பாருங்கள். புதிய ஜனநாயகத்தில் அரசியல் பிரச்சினைகள் மட்டும்தான் அலசப்படுகின்றன. எந்தவொரு தனிநபர் துதியும் கிடையாது. ஆனால் தாய்மண்ணில் திருமாவளவன் துதி தவிர, அவர் முறைத்துக் கொண்டும், முறுக்கிக் கொண்டும், சீறிக் கொண்டும் ''சிந்தித்து''க் கொண்டும் ''போஸ்'' கொடுத்த புகைப்படங்களும், அரசியல் சவடால்களும், மற்றவர்கள் திருமாவளவன் துதிபாடும் விசயங்களும் மட்டும்தான் நிரம்பி வழிகின்றன.

தமிழகம் முழுவதும் புதிய ஜனநாயகம் சார்பு புரட்சிகர அமைப்புகள் நடத்திவரும் சுவரெழுத்து பிரச்சாரத்தைக் கிண்டலடித்து வன்னிய - தலித் கூட்டுப் பேராசிரியர் கல்யாணி (கல்விமணி) முன்பு கொடுத்த ஒரு பேட்டிச் செய்தியை எடுத்துப்போட்டு மீண்டும் இந்த தலித்தியவாதிகள் கிண்டலடித்து சுயஇன்பம் கண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு மீண்டும் அதே பதிலைச் சொல்கிறோம். எங்கள் சுவரெழுத்து எங்கள் அரசியல் கருத்தைத் தாங்கி எழுதப்படுகின்றனவே தவிர, எந்தவொரு தனிநபர் துதியும் அவற்றில் கிடையாது.

கருணாநிதி, ஜெயலலிதா துதிபாடுவதைப் போன்று கோயாபல்சு பாணியில் அடுத்தடுத்த பலநூறு இடங்களில் திருமாவளவன், கிருஷ்ணசாமி, கிருஷ்ணப் பறையனார், லெமூரியன், பூவை. மூர்த்தி என்று பத்தடிக்கு நூறடி அளவில் தனிநபர் பெயர்களை மட்டும் எழுதும் வக்கிரம் புரட்சிகர அமைப்புகளில் கிடையாது. உண்மையில், மக்களுக்குச் சேவை செய்யும் எந்தவொரு தலைமையும் இத்தகைய வக்கிரங்களையும் தனிநபர் துதிகளையும் சகித்துக் கொண்டிருக்காது.

**(தொடரும்)**

## தவறுக்கு வருந்துகிறோம் சுயவிமர்சனம் ஏற்கிறோம்

ஜூன் 2004 புதிய ஜனநாயகம் இதழில், ''1993 மே நாளன்று ம.க.இ.க. நடத்திய திருவரங்கம் கருவறை நுழைவுப் போராட்டத்தில் கலந்து கொள்ள விரும்பிய இம்மானுவேல் பேரவை மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய குழுக்கள் இறுதி நேரத்தில் பின் வாங்கிக் கொண்டன. நக்சல்பாரிப் புரட்சியாளர்களோடு சேர்ந்து செயல் பட்டால் தாம் ஒடுக்கப்படுவோம் என்று வெளிப்படையாகவே அப்போது அச்சம் தெரிவித்தனர்'' என்று குறிப்பிட்டிருந்தோம்.

இந்தச் செய்தி தவறானது என்று ம.க.இ.க. தலைமை சுட்டிக் காட்டி இருக்கிறது. பு.ஜ. ஆசிரியர் குழுவின் கவனக் குறைவால் இந்த பொறுப்பற்ற தவறு நேர்ந்துள்ளது. 1993 மே நாள் திருவரங்கம் கருவறை நுழைவுப் போராட்டத்தில் இம்மானுவேல் பேரவை சார்பாக தோழர் சந்திரபோஸ் அவர்கள் கலந்து கொண்டு, கைதாகி, சிறை சென்று பங்கேற்றார். பிணையில் விடுதலையான பிறகு நடந்த சிறப்புக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றி இருக்கிறார் என்று அறிகிறோம். விடுதலை சிறுத்தைகள் அமைப்பை சார்ந்த அணிகள் சிலரும் இதில் பங்கேற்றுள்ளனர். அப்படி இருந்தும் அவர்களது ஆக்கபூர்வமான பங்கேற்பை மறுத்துப் பிழையான செய்தி வெளியிட்டது பு.ஜ.வின் பாரிய தவறு என்பதை உணர்கிறோம். தவறிழைத்ததற்காக சுயவிமர்சனம் ஏற்கிறோம். மீண்டும் இதுபோன்ற தவறு நிகழாவண்ணம் பார்த்துக் கொள்கிறோம் என்று உறுதி கூறுகிறோம்.

**- பு.ஜ. ஆசிரியர்குழு**

www.padippakam.com

# அந்நிய மூலதனம் இறக்குமதி இந்தியக் கூலிப்படை ஏற்றுமதி

ஈராக்கை ஆக்கிரமித்துள்ள அமெரிக்க மேலாதிக்கப் படைகளுக்கு உதவியாக இந்திய இராணுவத்தை அனுப்பும் திட்டம் எதுவும் இல்லை என்று இந்திய ஆட்சியாளர்கள் அறிவித்துக் கொண்டிருக்கும்போதே, இந்திய இராணுவத்தைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கானோர் ஈராக்கில் அமெரிக்காவின் கூலிப்படையாகச் சேவை செய்து வருகின்றனர்.

இவர்கள் இந்திய இராணுவத்தில் நேற்றுவரை 'தேசபக்தி'யுடன் சேவை செய்து ஒய்வு பெற்ற முன்னாள் இராணுவத்தினராவர். தனியார் வேலை வாய்ப்பு ஏஜென்சிகள், முன்னாள் இராணுவத்தினரின் நல்வாழ்வு அமைப்புகள் மூலமாக இவர்கள் திரட்டப்பட்டு ஈராக்குக்கு கொண்டு செல்லப்படுகிறார்கள். சாதாரண சிப்பாய்க்கு மாதாந்திர ஊதியம் ரூ. 22,000; கேப்டனுக்கு ரூ. 44,000; கர்னலுக்கு ரூ. ஒரு லட்சம்; பிரிகேடியருக்கு ரூ. 1.5 லட்சம் என்று கொழுத்த ஊதியங்கள் இவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. எத்தனை பேர் ஈராக்கில் அமெரிக்காவின் கூலிப்படையாக உள்ளனர் என்ற முழுமையான கணக்கைக் கண்டறிய இயலாது எனினும், ஏறத்தாழ 1000 பேர் ஈராக்கில் கூலிப்படையினராக இருக்கலாம் என்று முன்னாள் இராணுவத்தினரின் நல அமைப்புகள் கூறுகின்றன.

டெல்லியிலுள்ள ஜெமினி எனும் ஒய்வுபெற்ற இராணுவத்தினருக்கான வேலை ஏற்பாட்டு நிறுவனம், மும்பையிலுள்ள டிரிக் பாதுகாப்புப் படை நிறுவனம் முதலான தனியார் நிறுவனங்கள் கூலிப்படையினரைத் திரட்டி அனுப்பும் வேலையில் ஈடுபட்டு வருகின்றன. ''ஈராக்கில் வேலை வாய்ப்பு உள்ளதாக அறிவித்தவுடன் பல்லாயிரக் கணக்கில் எமது அலுவலகத்துக்கு விண்ணப்பங்கள் குவிகின்றன'' என்கிறார், டிரிக் பாதுகாப்புப் படை நிறுவனத்தின் தலைவரான கேப்டன் சலாரியா. மே - ஜூன் மாதங்களில் முதற்கட்டமாக 350 பேரை ஈராக்கிற்கு அனுப்பவுள்ளதாக அவர் கூறுகிறார். டெல்லியிலுள்ள நிறுவனமோ 500 பேரை அனுப்பப் போவதாகக் கூறுகிறது.

இப்படி அனுப்பப்படும் படைவீரர்களுக்கு ஈராக்கில் என்ன வேலை தரப்படுகிறது என்று கேட்டால், ''ஈராக்கின் எண்ணெய்க் கிணறுகளைப் பாதுகாப்பதிலிருந்து அனைத்து பாதுகாப்புப் பணிகளையும் அவர்கள் செய்ய வேண்டும். எனினும் இவர்கள் அமெரிக்கக் கூட்டணிப் படைகளின் அங்கமல்ல'' என்கின்றன இந்நிறுவனங்கள். ஆனால், ஈராக்கிலுள்ள எண்ணெய்க் கிணறுகளைப் பாதுகாப்பதென்பது வாயிலே ஊதலும் கையிலே தடியும் வைத்துக் கொண்டு சுற்றிவரும் செக்யூரிட்டி பணியாளர் வேலை அல்ல. ஈராக்கிய போராளிகளின் தற்கொலைப் படைத் தாக்குதல், குண்டு வீச்சுத் தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டிய போர்க்களப் பணியாகும். அதாவது, அமெரிக்கப் படைகளின் தலைமையிலான கூலிப்படையின் வேலைதான் அது.

ஆனாலும் வெளிநாட்டில் பாதுகாப்புப் பணிக்கான வேலைவாய்ப்பு என்ற பெயரில் தனியார் ஏஜென்சிகள் முன்னாள் இராணுவத்தினரைத் திரட்டி அனுப்பி வருகின்றன. ஈராக்கிலுள்ள அமெரிக்க, பிரிட்டிஷ் ஆக்கிரமிப்புப் படைகளையடுத்து, இந்தியாவிலிருந்து இத்தகைய தனியார் ஏஜென்சிகள் மூலம் அனுப்பப்படும் கூலிப்படையினர்தான் மூன்றாவது மிகப்பெரிய படையணியாக உள்ளனர் என்று மேலைநாட்டுப் பத்திரிகைகள் கூறுகின்றன. அந்த அளவுக்கு கூலிப்படையினரைத் திரட்டி அனுப்பும் வியாபாரம் சூடாக நடந்து வருகிறது. இத்தனையும் இந்திய அரசுக்கும் இந்திய இராணுவத்துக்கும் தெரிந்தேதான் நடக்கிறது. ஆனாலும் கூலிப்படையினரைத் திரட்டி அனுப்பும் இத்தனியார் ஏஜென்சிகள் மீது இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இத்தனியார் ஏஜென்சிகள் மூலம் திரட்டப்படும் கூலிப்படையினர் நேரடியாக ஈராக்குக்கு அனுப்பப்படுவதில்லை. அப்படிச் செய்தால் இந்திய அரசின் யோக்கியதை அனைத்துலக அரங்கில் அம்பலமாகி சிக்கல்கள் ஏற்படும் என்பதால், இக்கூலிப்படைகள் குவைத்துக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். அங்கிருந்து ஈராக் எல்லை வரை பேருந்தில் பயணம் செய்து, பின்னர் அமெரிக்க காண்டிராக்டர்கள் மூலம் சோதனைச் சாவடிகளைக் கடந்து ஈராக்குக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். இது குவைத் அரசுக்குத் தெரிந்தே அதன் ஒப்புதலுடன்தான் நடக்கிறது. இதுதவிர ஜோர்டான் வழியாகவும் இப்படி சட்டவிரோதமாக கூலிப்படைகள் அனுப்பப்படுகின்றன.

இப்படி அனுப்பப்படும் கூலிப்படையினருக்கு ஒப்பந்தப்படி ஊதியமோ, சலுகைகளோ வழங்கப்படவில்லை என்றும் அத்தனையும் மோசடி என்றும் அம்பலமாகியுள்ளது. கர்னல் டி. கபூர் என்ற முன்னாள்

ஈராக்கில் கூலிப்படையாகச் செயல்பட்டதை புகைப்பட ஆதாரத்துடன் காட்டும் முன்னாள் கர்னல் கபூர்.




படிப்பகம்

www.padippakam.com

இராணுவ அதிகாரி, கடந்த பிப்ரவரியில் சட்டவிரோதமாக ஈராக்குக்கு கூலிப் படையாகச் சென்று, பாஸ்ராவில் ஈராக்கிய போராளிகள் நடத்திய கொரில்லா தாக்குதலில் படுகாயமடைந்து நாடு திரும்பியுள்ளார். ஆனால், தனியார் ஏஜெண்சிகள் ஒப்பந்தப்படி காப்பீடு தொகையோ, மருத்துவ உதவித் தொகையோ வழங்காமல் மோசடி செய்துவிட்டன என்று புலம்புகிறார். அவரைப் போலவே ஈராக்குக்குச் சென்று காயமடைந்து திரும்பிய பல முன்னாள் இராணுவத்தினர் தாம் ஏமாற்றப்பட்டதாக வெதும்புகின்றனர்.

இது ஒருபுறமிருக்க, வெளிநாடுகளில் வேலை தேடும் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள், பணியாளர்களை குவைத்தில் வேலை உள்ளதாகக் கூறி, ஈராக்குக்குக் கடத்திச் செல்லும் கொடுமையும் நடக்கிறது. கேரளத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலரை குவைத்தில் வேலை உள்ளதாகக் கூறி ஒரு தனியார் ஏஜெண்சி அழைத்துச் சென்றது. பின்னர் அங்கிருந்து ஈராக்கிற்குக் கொண்டு செல்லப்பட்ட அவர்கள், அமெரிக்க இராணுவ முகாம்களில் வேலை செய்ய நிர்பந்திக்கப்பட்டனர். அங்கு அவர்கள் துப்புரவுப் பணியிலிருந்து சமையல் வேலைவரை அனைத்தையும் செய்ய வேண்டியதாயிற்று. அதிகாலை முதல் நள்ளிரவு வரை வேலை செய்து கொத்தடிமைகளாக உழன்ற அவர்களுக்கு மீதமிச்சமான உணவுகள்தான் தரப்பட்டன. இக்கொத்தடிமைக் கொடூரத்தை எதிர்த்து அவர்கள் வாய்திறக்கவும் முடியாது. அப்படி ஏதாவது செய்தால் இந்த கதிதான் உங்களுக்கு ஏற்படும் என்று ஒரு தெருநாயை சுட்டுக் கொன்று எச்சரித்தானாம், அமெரிக்க இராணுவ முகாமைச் சேர்ந்த ஒரு அதிகாரி. உடல் நலிவுற்று வேலை செய்ய முடியாத நிலை ஏற்பட்ட பின்னரே அவர்கள் திருப்பியனுப்பப்பட்டுள்ளனர்.

உலக மேலாதிக்க வல்லரசான அமெரிக்காவுக்கு விசுவாசமாக, ஐ.நா. மன்றத்தின் அனுமதியோடு அமைதிப் படை என்ற பெயரில் உலகெங்கும் அடியாட்படைகளை அனுப்பி வந்த இந்திய அரசு, இப்போது சட்ட விரோதமான வழிகளிலும் அச்சேவையைத் தொடர்கிறது. உலகமயமாக்கம் என்பது வெறுமனே சரக்கு உற்பத்தி, உழைப்புப் பிரிவினை, சந்தை ஆகியவற்றை உலகு தழுவிய ரீதியில் ஏகாதிபத்தியங்கள் முறைப்படுத்திக் கொள்ளும் திட்டம் மட்டுமல்ல. அது உழைப்பாளிகளையும் ஒரு சரக்காகத்தான் கருதுகிறது. கச்சாப் பொருட்களைப் போலவே, உழைப்பாளிகள் ஏற்றுமதியும் கூலிப்படைகள் ஏற்றுமதியும் நடக்கிறது. அமெரிக்காவின் உலக மேலாதிக்க உழைப்புப் பிரிவினையின்படி, ஆக்கிரமிப்புப் படையின் தலைமைப் பொறுப்பு அமெரிக்காவுக்கு; அடியாள் படை வேலை இந்தியா போன்ற அடிமை நாடுகளுக்கு.

இத்திட்டத்தின் படியே புதிய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங், ஈராக்குக்கு இந்தியப் படைகளை அனுப்பப் பரிசீலிப்பதாக ஏகாதிபத்திய வாதிகளிடம் வாக்குறுதி அளித்துவிட்டு, பின்னர் உள்நாட்டில் எதிர்ப்புகள் வந்ததும் தான் அப்படிப் பேசவில்லை என்று மழுப்புகிறார். ஈராக்கில் ஒரு இடைக்கால அரசு நிறுவப்பட்ட பிறகு, ஐ.நா. மன்றம் அமைதிப் படைகளை அனுப்பக் கோரினால் அனைத்து கட்சிகளின் பொதுக் கருத்தின் அடிப்படையில் ஈராக்குக்கு இந்தியப் படைகள் அனுப்பப்படும் என்கிறார். ஈராக்கில் இப்போது இடைக்கால பொம்மையாட்சி திணிக்கப்பட்டு விட்டது. அமைதிப்படை என்ற பெயரில் இந்தியப்படைகளை அனுப்புவதில் ஆளும் வர்க்கக் கட்சிகளுக்கிடையே கருத்து வேறுபாடு எதுவும் கிடையாது. இனி ஐ.நா. மன்ற ஒப்புதல் மட்டும் தான் பாக்கியிருக்கிறது.

சட்டபூர்வமாகவோ, சட்டவிரோதமாகவோ ''அமைதிப்படை'', ''பாதுகாப்புப்படை'' என்ற பெயர்களில் கூலிப்படை வேலை செய்வது என்பது அனைத்துலக மக்களின் விடுதலை உணர்வுக்கும் நாடுகளின் சுயாதிபத்திய உரிமைக்கும் எதிரான கடைகோடித்தனமான இழிசெயலாகும். இந்திய அரசின் இந்த அநீதியான, ஜனநாயக விரோத அடியாள் வேலையை இந்திய உழைக்கும் மக்கள் அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும்.

சட்டபூர்வமாகவும் சட்டவிரோதமாகவும் அமெரிக்க எஜமானர்களுக்கு விசுவாச சேவை செய்வதன் மூலம் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர் பதவியைப் பெறவும் தெற்காசிய பிராந்தியத்தில் ஏகாதிபத்திய கட்டளையை நிறைவேற்றும் நம்பகமான துணை வல்லரசாக அங்கீகாரம் பெறவும் இந்திய ஆட்சியாளர்கள் துடிக்கின்றனர். இந்தியாவுக்கு இந்த ''பம்பர் பரிசு'' கிடைக்கிறதோ, இல்லையோ; ஈராக்குக்கு அமெரிக்காவின் அடியாள்படையாகச் செல்லும் இந்தியக் கூலிப்படையினருக்கு உரிய 'பரிசு' தர ஈராக்கிய போராளிகள் தயாராகவே உள்ளனர்.

● குமார்

# கல்விக் கொள்ளைக்கு எதிராக மாணவனின் கலகம்

**வே**லியே பயிரை மேயும் கதைதான். இளம் மாணவர்களைக் கொண்டு நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்தோடு அன்பும் பண்பும் கொண்டு அறிவு புகட்ட வேண்டிய ஆசிரியர்களின் கொடுமையால், அவர்கள் சாவின் விளிம்புக்குத் தள்ளப்படுகிறார்கள்.

கோவை நகருக்கு அருகே வடவள்ளி பகுதியில் உள்ளது மருதமலை சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான மேல்நிலைப் பள்ளி. அதில் ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் தங்கராசு மற்றும் ஆறாம் வகுப்புப் படிக்கும் அவன் தம்பி ஆகியோரிடம் 600 ரூபாய் கட்டாய நன்கொடை கேட்டுப் பள்ளி நிர்வாகம் கெடுபிடி செய்தது. சவுரி முடி செய்தும், வீட்டு வேலை செய்தும் பிழைக்கும் அவர்களது பெற்றோர்களால் அவ்வளவு தொகையை உரிய நேரத்தில் செலுத்த முடியாமல் போனது. அதற்குத் தண்டனையாக வகுப்புக்கு வெளியே நிறுத்தப்பட்டான். அவமானப்பட்டு மனமுடைந்த மாணவன் தங்கராசு பள்ளிக்கு அருகில் உள்ள அரளிச் செடியின் நச்சு விதையைத் தின்று வாந்தியெடுத்து மயங்கி விழுந்தான்.

வீட்டு வேலை செய்யுமிடத்தில் கடன் வாங்கிக் கொண்டு பள்ளிக்கு விரைந்தோடி வந்த தங்கராசின் தந்தை மயங்கிக் கிடந்த மகனை வாரிக் கொண்டு போனார். நன்கொடை செலுத்த வைத்திருந்த பணத்தை மருந்துச் செலவுக்கு பயன்படுத்த வேண்டிப் போனது. தங்கராசுக்குப் பக்கத்திலேயே கிணத்துக்கடவு அரசு மேல்நிலைப்பள்ளியில் 12-ஆம் வகுப்புப் படிக்கும் மாணவன் காமராசவும் பூச்சி மருந்தைக் குடித்துத் தற்கொலை செய்து கொள்ள முயன்று, மருத்துவமனையில் கிடக்கிறான். கழிப்பிட வசதி உட்பட சில கோரிக்கைகளை முன்வைத்துப் போராடிய மாணவர்களுக்கு முன்நின்ற காமராசுவை தலைமை ஆசிரியை போலீசை வைத்து ''உள்ளே'' தள்ளி விடுவதாக அவமானப்படுத்தியுள்ளார்.

இந்த இரண்டு விவகாரங்களிலும் பள்ளி நிர்வாகத்தோடு, பெற்றோர் - ஆசிரியர் கழகம் என்ற கருங்காலிக் கூட்டமும், வெற்றுத் தாளில் கையொப்பம் பெற்று போலீசும் உடந்தையாக இருந்திருக்கிறது. இக்கொடுமைகளுக்கு எதிராக புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியும், இந்திய மாணவர் சங்கமும் சுவரொட்டி போட்டு, ஆர்ப்பாட்டம் நடத்தி எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

*தகவல்:*
*பு.ஜ. செய்தியாளர், கோவை.*


படிப்பகம்

www.padippakam.com

# ஏகாதிபத்தியங்களைக் குலை நடுங்க வைத்த தியன் பியன் ஃபூ வெற்றியை நினைவுகூர்வோம்!

தியன் பியன் ஃபூ - வியட்நாமின் வடபகுதியிலுள்ள சின்னஞ்சிறு நகரம். அதன் பெயரைக் கேட்டாலே ஏகாதிபத்தியவாதிகள் இன்னமும் நடுநடுங்குகின்றனர். அங்குதான் வியட்நாம் கம்யூனிஸ்டுகள் தலைமையிலான மக்கள் படை, பிரெஞ்சு காலனியாதிக்கப் படைகளின் முதுகெலும்பை முறித்து மண்டியிடச் செய்து, தேசவிடுதலைப் போரில் மகத்தான வெற்றியைச் சாதித்தது. கடந்த மே 7-ஆம் நாளன்று, இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்த தியன் பியன்ஃபூ வெற்றியின் ஐம்பதாண்டு நிறைவு நாளை உலகெங்கிலுமுள்ள கம்யூனிஸ்டுகளும் ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களும் உழைக்கும் மக்களும் பேருற்சாகத்துடன் கொண்டாடி நினைவு கூர்ந்தனர்.

இரண்டாம் உலகப் போரின் இறுதியில், ஜப்பானிய காலனியாதிக்கத்துக்கு எதிராக கம்யூனிஸ்டுகளும் நாட்டுப்பற்று கொண்டோரும் இணைந்து ஆயுதமேந்தி போராடி, வியட்நாமின் வடபகுதியை விடுதலை செய்து புதிய புரட்சிகர அரசை தோழர் ஹோசிமின் தலைமையில் 1945-இல் நிறுவினர். உலகப் போரில் தோல்வியடைந்த ஜப்பானிய ஏகாதிபத்தியத்தின் முன்னாள் காலனிய நாடுகளை மீண்டும் கைப்பற்றிக் கொள்ளும் வெறியோடு ஓடோடி வந்த பிரெஞ்சு ஏகாதிபத்தியம், வியட்நாமில் புரட்சியாளர்களைப் படுகொலை செய்து, புதிய சுதந்திர அரசைக் கவிழ்த்து அந்நாட்டை ஆக்கிரமித்தது. பிரெஞ்சு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக, கம்யூனிஸ்டுகளும் நாட்டுப்பற்று கொண்டோரும் ஐக்கியப்பட்டு மக்கள் படையைக் கட்டியமைத்து உறுதியாகத் தொடர்ந்து போராடினர்.

தியன் பியன் ஃபூ என்பது வியட்நாமின் வடபகுதியில் லாவோசை ஒட்டியுள்ள சமவெளிப் பகுதியிலுள்ள சிறு நகரமாகும். அங்கே பெரும்படைகளைக் குவித்து தமது கோட்டையை நிறுவிய பிரெஞ்சு காலனியவாதிகள், இந்தோ-சீன தீபகற்பத்தை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கான போர்த் தந்திர முக்கியத்துவமிக்க தளமாக தியன் பியன் ஃபூ-வைப் பயன்படுத்தினர். ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக மக்களை அரசியல்படுத்தி, அமைப்பாக்கி, புரட்சிகர எழுச்சிகளினூடாகத் தற்காப்பு படைக் குழுக்களைக் கட்டியமைத்து, அதன் தொடர்ச்சியாக கொரில்லா குழுக்களையும், மக்கள் படையையும் நிறுவி வியட்நாமிய கம்யூனிஸ்டுகள் தீரத்துடன் போரிட்டனர். அண்டை நாடான லாவோசின் கம்யூனிஸ்டுகள் தலைமையிலான மக்கள் படையும் வியட்நாமிய மக்கள் படையுடன் இணைந்து பிரெஞ்சு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போராடியது.

1954-ஆம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து வியட்நாமிலும் லாவோசிலும் ஐந்து முனைகளில் பிரெஞ்சு ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராகப் போர்த் தாக்குதல் தொடுத்து முன்னேறிய மக்கள் படை, மார்ச் 13-ஆம் நாளன்று தியின் பியன் ஃபூ-வை சுற்றி வளைத்து முற்றுகையிட்டது. பிரெஞ்சுப் படைகளை மீட்க அமெரிக்கா இராணுவ உதவிகளைச் செய்தது. அவற்றை முறியடித்து முன்னேறிய மக்கள் படைக்கு உதவியாக, தடுப்பரண்களையும் பதுங்கு குழிகளையும் அமைப்பதிலிருந்து உணவு தயாரிப்பது வரை அனைத்தையும் வியட்நாமிய உழைக்கும் மக்கள் செய்து கொடுத்து பின்னணிப் படையாகத் திகழ்ந்தனர். 55 நாட்கள் நீடித்த இந்த முற்றுகைப் போரில் தாக்குப் பிடிக்க முடியாமல் பிரெஞ்சுப் படைகள் மே 7-ஆம் நாளன்று வியட்நாமிய மக்கள் படையிடம் சரணடைந்தன.

தியன் பியன் ஃபூ வெற்றியானது, காலனியாதிக்கத்துக்கு விழுந்த மரண அடி. இந்த வெற்றி உலகைக் குலுக்கியது. ஒரு சிறிய நாடு மிகப் பெரிய ஏகாதிபத்திய நாட்டை வெல்ல முடியும்;

தோழர் ஹோசிமின் மற்றும் பிற தோழர்களுடன் தியன் பியன் ஃபூ முற்றுகைக்கு இராணுவ செயல்தந்திர வியூகம் வகுக்கும் போராளி கியாப் (வலது ஓரம்).





படிப்பகம்

www.padippakam.com

இறுதியில் பார்க்கப் போனால், எல்லா ஏகாதிபத்தியங்களும் காகிதப் புலிகளே என்ற மாவோவின் கூற்றை, தியன் பியன் ஃபூ-வின் வெற்றி மீண்டும் உண்மையென நிரூபித்துக் காட்டியது. இந்த வெற்றியானது, காலனியாதிக்கத் தளையில் உழன்ற கோடிக்கணக்கான உழைக்கும் மக்களை விழிப்புறச் செய்து, புதிய நம்பிக்கையை விதைத்தது. தியன் பியன் ஃபூ வெற்றியானது, வட வியட்நாமில் தோழர் ஹோசிமின் தலைமையில் நிறுவப்பட்ட புதிய புரட்சிகர அரசை ஜெனிவா மாநாட்டின் மூலம் அனைத்துலக அரங்கில் அங்கீகரிக்கச் செய்தது.

**தியன்பியன்ஃபூ வெற்றியானது, ஒரு சிறிய நாடு மிகப் பெரிய ஏகாதிபத்திய நாட்டை வெல்ல முடியும்; இறுதியில் பார்க்கப் போனால், எல்லா ஏகாதிபத்தியங்களும் காகிதப் புலிகளே என்ற மாவோவின் கூற்றை, மீண்டும் உண்மையென நிரூபித்துக் காட்டியது.**

ஏகாதிபத்தியவாதிகளை புறமுதுகிட்டு ஓடவைத்து தியன் பியன் ஃபூ வெற்றியைச் சாதித்த மக்கள் படையின் தளபதி யார் என்று உலகமே வியந்து நோக்கியது. நீண்டகால மக்கள் யுத்தப் பாதையில் புதிய இராணுவ செயல்தந்திரங்களை வகுத்து, மக்கள் படையை வழிநடத்திய அவர்தான் தோழர் வோ நகுயென் கியாப். அவர், இராணுவக் கல்விக் கழகத்தில் சேர்ந்து கற்றவரோ, பிற்போக்கு ஆட்சியாளர்களின் படைகளில் முன்பு பொறுப்பிலிருந்தவரோ அல்ல. நாட்டு விடுதலையின் மீதும் கம்யூனிச இலட்சியத்தின் மீதும் மாளாக் காதல் கொண்ட எளிய மனிதரான அவர், ஒரு வரலாற்று ஆசிரியர்! இத்தகைய அற்புதங்களையும் அதிசயங்களையும் கம்யூனிஸ்டுகளால் மட்டுமே சாதிக்க முடியும் என்பதை வீரஞ்செறிந்த வியட்நாம் உலகிற்கு உணர்த்தியது.

வியட்நாமின் தேச விடுதலைப் போரில் தியன் பியன் ஃபூ வெற்றி முதற் கட்டம். 1945-லிருந்து 1954 வரை நடந்த இப்போரைத் தொடர்ந்து, 1975 வரை அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக வியட்நாமிய மக்கள் கம்யூனிஸ்டுகள் தலைமையில் அளப்பரிய தியாகத்துடனும் வீரத்துடனும் போராடினர். 1975 ஏப்ரல் 30-ஆம் நாளன்று உலகின் மிகப்பெரிய அமெரிக்க வல்லரசின் முதுகெலும்பு வியட்நாமிய மக்களால் முறிக்கப்பட்டு, தென் வியட்நாமில் அதன் பொம்மையாட்சி தூக்கியெறியப்பட்டது. அன்றைய தலைநகர் சைகோனிலிருந்து அமெரிக்க 'சூரப்புலிகள்', கல்லடிபட்ட நாயைப் போல அலறியடித்துக் கொண்டு தப்பியோடினர். அதைத் தொடர்ந்து வட - தென் வியட்நாம் ஐக்கியப்பட்டது. வீர வியட்நாம் விடுதலையடைந்தது. நாபாம் குண்டுகளாலோ, இரசாயன யுத்தங்களாலோ, பயங்கரவாதப் படுகொலைகளாலோ எந்தவொரு நாட்டையும் மக்களையும் அடிமைப்படுத்தி விட முடியாது என்பதை ஏகாதிபத்தியங்களுக்கு உணர்த்திய இந்த வெற்றியானது, தென்கிழக்காசியாவில் காலனியாதிக்கத்துக்கு சாவு மணியடித்தது. வியட்நாமைத் தொடர்ந்து அதன் அண்டை நாடுகளான லாவோசும் கம்போடியாவும் காலனியாதிக்கத்தை முறியடித்து விடுதலையடைந்தன. ஏகாதிபத்தியத்துக்கும் காலனியாதிக்கத்துக்கும் எதிரான போராட்ட உணர்வுக்குப் புதுரத்தம் பாய்ச்சின.

தியன்பியன்ஃபூ வெற்றியின் ஐம்பதாண்டு நிறைவு நாள் விழாவில் பங்கேற்ற 92 வயதான ஜெனரல் கியாப், "எந்தவொரு நாடும் மற்றொரு நாட்டின் மீது தனது ஆதிக்கத்தைத் திணித்தால், அது நிச்சயம் தோல்வியுறும். இன்று ஈராக்கை ஆக்கிரமித்துள்ள அமெரிக்கா நிச்சயம் தோல்வியைத் தழுவும். சுதந்திரத்துக்காகப் போராடி வரும் அனைத்து அடிமைப்பட்ட நாடுகளும் இறுதியில் வெற்றி வாகை சூடும்" என்று நம்பிக்கையோடு சூளுரைத்துள்ளார்.

அது வெறும் குருட்டு நம்பிக்கை யல்ல; செயலுக்கான ஓர் அறைகூவல். ஏனெனில், ஏகாதிபத்தியங்கள் உள்ள வரை காலனியாதிக்கத்தையும் ஆக்கிரமிப்புப் போர்களையும் ஒருக்காலும் ஒழித்துவிட முடியாது. உலக வர்த்தகக் கழகம், ஐ.எம்.எஃப், உலக வங்கி ஆகியவற்றை தனது முப்பெரும் ஆதிக்கக் கருவிகளாகக் கொண்டு உலகை மேலாதிக்கம் செய்து வரும் ஏகாதிபத்தியவாதிகள், இன்று மேற்காசியாவைக் குறிவைத்து தமது முதலாவது போர் முனையைத் தொடங்கி ஈராக்கை ஆக்கிரமித்துள்ளனர். பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் இராணுவக் கூட்டுகள் அமைத்துள்ள அமெரிக்க வல்லரசு, தனது இரண்டாவது போர் முனையை தென்கிழக்காசியாவில் நிறுவவும் தீவிர முயற்சியில் இறங்கியுள்ளது. தெற்காசியாவில் அமெரிக்காவின் விசுவாச கைக்கூலிகளாக இந்திய ஆட்சியாளர்கள் சேவை செய்து வருகின்றனர்.

20-ஆம் நூற்றாண்டானது, காலனியாதிக்க எதிர்ப்பு புரட்சிப் போர்களின் நூற்றாண்டாகத் திகழ்ந்தது. 21-ஆம் நூற்றாண்டை, காலனியாதிக்கத்தையும் ஏகாதிபத்தியங்களையும் இப்புவிப் பரப்பிலிருந்தே தூக்கியெறியும் புரட்சியின் நூற்றாண்டாக மாற்றியமைக்கும் மகத்தான கடமை புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் கைகளில்தான் உள்ளது.

தியன் பியன் ஃபூ வெற்றியின் ஐம்பதாண்டு நினைவை நெஞ்சிலேந்தி, காலனியாதிக்கவாதிகளுக்கும் அவர்களது கைக்கூலிகளுக்கும் எதிரான போரை முன்னெடுத்துச் செல்வதும், உலகெங்கும் காலனியாதிக்கத்துக்கு எதிராகப் போராடிவரும் கோடானுகோடி உழைக்கும் மக்களுடன் தோளோடு தோள் சேர்ந்து போராடுவதுமே இன்றைய அவசியமாக உள்ளது.

● பாலன்

---

தலையங்கம் தொடர்ச்சி

கூட்டம். சென்னையைச் சேர்ந்த ஒரு தன்னார்வ அமைப்பு, மேட்டுக்குடி செய்தி ஊடகத்தின் உதவியோடு இந்த வேலையில் ஈடுபட்டுள்ளது.

காவிரிப் பிரச்சினையில் கர்நாடகாவின் அடாவடித்தனத்தைப் போலவே ஓட்டுக் கட்சிகளின் துரோகத்தையும் மத்திய அரசின் நயவஞ்சகத்தையும் கடுமையாக எதிர்த்து முறியடிக்க வேண்டியதாக உள்ளது. காவிரியில் தமிழகத்திற்குள்ள உரிமைகளை நிலைநிறுத்துவதற்கு தனது அதிகாரத்தைப் பயன்படுத்த மறுக்கும் மத்திய அரசு, தமிழகத்தின் மீது வரிவசூல் உட்பட எந்தவொரு அதிகாரத்தையும் செலுத்துவதற்கு மட்டும் உரிமை இருக்கலாமா? இந்த நிலையெடுத்து மத்திய அரசின் அதிகார அமைப்புகள் செயல்பட முடியாமல் தொடர் முற்றுகைப் போராட்டங்கள் நடத்தி நிர்பந்திக்க வேண்டும். அப்போதும் தமிழகத்தின் உரிமைகள் மறுக்கப்படுமானால், அசாம் மாநில மக்கள் பெட்ரோலிய எண்ணெய், பிளைவுட் போன்ற இயற்கை வளங்களை மத்திய அரசு அள்ளிச் செல்வதைத் தடுத்து, தகர்த்ததைப் போன்று இங்கும் பெருந்திரளான மக்களைத் திரட்டிபோர்க்குணமிக்க போராட்டங்களைச் செய்ய வேண்டும். ●

www.padippakam.com

# தமிழ் தேசப் பொதுவுடைமைக் கட்சி முரண்பாடுகளின் மூட்டை

தமிழின தன்னுரிமை, தமிழின விடுதலை ஆகியவற்றை இலட்சியமாகக் கொண்டுள்ள தமிழினவாதிகள் சிலர், பெ. மணியரசன் தலைமையிலான தமிழ்தேசப் பொதுவுடைமைக் கட்சி மீது இன்னமும் நம்பிக்கை வைத்துள்ளனர். ஆனால் தன்னுரிமை, த.தே.பொ.க.வின் இலட்சியமல்ல; மாறாக, அது பிழைப்புவாத - சந்தர்ப்பவாத வழிமுறையாகவே உள்ளது. இதை த.தே.பொ.க. உருவான காலத்திலிருந்தே நாம் தொடர்ந்து அம்பலப்படுத்தி வருகிறோம். பெ. மணியரசன், சுப.வீ., தியாகு, நெடுமாறன் ஆகிய தமிழினக் குழுக்களின் தலைவர்கள் நடத்திய மார்வாடி எதிர்ப்புப் போராட்டத்தையொட்டி, ''மார்வாடி எதிர்ப்பில் மறைக்கப்படும் உண்மைகள்'' என்ற கட்டுரை மூலமும், அதைத் தொடர்ந்து மணியரசன் குழுவின் பொய்கள் - அவதூறுகளை அம்பலப்படுத்தி 1994-ஆம் ஆண்டு புதிய ஜனநாயகம் இதழில் தொடர் கட்டுரையும் வெளியிட்டோம்.

அன்று மார்வாடி எதிர்ப்புச் சவடாலடித்த இவர்கள், அக்கொள்கையை வசதியாக குப்பைக் கூடையில் வீசியெறிந்து விட்டு, இப்போது மார்வாடிகள் உள்ளிட்ட அனைத்து வெளிநாட்டவர் - வெளிமாநிலத்தவர் தமது தொழில் - வணிகத்தில் 33% மூலதனப் பங்காளிகளாகத் தமிழர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று தட்டைத் திருப்பித் தாளம் போடுகின்றனர். இந்த லட்சணத்தில் பு.ஜ. மீதும் மார்க்சிய - லெனினிய புரட்சிகர இயக்கங்கள் மீதும் தொடர்ந்து பொய்கள் - அவதூறுகளைப் பொழிந்து, தனது பிழைப்புவாத - சந்தர்ப்பவாதக் கொள்கைகளுக்கு முட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறது இக்குழு.

இந்நிலையில், த.தே.பொ.க. தனது ஏடான தமிழர் கண்ணோட்டம் சார்பில், ''தமிழர் கண்ணோட்டம் திறனாய்வு கூட்ட''த்தை 17.4.04 அன்று தஞ்சையில் நடத்தியது. இக்கூட்ட அறிவிப்பு துண்டறிக்கையில் பார்வையாளர் கேள்விகளுக்கு ஆசிரியர் பெ. மணியரசன் விடையளிப்பார் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், அக்கூட்டத்தில் பார்வையாளர்கள் எழுப்பிய அடிப்படையான, சித்தாந்த ரீதியான, அரசியல் விவகாரங்கள் தொடர்பான கேள்விகளுக்கு விடையளிக்காமல், ''பத்திரிகையின் வளர்ச்சிக்கு உதவும் ஆலோசனைகள் பெறத்தான் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டதேயொழிய, சித்தாந்த விவாதங்கள் செய்ய அல்ல'' என்றார், பெ. மணியரசன்.

இக்கூட்டத்தில், ''தமிழர் கண்ணோட்டத்திற்கு சில கேள்விகள்'' என்ற தலைப்பில் எட்டு கேள்விகளுடன் ம.க.இ.க. துண்டறிக்கையை விநியோகித்தது. தமிழர் கண்ணோட்ட ஆசிரியரோ, 'திறனாய்வாளர்'களோ, தமது ஏட்டில் ம.க.இ.க. பற்றி எழுதிய தொடர்கட்டுரை பற்றியோ, இக்கூட்டத்தில் ம.க.இ.க. விநியோகித்த துண்டறிக்கையில் உள்ள கேள்விகளுக்கோ விடையளிக்காமல் அதைப்பற்றி பேசாமல் நழுவிக் கொண்டனர்.

ம.க.இ.க.வின் துண்டறிக்கை, த.தே.பொ.க. மீது இன்னமும் குருட்டு நம்பிக்கை வைத்துள்ளவர்களை விழிப்புறச் செய்து, தமிழின விடுதலைக்கான சரியான புரட்சிகரமான பாதையை வந்தடைய உதவும்; த.தே.பொ.க. பற்றி இதுவரை அறிந்திராத வாசகர்களுக்கு அதன் யோக்கியதையைப் புரிந்து கொள்ள உதவும். இந்த நம்பிக்கையோடு இத்துண்டறிக்கையை முழுமையாக வெளியிடுகிறோம்.

*- ஆசிரியர் குழு*

## தமிழர் கண்ணோட்டத்திற்கு சில கேள்விகள்

*1. ''இந்திய தேசியத்தை யார் ஆதரித்தாலும் அவர்கள் பார்ப்பனியத்தை ஆதரிக்கிறார்கள் என்றுதான் பொருள். புரட்சிக்கு எதிராக இருக்கிறார்கள் என்றுதான் பொருள்''*
*(தமிழர் கண்ணோட்டம், அக்டோபர் '03)*

அகில இந்திய தேசியத்திற்கு (காங்கிரசு தி.மு.க. கூட்டணிக்கு) ஓட்டுக் கேட்கும் திரு. பழ. நெடுமாறன், சுப.வீ. ஆகியோரை ''பார்ப்பனிய தாசர்கள்'' என்று அறிவிக்கத் தயாரா?

தமிழர் கண்ணோட்டத்தின் அளவுகோலின்படி பார்ப்பனிய தாசரான திரு. தஞ்சை இராமமூர்த்தியை (காங்கிரசுக்காரர்) ''தமிழர் கண்ணோட்டம் திறனாய்வுக் கூட்டத்திற்குத்'' தலைவராகப் போட்டது ஏன்?

*2. ''தி.மு.க. தலைமை எந்த எல்லைவரை வைகோவின் ஈழ விடுதலை ஆதரவை அனுமதிக்கும்? அதேபோல் வைகோவின் பார்ப்பனிய எதிர்ப்பை - காஞ்சி மடாதிபதி எதிர்ப்பை - எந்த எல்லைவரை ஆதரிக்கும்''*
*(த.க. மார்ச் 2004)*

தே.ஜ.மு. கூட்டணியிலிருந்து விலகிய பின்னரும், தீவிர ஆர்.எஸ்.எஸ்.காரரான வாஜ்பாயை நல்லவர் என்று பேசும் வைகோவை, குஜராத்தில் 2000 முஸ்லீம்களை உயிரோடு எரித்த இந்து மதவெறியர்களுக்கு வக்காலத்து வாங்கிய வைகோவை, பார்ப்பனிய எதிர்ப்பாளர் போலவும், அவரை கருணாநிதி அனுமதிக்க மாட்டார் என்பது போலவும் சித்தரிப்பது மோசடியா? இல்லையா?

வைகோ எந்தக் காலத்தில் சங்கராச்சாரியை எதிர்த்தார்?

3. பார்ப்பனிய எதிர்ப்பில் எள் முனையளவும் சமரசமின்றிப் போராடும் ம.க.இ.க.வை 'பார்ப்பன சக்திகள்' என அவதூறு பரப்பும் தமிழர் கண்ணோட்டம், வெளிப்படையாகவே பார்ப்பன கும்பலுடன் (பா.ஜ.க.) கூடிக் குலாவும் ம.தி.மு.க., பா.ம.க., தி.மு.க. போன்ற கட்சிகளை பார்ப்பன சக்திகள் எனக் கூறாதது ஏன்?

*4. ''ம.க.இ.க. பார்ப்பனியத்தை வீழ்த்த வேண்டும் என்று நமது குரலிலும் பேசும். பார்ப்பன ஆதிக்கத்தை வீழ்த்தும் இட ஒதுக்கீட்டை எதிர்க்க வேண்டும் என்று பார்ப்பனியக் குரலிலும் பேசும்''* *(த.க. ஏப்ரல் '03)*

ம.க.இ.க. இட ஒதுக்கீட்டை எதிர்ப்பதாகக் கூறுவது முழுப் பொய். இன்னொரு பொய், பார்ப்பன ஆதிக்கத்தை இட ஒதுக்கீடு வீழ்த்தும் என்பது.

- பெரியார் வாழ்ந்த காலத்தோடு ஒப்பிட்டால் தற்போது இடஒதுக்கீடு மூலம் அரசுப் பணிக்குத் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்டவர்கள் கணிசமாக வேலைக்குச் சென்றுள்ளனர். தமிழர் கண்ணோட்டக் கூற்றுபடிப் பார்த்தால் பார்ப்பனிய சாதிய ஒடுக்குமுறை, பார்ப்பன பண்பாட்டு ஆக்கிரமிப்பு, ஆர்.எஸ்.எஸ். இந்துமதவெறி


படிப்பகம்

www.padippakam.com

அமைப்புகளின் வளர்ச்சி ஆகியவை குறைந்திருக்க வேண்டும். குறைந்திருக்கிறதா? வளர்ந்தி ருக்கிறதா?

• இட ஒதுக்கீடு மூலம் பலன்பெற்ற மலைச்சாமி ஐ.ஏ.எஸ்., பொன்.பரமகுரு, ஐ.பி.எஸ்., சேதுராமன் எம்.பி.பி.எஸ்., ராமதாஸ் எம்.பி.பி.எஸ்., பேராசிரியர் தீரன், இந்தியன் வங்கி கோபாலகிருஷ்ணன் போன்றோர் சாதிவெறியர்களாகச் சீரழிந்ததும், அரசு ஊழியர்கள் சாதி ரீதியாகச் சங்கம் வைத்துக் கொள்வதும் பார்ப்பனிய வீழ்ச்சியா? மீட்சியா?

• திண்ணியத்தில் மலம் தின்னவைத்தவனும், சேலத்தில் பள்ளிச் சிறுமி தனத்தின் கண்ணைக் குருடாக்கியவனும் இட ஒதுக்கீட்டால் பலன் பெற்ற ஆசிரியர்கள்தானே! (ஏதோ விதிவிலக்கென மழுப்ப வேண்டாம், பெரும்பான்மையாக அரசுப் பணியில் உள்ளவர்கள் சாதிப்பித்துக் கொண்டவர்கள் என்பதை மறைக்க வேண்டாம்.)

செஞ்சி ராமச்சந்திரன் பார்ப்பன வாஜ்பாய் காலிலும், தடா பெரியசாமி மற்றும் மந்திரிகள் பார்ப்பன ஜெயலலிதா காலிலும் வீழ்ந்தது பார்ப்பனிய வீழ்ச்சியா? பார்ப்பனிய வளர்ச்சியா?

கரும்பு விவசாயிகளைக் கசக்கிப் பிழியும் பொள்ளாச்சி மகாலிங்கம், சிறு வியாபாரிகளை கபளிகரம் செய்யும் சரவணா ஸ்டோர் முதலாளி, நல்லி குப்புசாமி செட்டி, வி.வி.டி. ஆனந்தம் முதலாளி ஆகியோர் பார்ப்பன ஆர்.எஸ்.எஸ். மதவெறி அமைப்புகளின் வளர்ச்சிக்கு புரவலர்களாக இருக்கிறார்களே, அதன் சூட்சுமம் என்ன?

*5. ''ஒரு இயக்கம் சமர்க் காலச் சூழலில் ஜனநாயகத்திற்கு புறம்பாக சில செயல்களில் ஈடுபட்டு இருந்தால் அவற்றைக் காரணம் காட்டி அந்த விடுதலை இயக்கத்திற்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபடக்கூடாது.''*

*(த.க. நவ. '97)*

• தொழுது கொண்டிருந்த அப்பாவி முஸ்லீம் மக்களை (சுமார் 200 பேர்) கண்டதுண்டமாக வெட்டியும், சுட்டும் கொன்றது.

• கருத்துக் கூறும் உரிமைக்காக போராடிய யாழ் பல்கலைக்கழக மாணவர்களை சுட்டுக் கொன்றது.

• ராஜினி திரணகம போன்ற ஜனநாயகவாதிகளையும் கல்வியாளர்களையும் கொன்றது.

• துரோக அமைப்புகள் அல்லாத ஜனநாயகப்பூர்வ ஈழ விடுதலை அமைப்புகளைத் தடை செய்து, அதன் தலைவர்களைக் கொன்றொழித்தது.

• ஆயுதம் வாங்குவதற்காக சர்வதேச மாஃபியா கும்பலுடன் சேர்ந்து போதை மருந்து கடத்தலில் ஈடுபட்டது.

• பாலஸ்தீன மக்களைக் கொன்றொழிக்கும் இஸ்ரேலிடமும், இந்திய தேசிய இனங்களை ஒடுக்கிவரும் இந்திய உளவு அமைப்பான ''ரா'' மூலமும் ஆயுதப் பயிற்சி பெற்றது.

• காஷ்மீர் பிரச்சினையில் இந்திய மேலாதிக்கத்தை ஆதரிப்பது.

• ராஜீவ் காந்தி கொலையில் ம.க.இ.க.வை சம்பந்தப் படுத்தி புலித்தலைவர் கிட்டு அறிக்கை வெளியிட்டது.

— இவையெல்லாம் பிரபாகரனின் பாசிச நடவடிக்கைகளா? அல்லது தவிர்க்க முடியாத சமகால ஜனநாயக மீறல்களா?

*6. ''வரலாற்றில் தேசிய இனப்பிரச்சினையைக் கையிலெடுத்தது தேசிய முதலாளிய சக்திகள் என்பதுதான் லெனின், ஸ்டாலின் ஆகியோர் கொடுத்த வரையறை. தேசிய முதலாளிகள் வரலாற்றில் கையில் எடுத்ததை, பிற்காலத்தில் பாட்டாளி வர்க்கம் தன் கையில் எடுக்கக்கூடாது என்று லெனினோ, ஸ்டாலினோ எங்கும் கூறவில்லை.''*

*(த.க. செப்டம்பர் 2003)*

''முதலாளித்துவ தேசியவாதமும், பாட்டாளி வர்க்க சர்வ தேசியமும், இணக்கம் காணமுடியாத பகைமை கொண்ட இருவேறு கோஷங்களாகும்.''

*(லெனின், தேசிய இனப்பிரச்சினை பற்றிய விமர்சனக் குறிப்புகள், பக். 17)*

''தேசிய வாதம் எவ்வளவுதான் நியாயமான, பரிசுத்தமான, நயமான, நாகரீக வகைப்பட்டதாக இருப்பினும், அதனுடன் மார்க்சியத்தை இணக்கமுடையதாக்க முடியாது.''

*(லெனின், மேற்படி நூல், பக்.30)*

''தேசிய இனம் என்கிற கோட்பாடு முதலாளித்துவ சமுதாயத்தில் வரலாற்று வழியில் தவிர்க்க முடியாதது. இந்த சமுதாயத்தை கணக்கில் எடுத்துக் கொண்டு மார்க்சியமானது, தேசிய இயக்கங்கள் வரலாற்று வழியில் நியாயமுடையவை என்பதை முழு அளவுக்கு அங்கீகரிக்கிறது. ஆனால் இந்த அங்கீகாரம் தேசியவாதத்திற்கான ஆதரவு விளக்கமாக ஆகிவிடக் கூடாதிருக்கும் பொருட்டு, இந்த இயக்கங்களில் முற்போக்கான அம்சமாய் இருப்பதற்கு மட்டுமானதாய் இந்த அங்கீகாரம் கண்டிப்பான முறையில் கட்டுப்படுத்தப் படவேண்டும்.''

*(லெனின், மேற்படி நூல், பக். 31)*

மேற்கண்ட லெனின் மேற்கோள்களின் பொருள் தமிழர் கண்ணோட்டத்திற்கு புரியவில்லையா? அல்லது வாசகர்களை முட்டாள்களாக்கும் முயற்சியா?

*7. ''தமிழ்நாட்டில் தொழில், வணிகம் தொடங்கும் அயல் இனத்தார் (வெளிநாட்டவர், வெளி மாநிலத்தவர்) தங்கள் நிறுவனத்தில் 33% மூலதனப் பங்காளிகளாக தமிழர்களை சேர்த்துக் கொள்ளவேண்டும். (51% மூலதனப் பங்கு தருவதே நியாயம். முதல் நிலையில் 33% கோரப்படுகிறது)''*

*(பொதுக்கூட்ட பிரச்சார முழக்கம் - த.க. ஜூன் 2003, பின்பக்க அட்டை)*

ஏகாதிபத்திய அந்நியர்கள் 67% மூலதனத்தை வைத்துக் கொள்ள அனுமதிக்கலாம் என தீர்மானித்திருப்பது தன்னுரிமைக்கு முன்னுரிமையா? ஏகாதிபத்தியக் கொள்ளைக்கு முன்னுரிமையா?

8. பொதுவுடைமைக் கொள்கையைத் தூக்கிப் பிடிப்பதாகக் கூறிக் கொள்ளும் தமிழர் கண்ணோட்டம், 'திராவிடம்' என முழங்கி ஏகாதிபத்தியத்திற்கு சேவை செய்து மடிந்த முரசொலி மாறனுக்கும், நிலப்பிரபுத்துவ கொடுமையை தனது ஊரில் கடைபிடித்தவரும், வெண்மணி கொடுங்கோலனான கோபாலகிருஷ்ண நாயுடுக்கு வரவேற்பு கொடுத்து, விருந்து வைத்தவரும், தனது அறக்கட்டளையில் தீண்டாமையைக் கடைபிடித்தவருமான மூப்பனாருக்கும் புகழஞ்சலி செலுத்தியது பாட்டாளி வர்க்க கண்ணோட்டமா? சந்தர்ப்ப வாதமா?

இந்திய மக்களின் உழைப்பில் படித்துவிட்டு அமெரிக்க நலனுக்காகவே வாழ்ந்து மடிந்த விண்வெளி வீராங்கனை கல்பனா சாவ்லாவுக்கு அஞ்சலி கவிதை வெளியிட்டது தமிழ் தேசியமா? இந்திய தேசியமா? சர்வ தேசியமா? பேரண்ட தேசியமா? •


படிப்பகம்

www.padippakam.com

# அகமதாபாத் 'மோதல்' படுகொலை:
# மோடியின் பதவிக்காக நடத்தப்பட்ட நரபலி

குஜராத் மாநிலத் தலைநகர் அகமதாபாத் அருகே ஜூன் 15-ந் தேதியன்று நடந்த 'மோதல்' படுகொலை நாடெங்கிலும் பலத்த கண்டனத்திற்கு உள்ளாகியிருக்கிறது. இம் 'மோதல்' படுகொலையில் பத்தொன்பதே வயதான இஸ்ரத் ஜெஹான் என்ற கல்லூரி மாணவி உட்பட நான்கு பேர் குஜராத் மாநில போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

"இந்த நால்வரும் லஷ்கர்-இ-தொய்பா என்ற முசுலீம் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள். குஜராத் மாநில முதல்வர் நரேந்திர மோடியைக் கொல்லும் நோக்கத்தோடு, இவர்கள் அகமதாபாத் நகருக்கு வந்தனர். இந்திய உளவுத் துறைத் தகவலின் அடிப்படையில் குஜராத் மாநிலக் குற்றப்பிரிவு போலீசார் ஜூன் 15 அன்று அதிகாலை 4.30 மணிக்கு, அகமதாபாத் நகரின் புறநகர் பகுதி நெடுஞ்சாலையில் வந்த அவர்களின் காரை வழிமறித்த பொழுது, தீவிரவாதிகள் போலீசாரை நோக்கிச் சுட்டனர். போலீசார் தங்களைத் தற்காத்துக் கொள்ளத் திருப்பிச் சுட்டதில், நான்கு தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர்" என வழக்கம் போலவே, மோதலுக்கான காரணங்களை குஜராத் போலீசார் அடுக்கியுள்ளனர்.

'மோதல்' நடந்த அன்றே, அம்மோதலில் சுட்டுக் கொல்லப்பட்ட மூன்று ஆண்களின் பெயர், பிறந்த ஊர், அவர்களின் கடந்த காலம் உள்ளிட்ட அனைத்து அடையாளங்களையும் குஜராத் போலீசாரே பத்திரிக்கையாளர் முன் புட்டு வைத்தனர். இம்மூவருள் "ஜாவேத், மும்பயின் - தானே மாவட்டத்தைச் சேர்ந்தவன்; மற்ற இரு தீவிரவாதிகளான ஜிஷன் ஜோகரும், அம்ஜத் அலி அக்பர் அலி ராணா என்ற சலீமும் பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்" என்றும் போலீசார் அடையாளம் காட்டினர். இம்மூவரோடு சேர்த்து சுட்டுக் கொல்லப்பட்ட பெண்ணின் அடையாளம் மறுநாள் தான் தெரிந்தது.

சுட்டுக் கொல்லப்பட்ட அந்தப் பெண் தன்னோடு வைத்திருந்த கல்லூரி அடையாள அட்டையை வைத்து, "அவர் பெயர் இஸ்ரத் ஜெஹான்; மும்பய் நகரத்திலுள்ள குருநானக் கல்சா கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பட்டப்படிப்பு படிக்கும் மாணவி; மும்பய்க்கு அருகிலுள்ள தானே மாவட்டத்தைச் சேர்ந்த மும்ப்ரா நகரில் வசிக்கும் ஏழை முசுலீம் குடும்பத்தைச் சேர்ந்த பெண்" என அவரைப் பற்றிய விவரங்கள் வெளியிடப்பட்டன.

இம்மோதலில் நேரடியாகப் பங்கெடுத்துக் கொண்டதாகக் கூறப்படும் அகமதாபாத் நகரப் போலீசின் உதவி ஆணையர் நரேந்திர அமின், இந்த மோதல் முப்பது நிமிடங்களுக்கு நீடித்ததாகப் பத்திரிக்கையாளர்களிடம் கூறியுள்ளார். தீவிரவாதிகள் போலீசாரை நோக்கி 40 ரவுண்டுகள் சுட்டதாகக் கூறப்படுகிறது. ஆனாலும், மோதலில் பங்கெடுத்துக் கொண்டதாகக் கூறப்படும் எந்தவொரு போலீசுக்காரனுக்கும் சுண்டு விரலில் கூடக் காயம் ஏற்படவில்லை. மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து அகமதாபாத் நகருக்கு வரும் முக்கியமான நெடுஞ்சாலையில் இந்த மோதல் நடந்ததாக போலீசார் கூறினாலும், போலீசைத் தவிர, இம்மோதலைப் பார்த்த வேறு சாட்சிகள் யாரும் இருப்பதாக இதுவரை தெரியவில்லை. அப்படிபட்ட சாட்சிகளை குஜராத் போலீசார் இனிமேல் தயாரிக்கக் கூடும்.

இதனால், அகமதாபாத்தில் நடந்த இந்த மோதல், இன்னுமொரு போலி மோதல் என்ற ஆணித்தரமான சந்தேகம் நாடெங்கிலுமே எழுந்துள்ளது. மேலும், "சுட்டுக் கொல்லப்பட்ட நால்வரும் லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள்; அவர்கள் குஜராத் முதல்வர் மோடியைக் கொல்வதற்காகத்தான் அகமதாபாத் நோக்கி வந்தார்கள்" என குஜராத் போலீசு கூறுவதற்கு என்ன ஆதாரம் உள்ளது என்ற கேள்வியும் எழுந்துள்ளது. மனித உரிமை அமைப்புகள் மட்டுமல்ல, முதலாளித்துவ பத்திரிக்கைகள் கூட குஜராத் போலீசாரின் இம்மோதல் சாகசத்தை முழுமையாக நம்ப மறுத்துள்ளன.

●●●

குஜராத் முதல்வர் நரேந்திர மோடியைப் பதவியைவிட்டுத் தூக்க வேண்டும் என பா.ஜ.க.வைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களே போர்க் கொடி தூக்கியிருந்த கட்டத்தில்; தேர்தல் தோல்விக்கு குஜராத் கலவரமும் ஒரு காரணம் என வாஜ்பாயி, அத்வானியின் சீடர் மோடியை அடிவெட்டு வெட்டிய நேரத்தில்; மோடியின் பதவி பறிக்கப்படலாம் என்ற எதிர்பார்ப்பு இருந்த நேரத்தில் இம்மோதல் படுகொலை நடந்தது.

அதாவது, "குஜராத் முதல்வர் மோடியைக் கொல்ல முசுலீம் தீவிரவாதிகள் சதி; போலீசு முன்கூட்டியே எச்சரிக்கையாக இருந்ததால் அவர் உயிர் தப்பினார் என்ற அனுதாபத்தை மோடியைச் சுற்றி உருவாக்குவதன் மூலம், அவரின் பதவியைக் காப்பற்றலாம்; அவருக்கு எதிரான எதிர்ப்புகளை மௌனமாக்கி விடலாம் என்ற நோக்கத்தோடுகூட இம்மோதல் படுகொலையைத் திட்டமிட்டு நடத்தியிருக்கலாம்" என எழுந்துள்ள சந்தேகத்தை, இலேசாக ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

ஏனென்றால், குஜராத்தில் மீண்டும் பா.ஜ.க. ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும்; அதன் மூலம், தான் மாநில முதல்வராகத் தொடர வேண்டும் என்பதற்காகவே, குஜராத் சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக, அம்மாநிலத்தில் மிகப் பெரிய இனப்படுகொலையை தலைமை தாங்கி நடத்தியவன்தான் மோடி.

"தனக்குப் போட்டியாக வரக்கூடும் என்பதாலேயே மோடியின் முன்னாள் நண்பனும், குஜராத் அரசின் முன்னாள் உள்துறை அமைச்சருமான ஹரேன் பாண்டேயை மோடிதான் சதி செய்து கொன்று விட்டார்" என்ற குற்றச் சாட்டை ஹரேன் பாண்டேயின் தந்தையே மோடியின் மீது சுமத்தியிருக்கிறார். இப்படி பதவி வெறியும், கொலை வெறியும் கொண்ட மோடி, தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக ஒரு போலி மோதல் கொலையை போலீசு மூலம் நடத்தியிருக்கக் கூடும்.

இதனை மிகைப்படுத்தப்பட்ட அனுமானம் என ஒதுக்கி தள்ளிவிட்டால் கூட, குஜராத் போலீசும், மைய அரசின் புலனாய்வுத் துறையும், "இம்



படிப்பகம்

மோதல் போலியானது இல்லை; சுட்டுக் கொல்லப்பட்ட நால்வரும் லஷ்கர்-இ-தொய்பாவுடன் தொடர்புடையவர்கள்'' என்று நிரூபிப்பதற்கு முன்வைக்கும் ஆதாரங்கள் அனைத்திலும் அனுமானங்களும், அவதூறுகளும் தான் பொங்கி வழிகின்றன.

அகமதாபாத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட நால்வரில் மும்ப்ரா நகரைச் சேர்ந்த இஸ்ரத் ஜெஹானும் ஒருவர் என்ற செய்தி வெளிவந்தவுடனேயே இஸ்ரத்தின் கல்லூரி தோழிகள், அவரது ஆசிரியர்கள், அவரது குடும்பத்தை நெருக்கமாக அறிந்தவர்கள் அனைவரும் இஸ்ரத்தின் நடத்தையை எடுத்துக் கூறி, போலீசு கூறுவதை நம்ப முடியாது என மறுத்து பத்திரிக்கைகளுக்கு வெளிப்படையாக பேட்டி கொடுத்தார்கள். இஸ்ரத் சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டித்து மும்ப்ராவில் கதவடைப்புப் போராட்டம் நடந்ததோடு, அவரது இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.


பொதுமக்களை விட்டு விடுவோம். இஸ்ரத் சுட்டுக் கொல்லப்பட்ட செய்தி வெளியானவுடனேயே, தானே மாவட்ட போலீசு அதிகாரிகள், ''இஸ்ரத் மீது இதுவரை எவ்விதக் குற்ற வழக்கும் பதிவு செய்யப்படவில்லை. அவருக்குத் தீவிரவாதிகளுடன் தொடர்பு எதுவும் கிடையாது'' என அறிவித்தனர்.

மகாராஷ்டிரா போலீசின் இந்த அறிவிப்பு குஜராத் போலீசுக்குத் தலைவலியாக அமைந்தது. இந்த சமயத்தில் மூக்கை நுழைத்த மைய அரசின் புலனாய்வுத்துறை, ''ஜாவேத்தையும், இஸ்ரத்தையும் ஆறு மாதங்களாகக் கண்காணித்து வருவதாகவும், அவர்கள் இருவருக்கும் லஷ்கர்-இ-தொய்பாவுடன் தொடர்பு உண்டு'' என்றும் எந்தவிதமான ஆதாரங்களையும் முன் வைக்காமல், ஆண்டவனின் அசிரீரி போல, ஒரு அறிவிப்பை வெளியிட்டு குஜராத் போலீசுக்குக் கை கொடுத்தது.

இதற்குப் பிறகுதான் மகாராஷ்டிரா போலீசார், ''நாங்கள் இஸ்ரத்திற்கு அப்பாவி என்று சான்றிதழ் எதுவும் வழங்கவில்லை'' எனக் கூறி, தட்டைத் திருப்பிப் போட்டு தட்டத் தொடங்கினர். மேலும், இஸ்ரத்துக்காகப் பரிந்து பேசும் மும்ப்ரா நகர மக்களின் வாயை அடைப்பதற்காக, இஸ்ரத்தோடு நெருங்கிப் பழகிய அனைவரையும் விசாரிப்போம் என மகாராஷ்டிரா போலீசு மிரட்டவும் செய்தது.

இஸ்ரத்தை எப்படியாவது தீவிரவாதி என நிரூபித்தாக வேண்டும் எனத் துடித்துக் கொண்டிருந்த குஜராத் போலீசார், அவர் சுட்டுக் கொல்லப்பட்ட சில நாட்கள் கழித்து, ''தீவிரவாதிகள் பயணம் செய்த காரில் ஒரு நாட்குறிப்பைக் கண்டுபிடித்ததாகவும்; அது இஸ்ரத்தினுடையது என்றும்; அதில் அவர் தன் கைப்படவே ஜாவேத்திடம் எவ்வளவு பணம் பெற்றேன்; சுட்டுக் கொல்லப்பட்ட சலீமுக்கு எவ்வளவு பணம் கொடுத்தேன் என்ற விவரங்களையும்; எந்தெந்த இந்துமதத் தலைவர்களைச் சுட்டுக் கொல்ல வேண்டும் என்ற குறிப்பையும் எழுதி வைத்திருப்பதாக'' புதிய ஆதாரமொன்றை வெளியிட்டனர்.





அகமதாபாத் நகரில் நடந்த 'மோதல்' கொலையில் சுட்டுக் கொல்லப்பட்ட முசுலீம்கள். (கீழே கல்லூரி மாணவி இஸ்ரத் ஜெஹான்).

''இந்த ஆதாரத்தை இஸ்ரத் சுட்டுக் கொல்லப்பட்டு சில நாட்கள் கழித்து, குஜராத் போலீசு வெளியிட வேண்டிய மர்மம் என்ன? நாட்குறிப்பில் இருப்பது இஸ்ரத்தின் கையெழுத்துதான் எனத் தடய அறிவியல் துறை தான் கூற வேண்டும். அதற்குள் குஜராத் போலீசுக்கு என்ன அவசரம்? இவை எல்லாவற்றுக்கும் மேலாக, மோடியைச் சுட்டுக் கொல்ல வரும் தீவிரவாதிகள், இப்படிப்பட்ட முக்கியமான ஆதாரங்களைக் கையில் வைத்துக் கொண்டு வருவார்களா?'' என இந்த ஆதாரம் குறித்து எழுப்பப்படும் பல கேள்விகளுக்கு குஜராத் போலீசிடமிருந்து எந்தவிதமான உருப்படியான பதிலும் வரவில்லை.

இஸ்ரத்திற்கு லஷ்கர்-இ-தொய்பாவுடன் தொடர்புண்டு எனக் குற்றஞ்சாட்டியுள்ள புலனாய்வுத் துறை கூட, ''இந்தத் தீவிரவாதிகள் மோடியைக் கொல்ல வரவில்லை; வேறொரு நோக்கத்திற்காக அகமதாபாத்திற்கு வந்தார்கள்'' என்று வெளிப்படையாகக் கூறிய பின்னும், குஜராத் போலீசார் மட்டும்தான் இவர்கள் மோடியைக் கொல்வதற்காகத் தான் வந்தார்கள் எனக் கீறல் விழுந்த ரிகார்டு போலக் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

இஸ்ரத்தை லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதி என அடித்துப்பேசிய போலீசார், பிறகு, ''தீவிரவாதிகள் தங்களைச் சுற்றுலா செல்லும் குடும்பம் போலக் காட்டிக் கொள்வதற்காக, இஸ்ரத்தை



படிப்பகம்

www.padippakam.com

பாதுகாப்புக் கேடயமாகப் பயன்படுத்தினார்கள்'' என அவருக்கு அப்பாவி பட்டமும் கட்டுகிறார்கள். பிறகு வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக, ''இஸ்ரத் பணத்துக்காக லஸ்கர்-இ-தொய்பாவிற்கு வேலை செய்தார். மோடியைக் கொல்லும் திட்டத்தில் அவர் நான்கு இலட்சம் ரூபாய் பெற்றார்'' என்கிறார்கள்.

**இந்து மதவெறி பாசிஸ்டான மோடியை, இந்நாட்டின் சட்டம் தண்டிக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது, மோடியைக் கொன்று தண்டிக்க முசுலீம் இளைஞர்கள் முனைந்தால் அதில் தவறேதும் காண முடியாது.**

இஸ்ரத் குடும்பம் குடியிருக்கும் வீட்டின் சொந்தக்காரர், ''இஸ்ரத்திடம் இலட்ச இலட்சமாகப் பணம் புழங்கினால், அவர்கள் ஏன் மாதாமாதம் வாடகையை ஒழுங்காகக் கொடுக்க முடியாமல் தடுமாறுகிறார்கள்?'' என்று கேள்வி எழுப்புகிறார்.

''ஏழைப் பெண்ணான இஸ்ரத்திடம் செல்போன் இருக்கிறது. அவர் விதவிதமான ஆடைகளை அணிவார். இதற்கெல்லாம் பணம் எங்கிருந்து வந்தது'' எனக் குதர்க்கமாகக் கேள்வி எழுப்புகிறது போலீசு.

இஸ்ரத்தைப் பற்றித் தெரிந்தவர்களோ, ''அவர் கல்லூரி முடிந்த பிறகு டியூஷன் எடுப்பார்; பயிற்சி வகுப்புகளில் பணியாற்றினார்; எம்ப்ராய்டரி வேலைகள் செய்தார். படிக்கும்பொழுதே கடுமையாக உழைக்கக் கூடிய பெண் அவர்'' என்கிறார்கள்.

இஸ்ரத்தின் தாயார் ஷமிமா ஷேக்கிடம் குஜராத் போலீசார் நடத்திய விசாரணையின் பொழுது, ''ஜாவேத்துக்கும், இஸ்ரத்துக்கும் தீவிரவாதிகளுடன் தொடர்பு இருப்பதை அவரே ஒப்புக் கொண்டார்; இதற்கான ஒலிநாடா ஆதாரம் எங்களிடம் உள்ளது'' என்பது போலீசாரால் இஸ்ரத்துக்கு எதிராக வைக்கப்படும் இன்னொரு ஆதாரம். ''இந்த ஒலிநாடா ஆதாரம் என்ற செப்படி வித்தையெல்லாம் நீதிமன்ற விசாரணையில் சட்டப்படி செல்லுபடியாகாது என்பது போலீசுக்கே தெரியும்'' எனச் சட்ட வல்லுநர்கள் போலீசின் தகிடுதத்தத்தை அம்பலப்படுத்துகிறார்கள்.

•••

''அகமதாபாத்தில் நடந்த இந்த மோதல் போலியானது; இஸ்ரத் உட்பட சுட்டுக் கொல்லப்பட்ட நால்வரும் லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் என குஜராத் போலீசு சொல்வதை உண்மையென நம்பிவிட முடியாது'' என்பதற்கு வேறு சில சந்தர்ப்ப சாட்சிகளும் உள்ளன.

குஜராத்தில் இந்து மதவெறிக் கும்பல் நடத்திய இனப்படுகொலைக்குப் பின், சமீர் கான் பத்தான் உள்ளிட்டு 14 முசுலீம்களைக் கைது செய்த குஜராத் போலீசார், ''இவர்கள் முதல்வர் மோடியைக் கொல்ல சதித்திட்டம் தீட்டினார்கள். இவர்களுள் பத்தான் ஜெய்ஷ்-இ-முகம்மது என்ற தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவன். மற்ற 13 பேரும் இச்சதித்திட்டத்தை நிறைவேற்ற பத்தானுக்கு உதவினார்கள்'' எனக் குற்றஞ்சுமத்திச் சிறையில் அடைத்தது.

2002-ஆம் ஆண்டு அக்டோபர் 23-ஆம் தேதி நள்ளிரவில் போலீசுடன் நடந்த 'மோதலில்' பத்தான் சுட்டுக் கொல்லப்பட்டார். எனினும், இவ்வழக்கு விசாரணையில் ''சிறையில் இருந்த 13 பேரும் அப்பாவிகள்; போலீசார் கூறும் சதித் திட்டத்திற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை'' எனக் கூறி குற்றவியல் நீதிமன்றம் விடுதலை செய்தது. இந்தத் தீர்ப்பை குஜராத் உயர்நீதி மன்றமும் உறுதி செய்துள்ளது.

2003-ஆம் ஆண்டு சனவரி 13-ஆம் தேதியன்று சாதிக் ஜமால் மெஹ்தர் என்பவரை குஜராத் குற்றப் பிரிவு போலீசார் சுட்டுக் கொன்றனர். லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாத அமைப்பைச் சேர்ந்த மெஹ்தர், மோடியைக் கொல்லச் சதி செய்ததாக குஜராத் போலீசார் குற்றஞ் சுமத்தினர்.

ஆனால், மெஹ்தர் படுகொலை பற்றி நடந்த விசாரணையில், மெஹ்தர் சாதாரண சைக்கிள் திருடன் என்று அம்பலமாகியுள்ளது. இது மட்டுமின்றி, மும்பய் உயர்நீதி மன்றத்தில் கேதன் திரோத்கர் என்ற ரவுடி அளித்துள்ள ஒரு வாக்குமூலத்தில், ''தானும், மும்பயைச் சேர்ந்த மோதல் கொலை நாயகனான இன்ஸ்பெக்டர் தயா நாயக்கும் சாதிக் மெஹ்தரை 2003 சனவரியில் மோதல் கொலை இலக்காக குஜராத் போலீசிடம் ஒப்படைத்ததாக''க் கூறியிருக்கிறான்.

இந்து மதவெறியர்களின் கையில் உள்ள குஜராத் போலீசுக்கும், காங்கிரசு கூட்டணியின் கையில் உள்ள மகாராஷ்டிரா போலீசுக்கும் இப்படிப்பட்ட கள்ள உறவு இருப்பதால்தான் மகாராஷ்டிரா முதல்வர் ஷிண்டே, இஸ்ரத் படுகொலை பற்றி மையப் புலனாய்வுத் துறை விசாரிக்க ஒத்துக் கொள்ளவில்லை போலும். இது ஒருபுறமிருக்க, மகாராஷ்டிரா மாநிலத்தைச் சேர்ந்த சமாஜ்வாதி கட்சித் தலைவர் இஸ்ரத் குஜராத்துக்கு கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தையும் எழுப்பியிருக்கிறார்.

குஜராத்தின் தலைநகர் காந்தி நகரில் உள்ள அக்சர்தம் கோயில் மீது இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த தாக்குதலில், தீவிரவாதிகளுக்கு உதவினார்கள் என்ற குற்றச்சாட்டின் கீழ் காந்தி நகரைச் சேர்ந்த ஐந்து முசுலீம்கள் குஜராத் போலீசாரால் கைது செய்யப்பட்டனர். அதேசமயம், ஜம்மு-காசுமீர் மாநில போலீசு, அக்சர்தம் கோயில் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த உதவியவர் எனக் குற்றஞ் சுமத்தி, அம்மாநிலத்தைச் சேர்ந்த உஸ்மான்கான் என்பவரைக் கைது செய்தது.

இது பற்றி இரு மாநில போலீசாரும், மையப் புலனாய்வுத் துறை, ''ரா'' மற்றும் எல்லை பாதுகாப்புப் படை அதிகாரிகள் முன் நடத்திய விசாரணையில், குஜராத் முசுலீம்களுக்கும் அக்சர்தம் கோயில் தாக்குதலுக்கும் தொடர்பில்லை என நிருபணமானது. எனினும், இவ்விசாரணை முடிவை ஏற்க மறுத்துவிட்ட குஜராத் போலீசார், உள்ளூர் முசுலீம்களின் ஒத்துழைப்போடுதான் இந்தத் தாக்குதல் நடந்திருக்கிறது எனச் சாதித்து வருகின்றனர்.

சபர்மதி விரைவு ரயில் எரிப்பு வழக்கில் கூட, கோத்ராவைச் சேர்ந்த முசுலீம்கள்தான் ரயில் பெட்டிக்கு தீ வைத்து கரசேவகர்களைக் கொன்றார்கள் என்ற போலீசு - ஆர்.எஸ்.எஸ். கும்பல் குற்றச்சாட்டுக்கு, இதுவரை நம்பத்தகுந்த



படிப்பகம்

www.padippakam.com

ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை.

ரயில் பெட்டி எரிந்தது குறித்த குஜராத் மாநிலத் தடய அறிவியல் துறை அறிக்கையும், கோத்ரா மாவட்ட போலீசு கண்காணிப்பாளர் ராஜூ பிஷன் குமார் பார்கவா, கோத்ரா சம்பவம் குறித்து விசாரணை நடத்திவரும் நீதிபதி நானாவதி கமிசன் முன் அளித்துள்ள சாட்சியமும் குஜராத் போலீசின் குற்றச்சாட்டுகளுக்கு எதிராகவே அமைந்துள்ளன. எனினும், குஜராத் போலீசார், கோத்ராவைச் சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட முசுலீம்களை "பொடா"வின் கீழ் கைது செய்து வதைத்து வருகின்றனர்.

இவையனைத்தும் குஜராத் போலீசு மிகவும் வெளிப்படையாகவே, இந்து மதவெறிக் கும்பலின் அடியாட்படையாக, ஏவல் நாயாக மாறிவிட்டதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன. இப்படிப்பட்ட சூழலில், அகமதாபாத்தில் நடந்த மோதல் கொலை பற்றியும்; இஸ்ரத் பற்றியும் குஜராத் போலீசார் எடுத்துவிடும் ஆதாரங்களில் உண்மையிருக்கும் என எதை வைத்து நம்ப முடியும்?

மோதலில் சுட்டுக் கொல்லப்பட்ட நால்வரும், மோடியைக் கொல்லச் சதித்திட்டம் தீட்டினார்கள் என்பதை உண்மையென்று எடுத்துக் கொண்டாலும், அவர்கள் இப்படி "தீவிரவாதியாக" மாறுவதற்கு யார் காரணம்? இந்து பாசிச பயங்கரவாதத் தாக்குதல்கள், கணிசமான முசுலீம்களிடையே எதிர்த்தாக்குதல் உணர்வை ஏற்படுத்தத்தான் செய்யும். மோடி குஜராத்தில் நடத்திய கொடூரமான இனப்படுகொலைதான், மும்பயைச் சேர்ந்த ஹனீப் என்ற சாதாரண முசுலீம் தொழிலாளியின் குடும்பத்தை எதிர் பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபடுமாறு தூண்டியது. மும்பய் நகரின் இரு இடங்களில் ஹனீப் குடும்பம் வைத்த குண்டில் 56 பேர் உயிரிழந்தனர்.

இந்து மதவெறி பாசிஸ்டான மோடியை, இந்நாட்டின் சட்டம் தண்டிக்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது, மோடியைக் கொன்று தண்டிக்க முசுலீம் இளைஞர்கள் முனைந்தால் அதில் தவறேதும் காண முடியாது. மதச்சார்பற்ற, ஜனநாயக புரட்சிகர சக்திகள் இந்து மதவெறி பாசிசத்துக்கு எதிரான ஊக்கமான, போர்க்குணமிக்க தாக்குதல் தொடுக்குமளவு அணிதிரளாத போது, கணிசமான முசுலீம்கள் இசுலாமிய எதிர் பயங்கரவாதத்திடம் தஞ்சமடைவது தவிர்க்க முடியாதது!

• செல்வம்

# குறைந்தபட்ச பொதுத் திட்டம்: அதிகபட்ச சந்தர்ப்பவாதம்

**கே**ழ்வரகில் நெய் வடிகிறது என்று சொன்னால், அதை ஒரு முறை இரண்டு முறை நம்புகிறவனை வேண்டுமானால் கேணயன் என்று எண்ணலாம். அதற்கு மேலும் இதே பொய்யை நம்புகிறவன் கேணயனாக இருக்க முடியாது. இந்தப் பொய்யைத் திரும்பத் திரும்ப சொல்கிறவனும் சரி, இதை நம்புகிறவனும் சரி கூட்டுக் களவாணியாகத்தான் இருக்க முடியும்.

கொள்ளுத் தாத்தா நேரு காலத்திலிருந்து, கொள்ளுப் பேரன் ராகுல் காந்தி காலம் வரை - ஒரு அரை நூற்றாண்டாக உழைக்கும் மக்கள் நலனுக்கான முற்போக்குத் திட்டங்களை அமலாக்கப் போவதாக காங்கிரசுக் கட்சி சொல்லி வருகிறது. சோசலிச பாணியிலான சமுதாயம் அமைப்பதே காங்கிரசின் இலட்சியம் என்று நேரு அறிவித்தார். ஆனால், அரசுத் துறைகளோடு சேர்த்து தரகு அதிகாரவர்க்க முதலாளித்துவத்தைத்தான் ஊட்டி வளர்த்துள்ளார்.

நேருவின் நேரடி அரசியல் வாரிசு இந்திரா காந்தி, வங்கிகள் அரசுடைமை, ஏகபோகத் தடுப்புச் சட்டம், மன்னர் மானிய ஒழிப்பு, வறுமை ஒழிப்பு, 20 அம்சத் திட்டம் என்று வரிசையாகக் கொண்டு வந்தார். இறுதியாக, இந்தியா ஒரு சமதர்ம சோசலிசக் குடியரசென அரசியல் நிர்ணயச் சட்டத்தின் முகப்பில் சேர்த்து அதிரடி அரசியல் நடத்தினார். கடைசியாக, அதிகார முறைகேடு செய்து, பிரதமர் பதவியைப் பிடித்துக் கொண்டு, அதைத் தக்க வைத்துக் கொள்ளவே அவசர நிலை ஆட்சியைப் பிரகடனம் செய்து, தனது அரசியல் வாரிசை வைத்து கட்டாயக் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சையை செய்வதில் முடித்தார்.

இந்திராவின் பிணத்தைக் காட்டி, அனுதாப அலை எழுப்பி, டெல்லியில் சீக்கியப் பிணக் குவியல் மீதேறி நேரு பரம்பரையின் மூன்றாவது வாரிசாக ஆட்சிக்கு வந்தார் ராஜீவ் காந்தி. 21-ஆம் நூற்றாண்டில், நவீன இந்தியாவைப் படைப்பேன், விவசாயியும் கம்ப்யூட்டரில் கணக்குப் போடுவான் என்று "பயாஸ்கோப்" காட்டினார். இறுதியில் ஈழத்தின் மீது ஆக்கிரமிப்புப் போர் நடத்தி அந்தக் குற்றத்திற்காகவே பலியாகிப் போனார்.

இப்போது நேரடியாக ஆட்சிக்கு வரவில்லை என்றாலும் நேரு குடும்பத்தின் அடுத்த வாரிசு - ஐந்தாவது தலைமுறை, மன்மோகன் சிங் தலைமையில் ஒரு பினாமி ஆட்சியை நிறுவியிருக்கிறது. இராஜீவ் தலைமை திட்டமிட்டு, காங்கிரசின் நரசிம்மராவ் ஆட்சியில் மன்மோகன் சிங்கும், சிதம்பரமும் அமலாக்கிய புதிய பொருளாதாரக் கொள்கையைத்தான் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. ஆட்சி தீவிரமாகச் செயல்படுத்தியது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் குறைந்தபட்ச செயல் திட்டத்தை விவாதிக்கும் இடது - வலது கம்யூனிஸ்டு கட்சிகளின் தலைவர்கள்: கேழ்வரகில் நெய் வடிகிறதாம்!



www.padippakam.com

ஆனால், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக ஆட்சியின் தவறான பொருளாதாரக் கொள்கையால் விளைந்த கேடுகளை நீக்கப் போவதாகக் கூறிக் கொண்டு பல்வேறு கவர்ச்சித் திட்டங்களைக் கொண்ட குறைந்தபட்ச பொதுத் திட்டம் ஒன்றை நேரு பரம்பரையின் பினாமி ஆட்சி அறிவித்திருக்கிறது.

இந்த ஐக்கிய முற்போக்கு முன்னணியின் குறைந்தபட்சப் பொதுத் திட்டம், முந்தைய ஆட்சியில் புறக்கணிக்கப்பட்ட நகர்ப்புற ஏழை-எளிய மக்களின், கிராமப்புற விவசாயிகளின் துயரங்களைத் துடைத்து, அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்திவிடும் என்று இந்த நாட்டு மக்களை நம்பச் சொல்லுகிறார்கள், போலி கம்யூனிஸ்டுகள்.

இந்த குறைந்தபட்சப் பொதுத் திட்டத்தை அமலாக்கும் பொறுப்பில் உள்ள மன்மோகன் சிங்கும் சிதம்பரமும் புதிய பொருளாதாரக் கொள்கை எனும் தமது செல்லக் குழந்தையை அனாதையாக்கிவிடத் தயாராக இல்லை. மனித முகத்துடன் கூடிய பொருளாதாரச் சீர்திருத்தம்தான் தமது கொள்கை என்று மன்மோகன் சிங் திரும்பத்திரும்பக் கூறுகிறார்.

பொருளாதாரப் புலி சிதம்பரமோ, கடந்த 13 ஆண்டுகளாக அமலாக்கப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கையின் சாதனைகளை உறுதிப்படுத்தி, பொருளாதார சீர்திருத்தங்களையும், வளர்ச்சியையும் தொடரப் போவதாக உள்நாட்டு, வெளிநாட்டு ஏகபோக முதலாளிகளுக்கு வாக்குறுதியளிக்கிறார். ''வளர்ச்சி, பணவீக்கம் மற்றும் செலாவணிக் கையிருப்பு ஆகியவற்றில் ஒரு விரிவாற்றலுடைய தன்மையில் பொருளாதாரம் இருக்கிறது என்று நம்புவதற்குக் காரணமிருக்கிறது. விவசாயம், உற்பத்தித் தொழில் மற்றும் வேலைவாய்ப்புப் பெருக்கத்துக்கு சிறப்பு முக்கியத்துவம் கொடுத்து, ஏற்கெனவே உள்ள வளர்ச்சி வேகத்தை உறுதிப்படுத்துவதற்கான மிகப்பெரிய வாய்ப்பு இருக்கிறது'' என்கிறார் சிதம்பரம்.

இந்தியத் தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனத்தின் பிரதிநிதி யோகேந்திர மோடியைச் சந்தித்த மன்மோகன் சிங், ''சீர்திருத்தங்கள் மேலும் தீவிரப் படுத்தப்படும்'' என்று வாக்குறுதி அளித்தார். பொருளாதார சீர்திருத்தத்தின் பலன்கள் கிராமப்புற, நகர்ப்புற ஏழை - எளிய மக்களைச் சென்றடையவில்லை; கிராமப்புற விவசாயத்



ரேசன் கடையில் மண்ணெண்ணெய் வாங்க காத்து நிற்கும் ஏழைகள்: அனைவருக்கும் ரேசனில் உணவுப் பொருள்கள் வழங்குவோம் எனக் குறைந்தபட்ச பொதுத் திட்டத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிக்கு மாறாக, ''வறுமை கோட்டுக்கு கீழே உள்ளவர்களுக்கு மட்டும்தான் உணவுப் பொருட்கள்'' என்ற உலக வங்கியின் கட்டளையைத்தான் காங்கிரசு அரசு நடைமுறைப்படுத்துகிறது.

துறையை புறக்கணித்து விட்டன என்று கூறுவதில் மன்மோகன் சிங் - சிதம்பரம் வகையறாக்கள் கொண்டிருக்கும் அர்த்தமோ வேறு வகையானதாகும்.

புதிய பொருளாதாரக் கொள்கை விவசாயத் துறையை, கிராமப்புறத்தை தொடாமல் சென்று விட்டது என்று சொல்லும்போது, விவசாயத்துறையின் மீதுள்ள ஒழுங்குமுறைப்படுத்தும் விதிகளை அகற்றிவிட வேண்டும், ''விவசாயிகள்'' மீதான எல்லா கட்டுப்பாடுகளையும் நீக்கி விட வேண்டும். இந்த ஒழுங்குமுறைகள், கட்டுப்பாடுகள் தாம் விவசாயத் துறையின் வளர்ச்சியைப் பாதித்துள்ளது என்பதுதான் மன்மோகன் சிங் - சிதம்பரம் கும்பலின் கருத்தாகும். இதனால், அரசுத்துறைத் தொழில்களை தனியாருக்கு விற்பதன் மூலம் கிடைக்கும் நிதியை கிராமப்புற வளர்ச்சி, விவசாயத்துறைக்கு முக்கியத்துவமளிப்பது என்ற பெயரால் முதலீடு செய்து தாராளமயமாக்கத்தை விரைவுபடுத்துவதுதான் இந்தக் கும்பலின் திட்டம்.

இதைப் போலத்தான், குறைந்தபட்சப் பொதுத் திட்டத்தின் ஒவ்வொரு அம்சம் குறித்து ஆளும் ஐக்கிய முற்போக்கு முன்னணியும் அதை வெளியிலிருந்து ஆதரிக்கும் போலி கம்யூனிஸ்டுகள் உட்பட போலி இடதுசாரி முன்னணியும் செய்யும் கவர்ச்சிப் பிரச்சாரம் ஒன்றாகவும், அமலாக்கத்துக்காகத் தரும் வியாக்கியானம் வேறுவேறானவையாகவும் இருக்கின்றன. குறிப்பாக, குறைந்தபட்ச பொதுத் திட்டத்திலுள்ள எழுத்துக்கும் எண்ணத்துக்கும் மாறாகவே, அதை அமலாக்க வேண்டிய அமைச்சர்களின் பேச்சும் செயல்பாடுகளும் உள்ளன. ஒட்டுமொத்த அரசின் போக்கும் இப்படித்தான் இருக்கும் என்பதை அரசுத் தலைவரின் தொடக்கஉரையும் எடுத்துக் காட்டுகிறது.

ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் உள்ள 15 கட்சிகள், குறிப்பாக காங்கிரசு மற்றும் அதன் ஆதரவு ''இடதுசாரி''க் கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளும், அதன்பின்னர் அவை தயாரித்தளித்த குறைந்தபட்ச பொதுத் திட்டமும் நாட்டு மக்களுக்கு அளித்துள்ள முக்கியமான ஒரு வாக்குறுதி, வேலை வாய்ப்பை உறுதி செய்வது.

வேலை வாய்ப்பு அடிப்படை உரிமையாக்கப்படும் என்கிறார்கள். ஒவ்வொரு கிராமப்புற, நகர்ப்புற ஏழை மற்றும் கீழ்நிலை நடுத்தரக் குடும்பத்திலும் உடற்தகுதியுள்ள ஒருவருக்குக் குறைந்த பட்சக் கூலி கிடைக்கும் வகையில் ஆண்டுக்கு நூறு நாட்களுக்காவது சட்டபூர்வ வேலை உத்திரவாதம் கிடைக்கும் என்று பொதுத் திட்டம் கூறுகிறது.

அரசுத் தலைவரின் நாடாளுமன்ற உரை என்பது ஆட்சியாளர்களின் கொள்கைப் பிரகடனமாகும். இந்த ஆண்டு ஆட்சித் தலைவரின் உரையும் கூட தேசிய வேலைவாய்ப்பு உத்திரவாதச் சட்டம் கொண்டு வரப்படும் என்று


படிப்பகம்

www.padippakam.com

உறுதிமொழி தருகிறது. ஆனால், ஆட்சியாளர்களின் குறைந்தபட்ச பொதுத்திட்டம் அளித்துள்ள வாக்குறுதிக்கு ஒரு நீர்த்துப் போன வியாக்கியானம் தருவதாகவே அரசுத் தலைவரின் உரையில் கூறப்படுகிறது.

வேலை உத்திரவாதம் தருவதாக பொதுத் திட்டத்தில் கூறப்பட்டிருக்கும் வகையினங்களில் இருந்து மற்ற பிரிவினரை விட்டு விட்டு, கிராமப்புறக் குடும்பங்களுக்கு மட்டும் அப்படிச் செய்யப் போவதாக அரசுத் தலைவர் உரை சுருக்கி விடுகிறது. அடுத்து, முக்கியமாக, படிப்படியாகத்தான் இச்சட்டம் அமலாக்கப்படும் என்கிறது. இதன்மூலம், இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் மிகக் குறைவான நிதி ஒதுக்கி, மெத்தனமாகவே இத்திட்டம் அமலாக்கப்படும் என்றாகிறது. எப்படிக் கணக்கிட்டாலும் கிராமப்புறக் குடும்பங்களிலே கூட ஒரு 10 கோடிப் பேருக்காவது வேலை தரவேண்டும்; இதற்கு ஆண்டுக்கு ஒரு 20,000 கோடி ரூபாய் செலவு பிடிக்கும். இவ்வளவு தொகைக்கு இந்த அரசிடம் வழிவகை எதுவும் கிடையாது.

இடைக்கால ஏற்பாடாக, உடனடியாக மிகப் பெரும் அளவில் வேலைக்கு உணவுத் திட்டம் தொடங்கப் போவதாக குறைந்தபட்சப் பொதுத் திட்டம் வாக்குறுதியளிக்கிறது; ஆனால், இது குறித்து அரசுத் தலைவர் உரையில் எதுவுமே கூறப்படவில்லை. புதிய பொருளாதாரக் கொள்கையால் ஒதுக்கப்பட்டிருந்த விவசாயத்துறை மற்றும் கிராமப்புறக் கடனை அடுத்த மூன்றாண்டுகளில் இரண்டு மடங்காக உயர்த்துவது என்று பொதுத் திட்டம் உறுதியளிக்கிறது. ஆனால், அரசுத் தலைவர் உரை விவசாயக் கடன் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கப்படும் என்று பொத்தாம் பொதுவாகக் கூறுகிறது.

அனைத்து ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளிகளிலும் மதிய சத்துணவுத் திட்டம் மத்திய அரசின் நிதியைக் கொண்டு தொடங்கப்படும் என்று குறைந்தபட்சப் பொதுத் திட்டம் வாக்குறுதியளிக்கிறது. ஆனால், அரசு தலைவர் உரையில் இத்திட்டம் படிப்படியாக அமலாக்கப்படும் என்று திட்டவட்டமான முறையின்படி நீர்த்துப் போகும் வகையில் கூறுகிறது.

குழந்தைகள் நலச்சேவை, சுகாதாரம் மற்றும் கல்விக்காக அரசின் நேரடிச் செலவு அதிகரிக்கப்படும் என்று பொதுத் திட்டம் வாக்குறுதி கொடுத்தாலும், வருமான வரியுடன் கல்விக்காக ஒரு சிறு அளவு கூடுதல் தீர்வை விதிக்கப்படுவது தவிர, இந்த மக்கள் நலத் திட்டங்களுக்கான வழிவகைகள் எதுவும் காணப்படவில்லை. மதிப்புக் கூட்டு வரியை உயர்த்துவது, தானே முன்வந்து கருப்பு பணக் கையிருப்பை அறிவித்து வரிகட்டி சலுகை பெறும் திட்டம், நிர்வாகத்தைச் சீரமைத்து கறாரான வரிவசூல் போன்ற நடவடிக்கைகள் மூலம் அரசு வருமானத்தைப் பெருக்க முடியும் என்று மன்மோகன் சிங்-சிதம்பரம் கும்பல் நம்புகிறது. அரசுடைமை வங்கிகள், அரசு (இன்சூரன்சு) காப்பீடு நிறுவனங்களிடம் உள்ள நிதியைக் கொண்டு கிராமப்புறக் கடன்வசதிகளுக்கு முதலீடு செய்வது என்றும் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. இவை எதுவும் அரசு மற்றும் கிராமப்புற நிதி - பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வாக அமையாதென்று கடந்தகால அனுபவங்கள் காட்டிவிட்டன. இவற்றோடு நிலச்சீர்த்திருத்தங்கள் செய்வது பிரச்சினைகளைத் தீர்த்துவிடும் என்று இல்லாத ஊருக்குப் போகாத வழியும் காட்டுகின்றன, போலி இடதுசாரிக் கட்சிகள்.



கோயம்புத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யக் காத்திருக்கும் வேலையில்லாத இளைஞர்கள். ''ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு ஒரு ஆண்டுக்கு 100 நாட்கள் வேலை உத்திரவாதம்'' என்பது குறைந்தபட்ச பொதுத் திட்டத்தின் வாக்குறுதி. ஆனால், அரசுத் தலைவர் உரை, இந்த உத்திரவாதம் கிராமப்புற ஏழைகளுக்கு மட்டும்தான் என வெட்டிக் குறுக்கி, நகர்ப்புறத்து ஏழைகளை ''அம்போ'' எனக் கைவிட்டுவிட்டது.

ஒருபுறம் மக்கள் நலத்திட்டங்கள் என்ற பெயரில் பல கவர்ச்சி அறிவிப்புகளைக் கொண்டிருக்கும் அதேசமயம், 6-8 சதவீத அளவு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தப் போவதாக குறைந்தபட்சப் பொதுத்திட்டம் கூறுகிறது. அந்நியக் கடன், நேரடி முதலீடு, நிறுவன முதலீடு மற்றும் வெளிநாடுகளில் வாழும் இந்தியர் முதலீடு இல்லாமல் இத்தகைய வளர்ச்சி விகிதம் சாத்தியமில்லை. உலகவங்கி, ஐ.எம்.எஃப் மற்றும் அந்நிய ஏகபோகங்களின் நிபந்தனை - நிர்பந்தங்களை ஏற்காமல் புதிய முதலீடு மற்றும் கடன்கள் தருவதற்கு அவர்கள் தயாராக இல்லை.

ஏற்கெனவே, பா.ஜ.க / தே.ஜ. கூட்டணி அரசு வீழ்ந்தவுடன், போலி இடதுசாரிகளின் ஆதரவுடன் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியேற்கிறது என்று தெரிந்தவுடன், திடீரென்று அந்நிய முதலீடுகளை விலக்கிக் கொண்டு, முதலில் 200, பிறகு 800 என்று பங்குச் சந்தைக் குறியீடுகளை வீழ்ச்சிடையச் செய்து கடும் நெருக்கடியை ஏற்படச் செய்தன, அந்நிய பங்குச் சந்தை நிறுவனங்கள். மன்மோகன் சிங் - சிதம்பரம் கும்பல் ஓடோடிப் போய் புதிய பொருளாதாரக் கொள்கை - சீர்திருத்தம் கைவிடப்படாது, மேலும் உறுதியாக அமலாக்கப்படும் என்று அந்நிய - உள்நாட்டுத் தரகு அதிகார முதலாளிகளுக்கு வாக்குறுதி தருகின்றனர்.

மக்கள் நலத் திட்டங்களை அமலாக்குவது என்றால் இந்தப் போக்குக்கு எதிராகச் செயல்பட்டாக வேண்டும். மேலும், வரி வசூலுக்கும், நாட்டின் மொத்த உற்பத்திக்கும் இடையிலான விகிதம் அதிகரித்தாக வேண்டும். கடந்த 13 ஆண்டுகளில் இது குறைந்துதான் வந்திருக்கிறது. மேலும் 2009-க்குள் வரவு - செலவு நிதிப் பற்றாக்குறையை அடியோடு இல்லாமல் செய்வதாக பொதுத்திட்டம் உறுதியளிக்கிறது. இப்படிச் செய்வதற்கு ஒன்று வரிவிதிப்பு - அரசு ஏகபோகங்களில் விலையேற்றம் மற்றும் கட்டண உயர்வு செய்ய வேண்டும்; இன்னொன்று வரி வசூலைக் கறார்படுத்த வேண்டும்.

அதாவது, ஒன்று, மக்கள் நல வளர்ச்சித் திட்டங்களைக் கைவிட வேண்டும், மக்கள் மீதான வரிச்சுமையை ஏற்ற வேண்டும் அல்லது உள்நாட்டு - அந்நிய ஏகபோகங்களுக்கான சலுகைகளைக் கைவிட்டு, அவர்கள் மீது வரி வசூலைத் திருப்பிவிட வேண்டும். இந்த அரசு எப்படிச் செயல்படும் என்பதை ஏற்கெனவே பெட்ரோலிய பொருட்களின் விலையேற்றம், மதிப்புக் கூட்டுவரி விதிப்பை அமலாக்குவது ஆகிய முடிவுகள் மூலம் கோடிட்டுக் காட்டி விட்டது.

பொருளாதாரப் பிரச்சினைகளில் மட்டுமல்ல, வேறு பல விவகாரங்களுக்கும் இதே கதிதான் நேர்ந்துள்ளது.

இந்து மதவாத சக்திகளை வீழ்த்தி, மதச் சார்பற்ற - மத நல்லிணக்க ஆட்சியை நிறுவுவதுதான் 2004 பொதுத் தேர்தல்களின் மூலம் மக்கள் அளித்துள்ள தீர்ப்பின் முக்கியக் கருத்து என்று ஐக்கிய முற்போக்கு முன்னணி மற்றும் போலி இடதுசாரிகள் கூறி வருகின்றனர். இதன் அடிப்படையிலேயே குறைந்தபட்சப் பொதுத் திட்டத்தின் முதல் அம்சமாக, ''மத வகுப்புவாதத்தை தீர்மானகரமாக எதிர்ப்பது; சமூக நல்லிணக்கத்தைப் பாதுகாத்து, பராமரித்து முன்னேற்றுவது'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆனால், இதைச் சாதிப்பதற்கான பருண்மையான வழிவகை எதுவும் காணப்படவில்லை. கல்வித் துறையில் புகுந்துள்ள காவிக் கறையை அகற்றப் போவதாக அடிக்கடி பேசப்படுகிறது. அயோத்தி விவகாரத்தில் உச்சநீதி மன்றத் தீர்ப்பின்படி நடப்பதாக வாக்குறுதி அளிக்கப்படுகிறது. ஆர்.எஸ்.எஸ். / பா.ஜ.க. அரசும் இப்படித்தான் சில சமயம் கூறி வந்தது. இந்த வாக்குறுதி, பிரச்சினையைக் கிடப்பில் போடுவதற்கான உறுதிமொழி தானேதவிர, வேறு ஒன்றுமில்லை.

பாபரி மசூதியை இடித்த குற்றவாளிகளைத் தண்டிப்பதற்கான முயற்சிகள் ஏதுமில்லை. மதவெறி - வகுப்புவாத குற்றவாளிகளைத் தண்டிக்கும் சிறப்புச் சட்டம் கொண்டு வரப் போவதாகக் கூறப்பட்டிருந்தும் அதற்கான முயற்சியும் இல்லை. குஜராத் மதவெறிப் படுகொலைகளுக்குக் காரணமான மோடி, இன்னமும் மதவெறி நெருப்பை உமிழும் தொகாடியா, தாக்கரே, சிங்கால், கிரிராஜ் கிஷோர் போன்றவர்களின் வாயடைக்க வழிவகை இல்லை.

ஆர்.எஸ்.எஸ். / பா.ஜ.க.-வின் மதவாதத்திற்கு அடுத்து எதிர்த்தரப்பு கடுமையாகச் சாடிப் பிரச்சாரம் செய்த விவகாரங்களில் முக்கியமானது ''பொடா'' சட்டத்தின் முறைகேடும், அதை உடனே நீக்குவதாக அளித்த வாக்குறுதியும் ஆகும். இந்த வாக்குறுதியை அமலாக்குவதில் இப்போது கருணாநிதி - வைகோ, போலி இடதுசாரிகள் உட்பட யாருமே அக்கறை காட்டவில்லை.

''பொடாவை அவசரப்பட்டு நீக்கிவிட மாட்டோம்'' என்று பதவியேற்றதும் புதிய போலீசு மந்திரி சிவராஜ் பட்டீல் அறிவித்தார். இதையே வேறு மாதிரியாகச் சொன்னார் சட்டமந்திரி பரத்வாஜ். அரசுத் தலைவர் உரையில் இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், நழுவிக் கொள்ளும் வகையிலேயே சம்பந்தப்பட்ட அமைச்சர்களும் அதிகாரிகளும் பேசுகின்றனர்.

''பொடா சட்டம் முற்றாக நீக்கப்படுமா, அல்லது அதை முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் வகையில் திருத்தம் செய்யப்படுமா'' என்கிற கேள்விக்கு சிவராஜ் பட்டீல் மழுப்பலாகவே பதில் கூறி வருகிறார். ''பொடா'' சட்டத்தை, பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. அரசுகளைப் போலவே, காங்கிரசும் முறைகேடாகப் பயன்படுத்தி வருகிறது; மகாராஷ்டிரத்தில் அப்பாவிகளைப் பிடித்து ''பொடா''வில் தள்ளி சித்திரவதை செய்து ஒருவரைக் கொன்றுவிட்டு, இருவரை சட்ட விரோதமாக அடைத்து வைத்துள்ளது. மத்திய மறுபரிசீலனைக் குழுவிடம் ஆவணங்கள் தர மறுத்து, ஜெயலலிதா அரசைவிடக் கொடூரமாக நடந்து கொள்கிறது.

இதையெல்லாம் கருணாநிதி - வைகோ முதல் போலி கம்யூனிஸ்டுகள் வரை யாருமே கண்டு கொள்ளவில்லை. மேலும் குஜராத்தில் பாசிச மோடி அரசு மாநில அளவில் ''பொடா''வுக்கு ஈடான சட்டமியற்றி, போலீசுடன் மோதல் என்கிற பெயரில் அப்பாவிகளைப் படுகொலை செய்து வருவதை மத்திய அரசு கண்டு ரசித்துக் கொண்டிருக்கிறது. காசுமீரில் அரசு - இராணுவ பயங்கரவாதம் தொடர்கிறது.

அமெரிக்க சார்பு அயலுறவுக் கொள்கை கைவிடப்பட்டு, சுயேச்சையான, பல மைய உலகக் கொள்கையைக் கடைப்பிடிக்கப் போவதாக ஐக்கிய முன்னணி கொள்கைத் திட்டம் கூறுகிறது. ஆனால், ரீகன் சாவுக்குப் போன வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங், ஈராக்குக்கு இந்திய இராணுவத்தை அனுப்புவதைப் பற்றி பரிசீலிப்பதாக வாக்குறுதி கொடுத்துவிட்டு வந்தார். இங்கே ''இடது சாரிகளின்'' எதிர்ப்புக் கிளம்பிய பிறகு மழுப்பினார். அமெரிக்காவின் ஈராக் ஆக்கிரமிப்புப் போரில் பா.ஜ.க./ ஆர்.எஸ்.எஸ். ஆட்சியின் கொள்கையையே, மறைமுக அமெரிக்க - இசுரேலிய ஆதரவு நிலையையே காங்கிரசு தலைமையிலான கூட்டணி அரசும் பின்பற்றும் என்பதையே இது காட்டுகிறது.

அயலுறவு அமைச்சராக நட்வர்சிங், பெட்ரோலிய அமைச்சராக மணிசங்கர அய்யர், விவசாய துறை ஆலோசகராக எம்.எஸ். சுவாமிநாதன், திட்டக் கமிசன் துணைத் தலைவராக அலுவாலியா, பாதுகாப்பு ஆலோசகராக ஜே.என். தீட்சித் ஆகியோரோடு சிவராஜ் பட்டீல், பிரணவ் முகர்ஜி, சிதம்பரம், பிரதமர் மன்மோகன்சிங் ஆகிய அனைவருமே பழம் பிற்போக்குக் கும்பலாகக் குழுமியுள்ள இந்த அரசிடம் முற்போக்குத் திட்டங்களையோ, செயல்பாடுகளையோ எதிர்பார்ப்பது முட்டாள்தனம். ஆனால், அதைத்தான் போலி இடதுசாரிகள் செய்கின்றனர்.

உலக வர்த்தகக் கழகத்தில் இருந்து வெளியேறுவது, உலக வங்கி - ஐ.எம்.எஃப் கட்டளைகளை நிராகரிப்பது, பொதுத்துறை நிறுவனங்களின் விற்பனையை அடியோடு நிறுத்துவது போன்றவைகளை போலி கம்யூனிஸ்களே முன்மொழியவில்லை. அதற்கு மாறாக உலக வர்த்தகக் கழகத்திடம் மறுபேச்சு வார்த்தைகள் நடத்துவது; உலக வங்கி - ஐ.எம்.எஃபுடன் மன்றாடி புதிய சலுகைகளைப் பெறுவது; இலாபம் தரும் பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்கு விற்பதில்லை, நட்டம் தரும் நிறுவனங்களை தனியாருக்கு விற்பது அல்லது மூடிவிடுவது என்பதுதான் இவர்களின் முன்மொழிவு.

அவ்வளவு ஏன், வேலைநிறுத்த உரிமையை சட்டபூர்வமாக்குவது என்பதைக்கூட குறைந்தபட்ச பொதுத்திட்டத்தில் சேர்க்கும்படி போலி கம்யூனிஸ்டுகள் நிர்பந்திக்கவோ, கோரவோ இல்லை. தும்பை விட்டு வாலைப் பிடிப்பதைப் போல, தொழிற்சங்கங்கள் மூலம் மத்திய அரசிடம் மனுப்போட்டு மன்றாடுவது என்ற நிலைக்கு இழிந்து போய்விட்டனர்.

தவிடு தின்னும் அரசனுக்கு முறம் பிடிக்கும் மந்திரிகளாகவே போலி கம்யூனிஸ்டுகள் செயல்படுகிறார்கள். இவர்களே இப்படியிருக்கும் போது, பா.ஜ.க./ஆர்.எஸ்.எஸ்-ஐப் போலவே பார்ப்பன - பனியா தரகு முதலாளிகள் - நிலப்பிரபுக்களின் கட்சியான காங்கிரசு வேறு எப்படி இருக்கும்?

● மாணிக்கவாசகம்

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## கலகத்தில் இறங்கிய பிரெஞ்சு தொழிலாளர்கள்

**பி**ரான்சு அரசின் முழுக் கட்டுப்பாட்டிலுள்ள மின் வாரியத் துறையை அந்நாட்டு அரசாங்கம் தனியார்மய மாக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறது. இதனை எதிர்த்து வேலை நிறுத்தத்தில் குதித்துள்ள மின்வாரியத் தொழி லாளர்கள் பிரெஞ்சு அரசாங்கத்திற்கு அதிர்ச்சியளிக்கும் அதிரடி நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளனர். பிரெஞ்சு அதிபரின் அதிகாரப்பூர்வ இல்லமான எலிஸி அரண்மனை, பாரிசு நகரில் உள்ள சர்வதேசப் புகழ் வாய்ந்த சுற்றுலாத் தலமான ஈபிள் கோபுரம், பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் மேட்டுக்குடியினரின் குடியிருப்புகளுக்குச் செல்லும் மின் சாரத்தைத் துண்டித்து, தொழிலாளர்கள் தங்களின் பலத்தை அரசாங்கத்திற்குக் காட்டினர். தனியார்மயத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை மட்டும் நடத்திக் கொண்டிராமல், இது போன்ற கலகங்களிலும் இறங்கினால்தான் நியாயம் கிடைக்கும்!

## செத்தவனெல்லாம் உத்தமனல்ல



**மு**ன்னாள் அமெரிக்க அதிபர் ரொனால்டு ரீகன் ஜூன் முதல் வாரம் இறந்த வுடனேயே, அவரை உலகில் சமாதானத்தைக் கொண்டு வந்த தேவதூத னைப் போல புகழ்ந்து தள்ளி, அமெரிக்கா உள் ளிட்ட பல்வேறு நாடுக ளைச் சேர்ந்த பிற்போக்கு பாசிசக் கும்பல்கள் இரங்கல் செய்திகளைப் பிதுக்கித் தள் ளின. அதேசமயம், ரீகனின் இறுதிச் சடங்குகள் நடந்த நாளன்று, அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகரில், மத் திய அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த உழைக்கும் மக்கள், ரீக னும், சி.ஐ.ஏ.வும் கூட்டுச் சேர்ந்து கொண்டு, குவாதிமாலா, நிகரகுவா, ஹோண்டுராஸ், எல்சல்வடார் நாடுகளில் நடத் திய பச்சைப் படுகொலைகளை நினைவுப்படுத்தி கண்டனப் பேரணியொன்றை நடத்தினர். ''ரீகன் ஒரு கொலைகாரன். ரீகன் உலக மக்களின் மரியாதைக்கு ஏற்றவன் அல்ல'' என முழக்கமிட்டு, அவர்கள் ரீகனின் போர்வெறியை அம்பலப் படுத்தினர்.



மேலாதிக்க போர் வெறியன் ரீகன்.

## இட ஒதுக்கீட்டின் எதிர்காலம்

**ம**ருத்துவம், பொறியியல் சார்ந்த சிறப்பு மேல்நிலைப் படிப்புகளுக்கு மாணவர்களைத் தேர்வு செய்யும் பொழுது, இட ஒதுக்கீட்டை கடைபிடிக் கக் கூடாது என ஏற்கெனவே உச்சநீதி மன்றம் கறாராகச் சொல்லிவிட்டது. இப் பொழுது மருத்துவம் சார்ந்த பட்ட மேற் படிப்புகளில் புறக்கடை வழியாக இட ஒதுக்கீட்டிற்கு வேட்டு வைக்கும் உத்தரவைப் போட்டுள்ளது, உச்சநீதி மன்றம். இதன்படி, ஆந்திரா, ஜம்மு - காசுமீர் மாநிலங்களைத் தவிர, பிற மாநிலங்கள் மருத்துவம் சார்ந்த பட்ட மேற்படிப்புகளில் உள்ள மொத்த இடங்களில், 50 சதவீத இடங்களை அகில இந்திய ஒதுக் கீட்டிற்கு வழங்கிட வேண்டும். அகில இந்திய ஒதுக்கீட்டில் தலித், பழங்குடியினர் மற்றும் பிற்படுத் தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படுவதில்லை.

## தீய உள்நோக்கம்

**அ**ரசு உதவி பெறும் கல்லூரிகளில் நடத்தப்பட்டு வரும் ஆங்கில இலக்கியம், தத்துவ ஞானம், இசை மற்றும் இந்தி யக் கலாச்சாரம் ஆகிய பட்டப் படிப்புகளை இந்தக் கல்வி யாண்டிலிருந்து மூடச் சொல்லி உத்தரவிட்டுள்ளது, தமிழக அரசு. ''அரசு உதவியுடன் நடத்தப்படும் உயிரியல், வேதியி யல், இயற்பியல், விலங்கியல் பட்டப்படிப்புகளையும் மூடி விடுவதற்கான தொடக்கமாக இந்த உத்தரவு அமையலாம்'' என ஆசிரியர் இயக்கங்கள் அச்சம் தெரிவித்துள்ளன. தனி யார் நடத்தும் கலை - அறிவியல் கல்லூரிகளில் ஆயிரக் கணக்கான இடங்கள் காலியாகக் கிடப்பதாகக் கல்வி வியா பாரிகள் புலம்பும் வேளையில், தமிழக அரசு இந்த உத்தர வைப் போட்டுள்ளது. மாணவர்களைத் தனியார் கல்லூரி களை நோக்கித் தள்ளும் தீய உள்நோக்கம் தான் இந்த உத்த ரவில் உள்ளது.

## அமெரிக்க கோயபல்சுகள்

''**அ**மெரிக்காவில் இருந்த உலக வர்த்தக மையத்தை விமானத்தைக் கொண்டு மோதித் தகர்த்த அல்-கொய்தா பயங்கரவாத அமைப்புக்கும், ஈராக்கிற்கும் தொடர்புண்டு'' என்பது ஈராக் மீது போர் தொடுக்க அமெரிக்கா எடுத்துப் போட்ட காரணங்களுள் ஒன்று. உலக வர்த்தக மையத்தாக் குதல் பற்றி விசாரித்து வரும் அமெரிக்காவின் தேசிய கமி சன், ''ஈராக்கிற்கும், அல்-கொய்தா அமைப்பிற்கும் இடையே தொடர்பு இருப்பதாகக் கூறப்பட்டதற்கு எந்த விதமான நம்பத்தகுந்த ஆதாரங்களும் கிடையாது'' எனத் தற்பொழுது அறிவித்துள்ளது. இதற்குப் பிறகும் ஜார்ஜ் புஷ் கும்பலை போர்க் குற்றவாளியாக அறிவிக்காமல், உலக நாடுகள் வேடிக்கை பார்ப்பதுதான் வெட்கக் கேடான விசயம்!

## அதிகார வர்க்கப் பெருச்சாளிகள்

**தி**ல்லி யூனியன் பிரதேசத்தை ஆளும் காங்கிரசு அரசு, ''யூனியன் பிரதேச அமைச்சர்கள் 5,000 ரூபாய் பெருமான மின்சாரத்தை இலவச மாகப் பெறலாம்'' என்ற சலுகையை அறி வித்துள்ளது. ''விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுவதை கொள்கை ரீதியாக ஏற்றுக் கொள்ள முடியாது'' என முழக்கம் போட்ட பிரதமர் மன்மோகன் சிங், இந்தச் சலுகையைப் பற்றி வாயைத் திறந்ததாகத் தெரியவில்லை. மேலும், தில்லி யூனியன் பிரதேச அமைச்சர்கள், ''தங்களுக்கு மைய அமைச்சர்கள் போல பயணச் சலுகை கொடுக்க வேண்டும்; அம்பாசிடர் காருக்குப் பதிலாக, ஒரு கோடி ரூபாய் பெருமான லக்சர் கார் வேண்டும்'' என்றும் கோரிக்கை வைத்தி ருக்கிறார்கள். அரசு கஜானா இப்படிதான் கொள்ளையடிக்கப்படுகிறது.

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42848/85
Regn.No.TN/PMG(CCR)/621/03-05



# இதுதான் இன்றைய இந்தியா

குளிரால் நடுங்கிய மயிலுக்குத் தனது சால்வையைப் போர்த்திவிட்டானாம் பேகன் என்ற வள்ளல். இரண்டு கால் பிராணிகளின் மீது கருணை காட்டுவதில் அந்த பேகனையும் விஞ்சி விட்டார், இந்திய அரசுத் தலைவர் அப்துல் கலாம்.

அரசுத் தலைவரின் மாளிகை தோட்டத்தில் புற்று நோயால் பாதிக்கப்பட்டு, செத்துக் கொண்டிருந்த (படத்திலுள்ள) இந்த மயிலைப் பார்த்த கலாம், அதை இராணுவ மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்து, அதன் உயிரைக் காப்பாற்ற உதவியிருக்கிறார்.

அரசுத் தலைவர் மாளிகையில் நூற்றுக்கணக்கான பணியாளர்கள் இருந்தபோதும், அவர்களால் கண்டு கொள்ளப்படாமல் இருந்த இந்த மயிலை, கலாம் தானே நேரடியாகப் பார்த்து, பரிதவித்துப் போய், மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்ததோடு, அந்த 'தேசிய'ப் பறவை உடல் நலம் தேறி வருவதையும் அன்றாடம் கவனித்து வருகிறாராம். ஒரு சாதாரண மயிலுக்கு ராஜ வைத்தியம் நடந்த இந்த நாட்டில், குடிமகனுக்கு கிடைக்கும் மருத்துவ வசதி எப்படி இருக்கிறது தெரியுமா?

அரசு மருத்துவமனைகளில் வெறி நாய்க்கடிக்கு மருந்தில்லை எனக் கூறி நாய்க்கடிபட்டவர்களைத் திருப்பி அனுப்புவதைக் கண்டித்து சென்னை - குரோம்பேட்டை அரசு மருத்துவ மனை முன் அப்பகுதி பொதுமக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்தான் இந்தப் படம். குரோம்பேட்டை அரசு மருத்துவமனையில் மட்டும் ஒரு நாளைக்கு சராசரியாக 100 நோயாளிகள் வெறி நாய்க்கடிக்கு சிகிச்சை அளிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படுவதாக ஆர்ப்பாட்டக்காரர்கள் கூறுகிறார்கள்.

வெறிநாய்க்கடி, கடிப்பட்டவரின் உயிரையே பறித்துவிடக் கூடிய கொடிய நோய். இதனால், அரசு மருத்துவமனைகளில் சிகிச்சையளிக்கப்படாமல் துரத்தப்படும் நோயாளிகள், இரண்டாயிரம், மூவாயிரம் கடன் பட்டாவது, தனியார் மருத்துவமனைகளுக்குச் சென்று நாய்க்கடிக்கு ஊசிப் போட்டுக் கொள்ள வேண்டியது அவசியமாகி விடுகிறது. இப்படி அரசு மருத்துவமனைகள், தனியார் மருத்துவமனைகளுக்கு நோயாளிகளைப் பிடித்து விடும் ஏஜெண்டுகளாக மாறிப் போய்விட்டதை அவலம் என்பதா? இல்லை, சதியென்பதா?

மருத்துவர் இல்லை, மருந்து இல்லை, படுக்கை வசதி இல்லை என அரசு மருத்துவமனைகளைக் காயடிப்பதன் மூலம்தான் மருத்துவ சேவையில் தனியார்மயம் ஊக்குவிக்கப் படுகிறது. அரசிடம் போதிய நிதி இல்லை என அதிகார வர்க்கம் பஞ்சப் பாட்டு பாடுவதெல்லாம் இந்தத் தனியார்மயத்துக்கு ஆதரவான நயவஞ்சகமான வாதங்கள்தான்.

அப்துல்கலாம், அரசுத் தலைவர் மாளிகை தோட்டத்தில் காலையில் நடைப்பயிற்சி செய்யும் பொழுது, அங்கு வளர்க்கப்படும் பிராணிகளின் உடல்நலம் பற்றி அக்கறையோடு விசாரிப்பாராம். வாய் பேசாத பிராணிகள் மீது இத்துணை கருணை காட்டும் கலாம், இந்தியாவெங்கும் உழைக்கும் மக்கள் மருத்துவ வசதிகள் கேட்டுப் போராடும்பொழுது கல்நெஞ்சுக்காரராகி விடுகிறார். "எல்லாவற்றையும் அரசே செய்ய வேண்டும் என எதிர்பார்க்காதீர்கள்" என்ற தனியார்மய உபதேசத்தை அவிழ்த்துவிடுகிறது, அவரது தலைமையில் உள்ள அரசு.



அதிகார வர்க்கத்துக்கும், அவர்கள் வீட்டுச் செல்லப் பிராணிகளுக்கும் ஐந்து நட்சத்திர மருத்துவ வசதி கிடைக்கும் இந்த நாட்டில், உழைக்கும் மக்களுக்குக் கிடைத்துவந்த "த/அ" மாத்திரைக்கும் தனியார்மயம் வேட்டு வைத்துவிட்டது. இந்த ஓர வஞ்சனையை நாம் ஒழித்துக் கட்டுவது எப்போது?

படிப்பகம்